கல்முனை NET
kalmunainet.com உண்மையின் முகம்
Parimanam
# பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்




இதழ்: 01 | சார்வரி வருடம் பங்குனி 14 (27.03.2021 சனிக்கிழமை) | பக்கங்கள்: 20 | விலை: 40/=

# தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுவது காலக்கட்டாயம்



**அரசியல் தீர்வுக்காக இதய சுத்தியுடன் போராட முன்வர வேண்டும்; ஜனா**

18 பக்கம்






# முஸ்லிம்களின் தேசப்பற்றில் பிற சமூகங்கள் சந்தேகம்!

**முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன்**



(சுஐப்)

ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த இலங்கை முஸ்லிம்களின் தேசப்பற்று, இன்று பிற சமூகங்களால் சந்தேகிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

18 பக்கம்

# தமிழ்ப் பிரதேச உள்ளூராட்சி சபைகள் புறக்கணிப்பு!

**காரைதீவு பிரதேசசபை தவிசாளர் ஜெயசிறில் கவலை**



18 பக்கம்




# 'பரிமாணம்' சிறக்க வாழ்த்துகள்



"உலக வரலாறுகள் அனைத்தும் பேனாவால் ஆவணப்படுத்தப்படுன்றன" என்னும் வார்த்தைகள் சிறப்பானவை அல்லவா.ஒரு சமூகத்தின் மேன்மை அதனுடைய படைப்பாற்றலாலும், ஆவணப்படுத்துதல் என்னும் செயலாலுமே மேலோங்கி நிற்கின்றன. ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டதன் விளைவு நமது மதத்தை மொழியை மறக்கும் இழி நிலைக்குச்

18 பக்கம்

# பிறரிடம் கையேந்தும் நிலை மாறவேண்டும்!



18 பக்கம்




# கால மாற்றத்திற்கேற்ப தகவமைப்பு அவசியம்



கடந்த ஐந்து வருடங்களாக கிழக்கு மாகாணத்திலிருந்து இணையத்தளமாகவும் வார மின்னிதழாகவும் வந்து கொண்டிருந்த கல்முனை நெற் இன்று 'பரிமாணம்' என்ற நாமத்தில் அச்சிதழாக வெளி வருகிறது. கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்திலும் அதன் கலை கலாசார அம்சங்களிலும் தனிக்கவனம் செலுத்தும் தன்மையினை

18 பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமோங்கி வாழ்த்தி மகிழ்ந்து...



மட்டக்களப்பு தமிழகம் நீண்டு பரந்து செறிந்து சிறப்புற்ற பெரும் பகுதி. இதில் அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்பு முழுமையாகவே பல சிறப்புத் தமிழ் கிராமங்கள் அம் மாவட்டத்திற்குள் அடங்கிப்போயின. இந்த வகையிலே கல்முனை என்ற பெருநகரம் தனக்குள் பல தமிழ்க் கிராமங்களை உள்வாங்கி தனித்துவமாக விளங்குகின்றது. கல்முனை நகரத்தில் பெரியநீலாவணை தொடக்கம் காரேறுமூதூர் (காரைதீவு) என்னும் கிராமம் வரை உள்ளடக்கிய பல தமிழ்க்கிராமங்கள் உள்ளடக்கிய கல்முனை என்னும் பெருநகரத்தை மத்திய இடமாகக் கொண்டு கல்முனை நெற் ஊடக குழுமத்தின் 'பரிமாணம்' பத்திரிகை பல காத்திரமான விடயங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருவதையிட்டு என் மனம் மகிழ்ந்து இன்புறுகின்றது.

இணையவழியாக முகநூல் பதிவுகளில் வந்த 'கல்முனை நெற்' தற்போது நாம் அனைவரும் படித்து பல விடயங்களை அறிந்து கொள்வதற்காக பத்திரிகை பரிமாணம் வடிவில் வெளிவருகின்றது. ஏனெனில் மட்டக்களப்பு தமிழகத்தில் எத்தனையோ பத்திரிகைகள் தோற்றம்பெற்று வளர்ச்சிப் பருவத்தில் கருகிப் போயின. அதற்கான காரணம் பொருளாதாரம் படைத்தவரிடம் மனமில்லாமல் போனது. இப்படி பல காரணம்.

ஆனால் ,'பரிமாணம்' எனும் காத்திரமிக்க பத்திரிகை விபுலமா முனிவரின் திருமுகத்தை பத்திரிகையின் முகப்பிலே காண்கின்றோம்.முத்தமிழ் வித்தகரின் அருள் நிறைந்த அத்திருமுகம் இப்பத்திரிகைக்கு காத்திரமான திருவருளை நல்கும்எனப் பிரார்த்திக்கின்றேன். கல்முனைப் பிரதேசத்தில் எத்தனையோ புலமை மிக்கவர்கள், கவிஞர்கள் கல்வியியலாளர்கள் வாழ்ந்து மறைந்தும் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகையகல்வியாளர்களின் சிந்தையிலும் , சிந்தனையிலும் தோன்றிய இப்பத்திரிகையின் எண்ணக்கரு தொடராக மக்களுக்கு பெறுமதி மிக்க விடயங்களை வாரிவழங்கும் கல்முனை நெற் ஊடகவலையமைப்பின் 'பரிமாணம்' எனும் காத்திரமான பத்திரிகை பல்முனைப்போடு வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகிறேன்.

**ஆச்சார்ய பண்டித,**
**அருட்கவியரசு,**
**விஸ்வப்பிரம்ம**
**ஸ்ரீ வை.இ.எஸ்.காந்தன் குருக்கள்.**

# பரிமாணம் சிறக்க வாழ்த்துக்கள்



கல்முனை நெற் இணையத்தை நான் பார்க்காத நாளில்லை. அத்துணை சிறப்பு வாய்ந்தது. அத்தகைய சிறப்பு வாய்ந்த அவ் ஊடகக் குழுமத்தினர் இன்று அம்பாறை மாவட்டத்தின் முதல் அச்சுப்பத்திரிகையை வெளியிடுவது என்பது பாராட்டுதலுக்குரியது.

இன்றைய இணைய உலகம், இவ்வுலகத்தை மட்டுமின்றி இதயங்களையும் எளிதில் இணைத்து விடுகின்றது. நவீன காலத்துக்கேற்ப அனைத்தும் மாறிக் கொண்டே வருகின்றது. இவ்வாறான மாற்றங்களுக்கு ஊடகங்களின் பங்கு மிக முக்கியமான ஒன்று.

அன்றாட நிகழ்வுகளை நாம் அறியவும், அவற்றின் உண்மைத் தன்மையைப் புரியவும் துணை நிற்பதோடு பத்திரிகைகள் எம்மை ஆளுகையும் செய்கின்றன. புதிய நுட்பங்களை உள்வாங்கி பரிமாணம் என்ற பத்திரிகையானது காலத்தைக் காட்டும் கண்ணாடியாகச் செயல்படும் என நம்புகின்றேன்.

புதிதாய் உதயமாகும் 'பரிமாணம்' தமிழ்பேசும்; மக்களின் மனம் நிறைந்த பத்திரிகையாகவும்இ எமது உரிமைக் குரலாகவும் நீதியோடு குரல் எழுப்பி தனித்துவத்தோடு திகழ வேண்டும் என வாழ்த்தி நல்லாசியுரை உவந்து அளிக்கின்றேன்.

**வண. ரண்முத்துகல சங்கரத்ன தேரர்**
**விகாராதிபதி சுபத்ராராமய**
**விகாரை கல்முனை**

# அம்பாறை ஊடக வளர்ச்சிப் போக்கின் புதியதொரு மைல்கல்



தமிழ் பேசும் உலகில் பல பத்திரிகைகள் தோன்றி மறைந்துள்ளன. காலத்தால் அழியாத பல பத்திரிகைகள் இன்றும் ஜனரஞ்சகமாக வாசகர்களுக்கு நேசிக்கப்பட்டு, வாசிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மக்களை சமூகமயப்படுத்துவதில் அச்சு ஊடகங்கள், பத்திரிகைகள் முக்கிய முகவராகத் தொழிற்பட்டு வருகின்ற சூழ்நிலையில் உலகமயமாக்களின் தாக்கத்தால் அச்சு ஊடகங்கள் இன்று இலத்திரனயல் ஊடகங்களுக்குள் விரும்பியோ, விரும்பாமலோ உள்வாங்கப்பட்டு வருகின்றன. இது அச்சு ஊடகத்தின் புதிய 'பரிமாணம்' என கல்விசார், சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

எனவே மேற்சொன்ன புதிய 'பரிமாணம்' என்ற சூழ்நிலை பத்திரிகையாக வெளிவந்துள்ள பரிமாணம் என்ற பத்திரிகை அம்பாறை மாவட்ட ஊடக வளர்ச்சிப் போக்கின் புதியதொரு மைல்கல்லாகக் கருதப்படல் வேண்டும்.

இந்த வெளியீடு தமிழ் பேசும் மக்களின் வரவேற்பைப் பெற வேண்டும் எனவும், நீடித்து நிலைத்து இப்பிராந்தியத்தில் பேசு பொருளாகத் திகழ வேண்டும் எனவும் இஸ்லாமிய சமயம் சார்பில் எனது ஆசியுரையை வழங்குகினறேன்.

மேற்படிப் 'பரிமாணம்' இலங்கைச் சமூகங்களுக்கு மத்தியில் சமய நல்லிணக்கம், முற்போக்கு சிந்தனை, நவீனத்துவ சிந்தனை, சமகால பொதுமக்களுடைய துறைசார் பிரச்சினைகள் என்பனவற்றுக்குத் தீர்வையும், வழிகாட்டலையும்வழங்க ஆசிக்கின்றேன்

**அஷ்ஷெய்ஹ். F.M.S.A . அன்ஸார்**
**மௌலானா (நளீமி) விரிவுரையாளர்**

# கல்முனை நெற் ஊடக குழுமத்தின் 'பரிமாணம்' வெற்றிபெற வாழ்த்துகின்றேன்



வாழ்வு என்பது அதன் வளர்ச்சியில்தான் வெளிப்படுகின்றது அதே போன்று கல்முனை நகரத்தின் வாழ்வு என்பது வளர்ச்சியடைந்துவருகின்றதென்பது கல்முனை நெற் ஊடகவலையமைப்பின் 'பரிமாணம்' பத்திரிகையின் வெளியீடு அதற்கு சாட்சியாக அமைந்துள்ளது.

படைப்பாற்றல் கொண்ட பலர் எம் மத்தியில் வாழ்கின்றார்கள் சிலர் இலைமறை காய்களாக வாழ்கின்றார்கள் அவர்களை அடையாளம் கண்டு அவர்களது படைப்பு திறன்களை தாங்கி இந்த ஊடகம் சமுதாயத்தில் அளப்பெரிய செயல் ஒன்றை செய்கின்றது.

சமூகத்தில் நடக்கும் செய்திகளை மனித குலத்திற்கு வேண்டிய படிப்பினைகளை பிரசுரிப்பதன் மூலம் அறியாமையில் வாழும் மக்கள் அறிவொளியை இந்த வெளிப்பாட்டின் மூலமாக பெறஇருக்கின்றார்கள்.

சாதாரண மக்களும் இதனைப் பெற்று வளர்ச்சி பெறக்கூடிய விதத்தில் சகல மக்களுக்கும் செல்லக்கூடிய வகையில் அச்சுவடிவில் வெளியிடுவது பாராட்டுக்குரியது.கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துக்கள்.

**அருட்பணி**
**அ.தேவதாசன்**

# தமிழோடு புறப்பட்ட ஊடகப்படையணி சிறக்கட்டும்



கல்முனை நெற் இன்று உலகளாவிய வலையமைப்பையும் வாசகர்களையும் கொண்டு தமிழ் கூறும் நல்லுலகம் கொண்டாடும் இணையம். அதன் அடுத்தகட்ட பாய்ச்சல் இது.இவர் போல யாரென்று ஊர் சொல்லவேண்டும் என்ற பாடல் வரிகளைப்போல் இப்போதே கல்முனை நெற் பெயரை ஊரென்ன சர்வதேசமே சொல்லத்தொடங்கி விட்டது.

அம்பாறை மாவட்ட தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் தேவைகள் அபிலாசைகளை வெளிப்படுத்திவரும் இவ்விணையம் சமூகசேவைகளையும் செய்துவருவதை நானறிவேன்.

பண்பட்ட நீதி நெறி வழுவாத வைரம் போன்ற படைப்பாளிகளையும் ஆலோசகர்களையும் தன்னகத்தே கொண்டு வெளிவர இருக்கும் இந்த கல்முனை நெட் 'பரிமாணம்' இதழுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எங்களை எப்போதும் பிரமிப்பில் ஆழ்த்தும் வண்ணம் புது முயற்சிகளை சமூகத்திற்காய் ஆரம்பித்து என்றும் முன்மாதிரி ஊடகவியலாளராக விளங்கும் கேதீஸ் அவர்களுக்கும் பிரதம ஆசிரியராக எங்கள் ஊடகவியலாளர்களின் சிகரமாக விளங்கும் மதிப்பிற்குரிய சகாதேவராஜா அவர்களுக்கும் ஆலோசகர் குணராஜா அவர்களுக்கும் ஏனைய அனுபவமும் உணர்வும் கொண்ட ஊடகவியலாளர் குழுவினருக்கும் நன்றியும் வாழ்த்துக்களும் .

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பது போல் ஊடகப்படையணி ஒன்று தமிழோடு புறப்படுகிறது. அவ்அணியை மனதாரவாழ்த்துகிறேன்.

**தவராசா கலையரசன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**அம்பாறை**

# கிழக்கு மண்ணின் குரலாக பரிமாணம் பரிணமிக்கட்டும்



கல்முனை நெற் ஊடக வலையமைப்பினால் அம்பாறை மாவட்டத்திற்கான முதலாவது அச்சுப் பிரதி 'பரிமாணம்' பத்திரிக்கையை வெளியிடுவது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

அந்த அடிப்படையில் இதற்கு எனது வாழ்த்துச் செய்தியினை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். முதலில் இந்நிறுவனத்திற்கும் இப்பாரிய முயற்சியினை மேற்கொண்டு இதனை கைங்கரியம் ஆக்குவதற்குகாரணமாக இருந்த அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்ட நெடிய போராட்ட வரலாற்றைக் கொண்ட எம் சமூகத்தின் குரலாக எப்போதும் ஊடகத்துறை இருந்துவந்திருக்கின்றது. எமது மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்வதிலும் எமது பிரச்சினைகளைஎடுத்தியம்புவதிலும் ஊடகம் காத்திரமான கனமான பங்கு வகித்து வந்துள்ளதை நாம் யாவரும் அறிவோம். அந்தவகையில் கல்முனை நெற் ஊடக நிறுவனமானது கடந்த காலங்களில் இணைய தளம் வாயிலாகவும் மின்இதழ் வாயிலாகவும் எமது மக்களின் அன்றாட அத்தியாவசிய பிரச்சினைகளை வெளி உலகத்திற்கு கொண்டுவந்ததை நான் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட எம் சமூகத்திற்கு ஊடக ரீதியான பங்களிப்பு எவ்வளவுகாத்திரமானவற்றை வழங்கியிருந்தது என்பதனை விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டிய ஒன்றாக உள்ளது. ஏனென்றால் நாட்டில் குறிப்பாக தமிழ் ஊடகங்கள் குறிப்பிட்ட ஒரு சாராரினால் ஆதிக்கம் செலுத்தப்படுவதன்காரணமாக தங்களுக்கு சார்பானவர்களின் மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடாக செயற்படுகின்ற அரசியல்பிரதிநிதிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் ஊதுகுழலாகதான் கடந்த காலங்களில் ஊடகங்கள் இருந்துவந்திருக்கின்றன.


கிழக்கு மாகாண தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகளையும் அரசியல் அபிலாசைகளையும் அவைபொது வெளிகளில் பேசத்தவறி இருக்கின்றன என்பதனை நான் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட தயங்கப்போவதில்லை. அதேநேரத்தில் போராட்ட காலத்தில் எமக்கிழைக்கப்பட்ட அநீதிகள் எமக்கு எதிராகமேற்கொள்ளப்பட்ட வஞ்சக தனமான தாக்குதல்கள் எமக்கு இழைக்கபட்ட துரோகங்களைக் கூடவெளியுலகிற்கு கொண்டுவருவதில் மேலாதிக்க மனப்பான்மை கொண்ட தமிழ் ஊடகங்கள் தவறிழைத்துள்ளன.

அந்த வகையில் கிழக்கு மண்ணிலிருந்து கிழக்கு மாகாண மக்களின் குரலாக ஒரு ஊடகம் முன்வந்திருப்பதுவரவேற்கத்தக்கதும் காலத்தின் தேவையாகவும் இருக்கின்றது. அந்த வகையில் கல்முனை நெற் ஊடகமானதுஊடக தர்மத்தினை பேணி எமது மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும்முன்னுரிமை கொடுத்து பக்கச்சார்பில்லாமல் நியாயமான முறையில் செயல்படும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

ஏனெனில் இந்த ஊடக தர்மம் மீறப்பட்டதனால் அதிகம் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள்தான் . எனவேஇன்றைய சூழலில் இது ஒரு காலத்தின் தேவையும் காலத்தின் கட்டாயமாகவும் உள்ளது. அந்த வகையில்கல்முனை நெற் ஊடகத்திற்கு மீண்டும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடுஎதிர்காலத்தில் மிகச் சிறந்த ஒரு ஊடக வலையமைப்பாக இது வளர்ச்சி பெற எல்லாம் வல்ல இறைவனைபிராத்திக்கின்றேன்.

**சிவநேசதுரை சந்திரகாந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**மட்டக்களப்பு**
**DCC Chairman Batticaloa**

# அம்பாறை தமிழ் ஊடக பரப்பில் 'பரிமாணம்' புதிய மைல்கல்லாகும்



கடந்த சில வருடங்களாக இணையவழி பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருந்த கல்முனை நெற் பத்திரிகை தற்போது அச்சிட்டு வெளிவரவுள்ளமையை இட்டு ஒரு ஊடகவியலாளராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் புளகாங்கிதம் அடைகிறேன். அம்பாறை மாவட்டத்தில் முதல் முறையாக தமிழ் மொழியிலான பத்திரிகை அச்சிட்டு வெளியிடப்படுவது இதுவே முதன் முறை எனும்போது நமது பிராந்தியத்தில் புதிய ஊடக மைல்கல்லினை கல்முனை நெற் ஊடகம் பதித்துள்ளமை சாதனையாகும்.

நான் ஊடகவியலாளனாக பத்திரிகை செய்தி கண்ணோட்டம் செய்த நாட்களில் யாழ் மண்ணிலிருந்து வெளிவரும் பல தமிழ் பத்திரிகைகளின் கண்ணோட்டங்களை செய்ய கிடைக்கும். அப்போதெல்லாம் நமது பிராந்தியத்திலிருந்து நமது மக்களின் குரலாக பத்திரிகையொன்று வெளிவருவதில்லையே என கவலையோடு சிந்திப்பேன். அந்தக் குறையினை கல்முனை நெற் இப்போது நிறைவு செய்திருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் கல்முனை நெற் 'பரிமாணம்' பத்திரிகை காத்திரமான செய்திகளோடும் தரமான கட்டுரைகளோடும் இன்னும் பல பயனுள்ள பக்கங்களை தாங்கியும் சிறப்பான பத்திரிகையாக வெளிவந்து வெகுவாக வளர்ச்சி அடைய எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**முஷரப் முதுநபீன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**அம்பாறை மாவட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைக் கடந்த புதிய நிலை!

**கருணாகரன்**

புலிகள் இல்லாத சூழலில் புலிகளை வைத்து அரசியல் செய்யும் போக்குத் தமிழ் தரப்பிலும் உண்டு. சிங்களத் தரப்பிலும் உண்டு. தமிழ்த் தரப்பில் இது புலி அபிமானம் என்ற வகையில் தொடர்கிறது.

இப்பொழுது தமிழ்த்தேசியம் என்ற அடையாளத்தோடு தமிழ் அரசியலை முன்னெடுக்கும் அனைவருக்கும் இந்தப் புலி அபிமானம் தேவை. அவர்களிடம் புலிப் பற்று இருக்கிறதோ இல்லையோ, அதைச் சொல்லித்தான் தங்கள் அரசியலை முன்னெடுக்க வேண்டியுள்ளது. சுமந்திரன், சம்மந்தன், விக்கினேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோர் புதிய திசையை நோக்கிப் பயணிக்க முடியும்.

ஆனால், அது இலகுவான ஒன்றல்ல. அந்தளவுக்கு புலி அபிமானம் என்பது ஒவ்வொருவருக்குள்ளும் தீவிரமாக ஊறிப்போயுள்ளது. அதுவும் மிக மிக நுண்ணிய உணர்வாக. ஆகவே உணர்வோடு இலகுவாக விளையாட முடியாது. அது எதிர்வளமாக மாறித் தவறான விளைவுகளை உண்டாக்கி விடும்.

இருந்தாலும் வேறு வழியில்லை. தமிழர்களின் இருப்பைத் தக்க வைக்க வேண்டுமாக இருந்தால் புலிகளை சகல நிலையிலும் விமர்சனம் செய்ய வேண்டும். மறுவாசிப்புச் செய்தே ஆக வேண்டும்.

இதற்குத் துணிவது யார்? அது எப்போது? இந்த விளக்கம் எத்தனை பேருக்குண்டு? அவர்கள் யார்? அவர்கள் எதிர்காலத்தில் என்ன செய்துகொள்ளப்போகிறார்கள்? இந்தக் கேள்விகள் மிக மிக முக்கியமானவை.

இதேவேளை புலிகளை மறுப்போருக்கும் புலிகள் தேவை. உதாரணம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அவர் புலிகளை உச்சரிக்காத நாளோ சந்தர்ப்பமோ இல்லை. இவ்வளவுக்கும் புலிகள் களத்திலிருந்து அகற்றப்பட்டு ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைகிறது. ஆனாலும் உன்னை நினைக்காத நாளில்லையே.. என்ற தமிழ்ச் சினிமாப் பாடல் வரிகளைப்போல புலிச் சிந்தனைக்கு ஆட்பட்டுப் போயிருக்கிறார்.

ஏறக்குறைய இதே நிலைமைதான் சிங்களத் தரப்பிலும்.

ஆட்சி அதிகாரத்தில் இருப்போராக இருந்தாலும் சரி, படைத்தரப்பாக இருந்தாலும் சரி, பௌத்த பீடங்களாக இருந்தாலும் சரி, அதற்குத் தக்கமாதிரிப் பொறுப்போடு செயற்பட வேண்டும் என்ற தோற்றப் பாட்டை உருவாக்குதல். அதாவது சிங்கள மக்களை புலி என்று கிலி கொள்ள வைப்பதாகும்.

இதன் வழியாக அரசின் குறைபாடுகளையும் அது உண்டாக்கும் நெருக்கடிகளையும் புலிகளின் பேரால்தான் என்று உணர வைத்தலும் கடந்து செல்ல முயற்சிப்பதுமாகும்.

மறுவளமாக புலிகளை ஒடுக்கினோம். வெற்றி கண்டோம் என்ற பெருமிதத்தின் மூலம் - வெற்றி வாகையின் மூலம் தம்மைப் பலப்படுத்திக் கொள்வது. இன்றைய ஜனாதிபதி கோட்டபாய தொடக்கம் முன்னாள் படைத் தளபதியான சரத் பொன்சேகா வரையில் இந்த உபாயத்தையே பின்பற்றுகிறார்கள். இதை - இந்தப் பிம்பத்தை வைத்தே அவர்கள் தங்கள் அரசியல் தளத்தை நிர்மாணித்தனர்.

இதேவேளை தமிழ்க் கட்சிகள், ஊடகங்களைப் பொறுத்தவரையில் இது புலிகள் மீள் எழுச்சியா? என்ற கேள்வியோடு அரசினாலும் படைத்தரப்பினாலும் அமுல் படுத்தப்படும் தமிழ் மக்கள் மீதான நெருக்கடியும் அது உண்டாக்கும் விளைவுகளும் அவற்றுக்கு அரசியல் பேசு பொருளாகி விடுகிறது.எனவே அரசின் புலிகள் தொடர்பான அணுகுமுறை என்பது அவற்றின் அரசியல் உயிர்வாழ்தலுக்குப் பேருதவி புரிகிறது. என்பதால் புலி என்ற சொல்லும் புலிகள் விட்டுச் சென்ற அரசியலும் அவற்றுக்கு இவை தீனியாகின்றன.

ஆனால் நிகழ்காலமும் எதிர்காலமும் இதை தவிர்க்கச் சொல்கிறது. அது புதிய யுகமொன்றுள் நுழையுமாறு கட்டளையிடுகிறது. எதிர்காலத்துக்கான திசையைக் கண்டு அதற்கான பாதையைத் திறக்கச் சொல்கிறது. உலகளாவிய அரசியற் போக்கு, உள்நாட்டு யதார்த்த நிலை, தமிழ் மக்களின் போராட்டம், அது எதிர்நோக்கியிருக்கும் சவால்கள், சிங்கள மக்களின் உளநிலை எனப் பலவற்றையும் பகுத்து ஆராயுமாறு வலியுறுத்துகிறது.

உண்மையாகவே புலிகளின் யுகம் முடிந்து விட்டது. அவர்களுடைய அரசியல் தோற்றுப் போனதோடு அது காலாவதியாகியே போனது. புலம்பெயர் தேசங்களில் அது மேலும் சீரழிவு நிலையில் உள்ளது. புலிகள் அமைப்பைச் சேர்ந்த மூத்த போராளிகள் அல்லது அடுத்த நிலைத் தலைவர்கள் வந்தாலும் - பொறுப்பெடுத்தாலும் புலிகள் முன்னெடுத்த புலிகளை ஆத்மபூர்வமாக நேசிப்பவர்களில்லை. இது பகிரங்கமாக உண்மை.



ஆனால், தவிர்க்க முடியாமல் தங்களுடைய அரசியலை முன்னெடுப்பதற்குப் புலிகளையும் பிரபாகரனையும் உச்சரிக்கிறார்கள். இல்லையென்றால் வாக்கு வங்கியைத் தக்க வைக்க முடியாது. வெற்றியைப் பெற முடியாது என்ற நிலை. இது தனியே இவர்களுக்கு மட்டுமான சோதனையோ இக்கட்டோ இல்லை. அரசாங்கத்தரப்போடு அல்லது சிங்களப் பெருங்கட்சிகளோடு இணைந்து நிற்கும் விஜயகலா மகேஸ்வரன், அங்கயன் இராமநாதன் போன்றோருக்கும் புலிகளின் பெயர் தேவை. புலிகளுடைய பாடல்கள் வேண்டும்.

ஆக மொத்தில் வடக்குக் கிழக்கின் தமிழ் அரசியல் இன்னும் புலிகளின் நிழலில்தான் நடக்கிறது. குறைந்த பட்சம் புலிகளை ஊறுகாயாக ஆக்கியாவது அரசியலை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது எதைக் காட்டுகிறது? புலிகளுக்கு இன்னும் தமிழ் மக்களிடம் உள்ள அபிமானத்தையும் செல்வாக்கையும். அடுத்தது புலிகளைக் கடந்து இவர்களால் தனித்துவமாக நிற்க முடியவில்லை என்பதை.

இதேநிலைதான் தமிழ் ஊடக வெளியிலும் நிகழ்கிறது. புலிகளைக் காட்சிப்படுத்துவது, புலிகளின் நினைவுகளை மையப்படுத்துவது, புலிகளின் அரசியல் நீட்சியையும் அவர்கள் உருவாக்கிய மரபு மற்றும் பண்பாட்டையும் தொடர முயற்சிப்பது என.

ஆக தமிழ் அரசியல் வெளியும் ஊடக வெளியும் புலி நினைவைத் தொடர்வதாகவே உள்ளது. ஆனால், யதார்த்த நிலையும் உண்மையும் வேறு.

அது புலிகளைக் கடந்த புதிய நிலையைத் தொடுக. அதைத் தொடர்க என.

ஆனால், என்னதான் சொன்னாலும் புலிகளின் யுகம் முடிந்து விட்டது. அதில் விமர்சனங்கள், சரி தவறுகள், வெற்றிகள், தோல்விகள், சிறப்புகள், சிறப்பின்மைகள் எனப் பலவும் இணைந்தும் கலந்தும் உள்ளன. அவை பகுத்துப் பார்க்க வேண்டியது. அப்படிப் பார்ப்பது அவசியம். அப்படிச் செய்யும் போதே தமிழ் அரசியலும் தமிழ் ஊடகங்களும் அதைக் கடந்து - இந்தத் தேக்கத்தைக் கடந்து



எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் சரி எல்லோருக்கும் புலிகள் ஒரு கச்சாப் பொருள்.

சிலர் புலிப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். அதாவது புலிகள் மீள எழுச்சியடைவதற்கான வாய்ப்புகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கதை விடுவார்கள். அல்லது புலம்பெயர் தேசங்களிலிருந்து புலிகளை மீள எழுச்சியடைவதற்கான காரியங்கள் நடக்கின்றன என்று சொல்வார்கள். இரண்டுமே பொய் என்று அவர்களுக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும். ஏன் உலகத்துக்கும் தெரியும்.

ஆனாலும் அரசுக்கும் இது தேவை. தமிழர்களுக்கும் இது தேவை. தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் இது வேணும். ஏனென்றால், சிங்கள மக்களை ஏமாற்றி ஒரு கொதி நிலையில் - அச்சச் சூழலுக்குள் வைத்திருப்பதற்கு இதை ஒரு உத்தியாக - உபாயமாகக் கடைப் பிடிக்கிறது அரசு.

அதோடு புலிகளின் பேரால் படைத் தரப்பை பலமான நிலையில் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வது. இதன் மூலமாக தமிழ்ப்பகுதிகளில் தன்னுடைய பிடியையும் கண்காணிப்பையும் பலமாக்கிக் கொள்வது. புலிகளை மனதிற் கொண்டே எதையும் செய்ய முடியும் என்று சிங்கள மக்களை ஏமாற்ற முற்படுதல். அதாவது, புலிகள் எந்த நேரத்திலும் எப்படியான வடிவத்தையும் எடுத்துக் கொள்வார்கள் என்பதால் அரசு



அரசியலை மேற்கொள்ள முடியாது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளும் இதை நன்றாக நிரூபித்துள்ளன. இதற்கு மேலும் இதுதான் நிலைமை.

ஆகவே புலிகளைத் தொடர்வதால், புலிவாலைப் பிடிப்பதால் யாருக்கும் எந்தப் பயனுமில்லை. அதை விட்டு நீங்குவதே இலங்கைக்கான புதிய வழி. புதிய அரசியலுக்கான திறவு கோல். அதாவது புலி நீக்கம் செய்யப்படுவது இலங்கைத்தீவின் அத்தனை திருப்புகளும் மிக மிக அவசியமான ஒன்று. தமிழ் - சிங்கள ஊடகங்களுக்கும்தான்.


Parimanam
# பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

வெளியீடு : கல்முனை நெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி,பாண்டிருப்பு, கல்முனை



தொ.பேசி: 0776965343, 0762933026 ,0773457915

kalmunainetgmail.com , ceditorsagagmail.com, kalmunainetpressgmail.com


# தடம் பதிக்கிறோம்

‘கல்முனை நெற் ஊடக வலையமைப்பு’ இன்றிலிருந்து புதிய பரிமாணம் பெற்று அச்சு ஊடகத் துறையினுள் கால் பதிக்கிறது.

இதுவரைகாலமும் இணைய வெளியில் தன்னை அடையாளப்படுத்திய கல்முனை நெற், வளர்ச்சியின் மற்றொரு படிக்கல்லாக ‘பரிமாணம்’ என்ற பெயரில் பத்திரிகை வெளியிடுகின்றது. இதன் மூலம், அம்பாறை மாவட்டத்தில் இருந்து வெளிவரும் முதலாவது தமிழ்ப் பத்திரிகை என்ற பெருமையையும் பெற்றுக் கொள்கிறது.

கல்முனை நெற் 24 மணி நேர இணைய செய்திகளும், மின் இதழும் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கமும், அதற்கு மக்கள் வழங்கிய பேராதரவும் சமூக விழிப்புணர்வில் ஊடகம் ஒன்றின் பொறுப்பை பறைசாற்றுகின்றது.

ஒரு ஜனநாயக சூழலில், ஊடகங்களே ஒரு சமூகத்தின் அளவுகோல் என்பார்கள்.

உண்மை.... மக்களை அரசியல் மயப்படுத்தி சமூகத்துக்கு ஏற்ப நெறிப்படுத்துவதில் ஊடகங்களின் வகிபாகம் மிகவும் காத்திரமானவை.

ஜனநாயகத்தின் காவலன் மட்டுமல்ல நான்காவது தூணாகவும் இருப்பது ஊடகங்கள்தான். இந்த உன்னத தார்மீக பொறுப்போடும் சமூக நோக்கோடும் களம் இறங்கும் ‘பரிமாணம்’ பத்திரிகை மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

மூத்த ஊடகவியலாளர் சகாதேவராஜாவை பிரதம ஆசிரியராகவும், ஊடகவியலாளர் புவிநேச ராஜா கேதீஸை முகாமைத்துவ ஆசிரியராகவும், ஊடகத் துறையில் மிக நீண்டகால அனுபவம் உள்ள குணராசா வை ஆலோசகராகவும் கொண்ட ஆசிரியர் குழாத்துடன் பக்கங்களின் பொறுப்பாசிரியர்களும் ‘பரிமாணம்’ படைப்பதில் முன்னின்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பத்திரிகையின் தாக்கமும் பங்களிப்பும் நிச்சயம் மக்கள் மத்தியில் அரசியல்,பொருளாதார, சமூக அபிவிருத்தியில் முக்கியப் பங்கு வகிக்கும் என்பது திண்ணம்.

இணையத்தளங்களின் வருகையும், சமூக வலைத்தளங்களின் அபரிமிதமான வளர்ச்சியும், விரல் நுனிகளுக்குள் உலகை சிக்க வைத்திருக்கிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது நிமிடத்துக்கு நிமிடம் மேம்பட்டு கொண்டே இருக்கிறது. அதாவது, உலகம் தன்னை எந்த நேரமும் புதுப்பித்துக் கொண்டே (update ) இருக்கிறது. இந்த நிலையில் ஊடகங்களின் வளர்ச்சி போக்கிலும் மாற்றங்களை எதிர்பார்ப்பது ஒன்றும் புதிய விடயமாக இருக்காது.

உலக மாற்றங்களுக்கேற்ப கல்முனை நெற் ஊடக வலையமைப்பும் அவ்வப் போது தன்னை

புதுப்பித்தவாறே வளர்ச்சி கண்டிருக்கிறது. ‘பரிமாணம்’ பத்திரிகை இதற்கு நல்லதொரு சான்றாகும்.

அந்தவகையில், பாரிய எதிர்பார்ப்புடன் ‘பரிமாணம்’ வெளிவருகிறது.முழுக்க முழுக்க சமூக நோக்கோடும் மக்கள் நலம் சார்ந்தும் களமிறங்கும் இந்தப் பத்திரிகை, ஊடக ஒழுக்க நெறியையும் ஊடக தர்மத்தையும் பேணி, நிச்சயம் மக்களின் குரலாக திகழும்.

பத்திரிகைகளை பிரபல்யப் படுத்துவதற்கும் விற்பனையை பெருக்கிக் கொள்வதற்கும் சில ஊடகங்கள் கையாளும் கேவலமான தந்திரங்கள் ஊடக தர்மத்துக்கு விரோதமானதாகவே இருக்கின்றன. இனங்களையும் மதங்களையும் மோதவிட்டு அதில் குளிர்காய்வதும் அதன் மூலம்

இலாபம் ஈட்ட முனைவதும் சில ஊடகங்களின் போக்காகவே இருக்கின்றன.சமூக வலைத்தளங்கள் கட்டுக்கடங்காமல் போய் விட்டது என்பதற்காக,பத்திரிகை தர்மத்தை நாம் விட்டுவிட முடியாது.

இதேபோல, தனிநபர்களை இலக்காக வைத்து செய்திகள் கட்டுரைகளை பிரசுரிப்பது தர்மமாகாது. ஒரு சில அச்சு ஊடகங்கள் நடந்து கொள்ளும் விதம், வருத்தம் அழிப்பது மட்டுமல்ல, சமூக கலாசார பண்புகளை சிதைத்து விடும் போல் தெரிகிறது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கு என்பது உலகையே திரும்பிப் பார்க்க வைத்த சமூக பேரவலம். ஒவ்வொரு பத்திரிகையும் இந்த வழக்கு விசாரணையை மிகவும் பரபரப்பாக பிரசுரித்து வந்தன. வழக்கு விசாரணையை அப்படியே பக்கம் பக்கமாக பத்திரிகைகள் பிரசுரித்தன. எவ்வித செம்மை ( editing ) ஆக்கமும் இல்லாமல் சில பத்திரிகைகள் அப்படியே வெளியிட்டன. இதன் மூலம், கொல்லப்பட்ட மாணவி வித்தியா, தொடர்ந்தும் ஊடகங்களில் காம கொடூரங்களுக்கு உட்படுத்தப்பட்டாள்.

இங்கே,செய்தியை செய்தியாக பிரசுரிக்க வேண்டும் என்பது உண்மை. ஆனால், அதனை செம்மை செய்து பிரசுரிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஆசிரியர் குழுவிடம்தான் இருக்கிறது.

சமூகப் பொறுப்பில்லாத தனமும், விற்பனைப் போட்டியும், ஊடக தர்மத்தையும் சிதைத்து சின்னாபின்னமாக்கி இருக்கிறதென் பது தெளிவாகிறது. இப்படியான கொடூரங்கள் தங்கள் தங்கள் குடும்பங்களில் நடந்திருந்தால் எப்படியான உணர்வை ஏற்படுத்தியிருக்கும் என்பதை ஒவ்வொருவரும் சுய பார்வைக்கு உட்படுத்த வேண்டிய விடயம் இது.

இதேபோல, தற்கொலைச் செய்திகளை ஒவ்வொரு ஊடகமும் பாய்ந்து, பாய்ந்து பிரசுரிக்கின்றன. பிரசுரமாகும் ஒவ்வொரு செய்தியும், மக்கள் மத்தியில் தற்கொலை உணர்வை விதைக்கிறது என்ற உளவியல் தாக்கத்தை குறிப்பிட்ட சில ஊடகங்கள் புரிந்து கொள்வதாக இல்லை.

இவைகளையெல்லாம் மேம்படுத்தி புத்துணர்வோடு ‘பரிமாணம்’ பத்திரிகை சமூகத்தில் கால் பதிக்கிறது என்பது நாம் உங்களுக்கு வழங்கும் நற்சான்றிதழ் ஆகும்.

ஒரு பிராந்திய ஊடகமாக நாம் உங்கள் மத்தியில் தடம் பதித்தாலும், தேசிய ஊடகங்களுக்கும் அப்பால் பிரவேசித்து மக்களின் குரலாக, நெஞ்சு உறுதியுடன் களத்தில் நிற்போம் என்பதை மகிழ்வுடன் கூறுகின்றோம்.


பிரதம ஆசிரியர் : வி.ரி.சகாதேவராஜா
முகாமைத்துவ ஆசிரியர் : பு.கேதீஸ்
ஆசிரியர் பீட ஆலோசகர் : க.குணராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசுவோர் பிரிந்துநின்றால் கிழக்கை இழக்க வேண்டிநேரிடும்!

**த.தே.கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.**



கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் சமூகம் பெரும்பான்மையாகஉள்ளது. காலாகாலமாக பிட்டும்தேங்காய்ப் பூவும்போல இணைந்திருந்த சமூகம் வருடக்கணக்கில் இருதரப்பாலும் நடந்த கசப்பான சம்பவங்களினால் பிரிந்துஇருந்தது. இன்று அவ்வுறவு மீண்டும் துளிர் விட்டுவருகிறது. இருசாராரும் ஒருமித்து அவ்வுறவைக் கட்டியெழுப்பவேண்டும். இல்லாவிடில் ஒரு பத்துவருடத்துள் இச்சமுகங்கள் கிழக்குமாகாணத்தை இழக்கவேண்டிவரும். இவ்வாறு கூறுகிறார் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் இராசபுத்திரன் சாணக்கியன் அவர்கள்.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும் பட்டிருப்புத்தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.மு.இராசமாணிக்கம் அவர்களின் பேரனான இரா. சாணக்கியன் 30வயதான ஒரு பட்டதாரி. மும்மொழித்தேர்ச்சிபெற்றவர். பாராளுமன்றத்தில் சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்து சபையை வழிநடாத்தும் குழுத்தலைவராக இந்த இளம்வயதில் நியமிக்கப்பட்டவர்.

அவுஸ்திரேலியாவில் சுமார் 3வருடகாலம் வாழ்ந்த அவர் இராசமாணிக்கம் மக்கள் மன்றத்தின் தலைவராகவிருந்து சமுகசேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துவருகிறார். திருமணபந்தத்தினுள் இன்னும் நுழையாத அவர் அண்மைய பொத்துவில் பொலிகண்டி பேரணியால் தாயகம் தொடக்கம் சர்வதேசம் பூராக பேசப்பட்ட ஓர் ஆளுமை.சிங்கள ஊடகங்களும் முக்கியத்துவம்கொடுக்கின்ற ஒரு தமிழ்இளம் தலைவர். கிழக்குமாகாண முதலமைச்சர் வேட்பாளராக பெயர்குறிப்பிடப்பட்டவர்.

விரிசலடைந்திருந்த தமிழமுஸ்லிம் உறவுக்கு ஒத்தணம் கொடுத்து உயிர்பூட்டி வருவதனால் முஸ்லிம்சகோதரர்களாலும் பெரிதாக விரும்பப்படும் ஒருவராகத்திகழ்கிறார்.

த.தே.கூட்டமைப்பிற்கு புதுஇரத்தம் பாய்ச்சி உயிர்ப்பிக்க வேண்டிய காலத்தின் தேவையான துணிவுள்ள இளம்அரசியல்வாதி சாணக்கியனின் புதுவரவு கட்சிக்குள்ளும் ஒரு புது உத்வேகத்தை அளித்துள்ளது என்றால் மிகைப்பட்டதல்ல.

அப்படிப்பட்ட பெருமையுடைய புதுவரவான சாதனையாளன் சாணக்கியன் அவர்களை கல்முனைநெற்றின் புதுவரவான 'பரிமாணம்' பத்திரிகைக்கு கன்னி நேர்காணலைக் காண்பதில் பெருமையடைகின்றோம்.

இதோ அவருடனான நேர்காணல்:

**? இம்முறை கிழக்குமாகாணசபைத்தேர்தலில் த.தே.கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியைப் பெற்று ஆட்சியமைக்குமென நம்புகிறீர்களா?**

ப: நம்பத்தான்வேண்டும். ஏனென்றால் 2008முதல் 2012 வரை ஒரு தமிழ் முதலமைச்சரும் 2012முதல் 2017வரை முஸ்லிம் முதலமைச்சரும் இருந்துள்ளார்கள். இன்று ஆட்சியாளர்களின் இலக்கு இங்கு சிங்கள முதலமைச்சரைக் கொண்டுவருவதே.அதற்கான காய்நகர்த்தல்களை அவர்கள் திட்டமிட்டு மேற்கொண்டுவருகின்றார்கள். உண்மையில் 3இனங்களும்உள்ள மாகாணம் என்ற அடிப்படையில்



அவர்கள் அப்படி நினைக்கின்றார்கள். ஆனால் கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழ்பேசும் மகன்ஒருவனே முதலமைச்சராக வரவேண்டும் என்பது எமது கருத்து. எனவே அந்தஒழுங்கின்படி இம்முறை தமிழ்மகன் ஒருவரே முதலமைச்சராகவரவேண்டும்.

**? இதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் உன்படுவார்கள் என்று நம்புகிறீர்களா?**

ப: எதுவும் பேசித்தீர்க்கப்படலாம். இதுபற்றி இஸ்லாமிய தரப்புடன் பேசச்சுவார்த்தைநடாத்தவேண்டும் அவர்களுடன் உடன்படவேண்டும்.முஸ்லிம் தலைமைகளுடன் அரசியல்வாதிகளுடன் பேசவேண்டும்.அவர்களும் உடன்படவேண்டும். இருசமுகங்களும் பேசி நல்லதொரு முடிவெடுத்தால்தான் கிழக்கில் தமிழ்பேசும் ஒருவர் முதலமைச்சராக இருக்கலாம். அப்படியெனின்மட்டுமே வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டை தொடர்ந்து வைத்திருக்கலாம்.

**? வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்தாயகம் சாத்தியப்படுமா?**

ப: ஏன் சாத்தியமில்லை? உலகின் எத்தகைய பிரச்சினையும் பேசித்தீர்க்கப்பட்டிருப்பது வரலாறு . பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படாத பிரச்சினையே இல்லையெனலாம். ஒன்றாயிருந்த அதுவும் ஒருமொழிபேசுகின்ற தமிழை தாய்மொழியாகக்கொண்ட இருசமுகங்கள் ஏன்பேசித்தீர்த்து ஒன்றாக வாழமுடியாது. எனவே இணைந்த வடக்குகிழக்கு சாத்தியமே.

**? சு.கட்சியில் அமைப்பாளராகவிருந்த தாங்கள் த.அ.கட்சிக்குள் வரக்காரணம் என்ன?**

ப: ஸ்ரீ.ல.சுக.ட்சிஅமைப்பாளராக மஹிந்தராஜபக்சவால் 2013இல் நியமிக்கப்பட்டேன். நான் அவுஸ்திரேலியாவில்இருந்து இலங்கைக்குவந்தபோது மஹிந்தஅரசு ஆட்சியிலிருந்தது. அவர் எமது மக்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைத்தரவேண்டும்.இந்தியாவுடனும் பேசிதீர்வைத்தருவார் எமது மாவட்டங்களை அபிவிருத்திசெய்வார் என்ற நம்பிக்கையில் இணைந்தேன்.அது ஒரு தவறான முடிவு என்பது பின்னர்தான் தெரியவந்தது. எனவே எனது கொள்கைக்குபொருத்தமில்லாத கட்சிஎன்பதைஉணர்ந்து அதிலிருந்துவிலகி எனது மக்களுடைய அபிலாசைகளை பூர்த்திசெய்யுமுகமாக எனது பாட்டனாடர் என பரம்பரை அங்கம்வகித்த த.அ.கட்சியில் இணைந்தேன்.

**? நீங்கள் த.அ.கட்சியை விட்டு விலகி அரசுடன் இணையலாம் என்ற கதையும் அடிபடுகின்றது. அதுபற்றி ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?**

> **சிறுபான்மையினம் சுதந்திரமாக வாழும் சூழல் இல்லை**

ப: என் இறுதிமூச்சு உள்ளவரை த.அ.கட்சியிலேயே இருப்பேன். அதைவிட்டு எந்தக்கட்சிக்கும் தாவும் எண்ணம் இல்லை. அன்று சு.கட்சியில் இணைந்தது உண்மை. அது தவறு என்பதை பின்னர் உணர்ந்தேன். எனவேதான் பொருந்தாத இடத்தைவிட்டு எனது பாட்டனாரின் தாய்க்கட்சியில் இணைந்தேன். அதைவிட்டு ஒருபோதும் விலகேன்.

**? அன்று பொங்குதமிழ் எழுகதமிழ் இன்று பி2பி. இந்த பி2பி பேரணியின் நாயகன் நீங்கள். தவிர்க்க முடியாத ஓர் ஆளுமை. அப்பேரணியின் தாக்கம் பற்றிக்கூறுங்கள்?**

ப: யுத்தம் மௌனிக்கப்பட்டு 12வருடங்கள்தாண்டிவிட்டன எனினும் தமிழ்மக்களது பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. எனவே எமது மக்களின் அபிலாசைகளைமுன்வைத்து ஜனநாயகரீதியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அது. உண்மையில் வெற்றியடைந்தது. சர்வதேசத்திற்கு எமது செய்தி சென்றிருக்கிறது. ஆனால் அதற்கு தடையுத்தரவு பிடியாணை. இதுவரை எனக்கு 10பொலிஸ்நிலையங்களிலிருந்து விசாரணை நடந்திருக்கிறது.4 நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 2வது வழக்கு 22ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் இருக்கிறது.நான் ஆஜராகவேண்டும்.

> **இறுதி மூச்சுவரை த.அ.கட்சியில் இருப்பேன்.**

அரசாங்கம் இவற்றினூடாக எங்களை அடக்கமுயற்சிக்கிறது.எதிர்காலத்தில் இப்படி பேரணி நடாத்தக்கூடாதென்பதே அவர்களது நோக்கம். நாம் இதற்கெல்லாம் பயப்படப்போவதில்லை. ஜனநாயகநாட்டிலுள்ள உரிமைகளைத்தான் கேட்கிறோம்.

**? புதிய தமிழ் மக்கள் பேரவையின் வரவு பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

ப. தமிழர்கள் ஐக்கியப்படவேண்டியது அவசியம். ஆனால் தனிநபர்களாக வெளியே சென்றோர் இன்று கட்சித்தலைவர்களாக வந்து இணையவருகிறார்கள். த.தே.கூட்டமைப்பு என்ற பெயருடன் இணைந்தால் நல்லது. வேறொருபெயரில் இணையவேண்டுமென்பதற்கு நான் உடன்பாடில்லை.

> **நான் சுதந்திரக் கட்சியில் இணைந்தது தவறான முடிவு**

**? தமிழ்முஸ்லிம் உறவில் புதியதொரு பரிணாமத்தை ஏற்படுத்திவருகிறீர்கள். அது பற்றிக்கூறுங்கள்?**

ப: இணைந்த வடகிழக்கு தமிழர்தாயகமென்றால் இருசமுகங்களும் இணைந்தே அது முன்னெடுக்கப்படவேண்டும்.காலாகாலமாக இருதரப்பாலும் ஏற்படுத்தப்பட்ட மனக்கசப்புகளை விடுவித்து இனியாவது ஒன்றுபட்டு வாழவேண்டும். அந்தஉறவை பலப்படுத்த வேண்டும்.இல்லாவிட்டால் ஒரு பத்துவருட காலத்துள் கிழக்கு பெரும்பான்மையினரின் கைக்குச்சென்றுவிடும். வடக்கைப்பொறுத்தவரை 100வருடங்கள் எடுக்கும். ஆனால் இணைந்திருந்தால் எப்போதும் தமிழ்பேசும் மக்களே அதிகமாகவிருப்பர். அப்போது வடக்கு கிழக்கு தாயகமாக மிளிரும்.

**? பிரச்சினை பொதுவானது எனின் போராட்டத்தின் அவசியமென்ன?**

ப: பொருளாதார பிரச்சினை என்பது பொதுவாக அனைத்து சமுகங்களுக்கும் மாவட்டங்களுமுள்ள பிரச்சினை. ஆனால் சிறுபான்மை மக்களுக்கான பிரச்சினை வேறு. இன்று இலங்கையில் சிறுபான்மையினம் சுதந்திரமாக வாழமுடியாத சூழல். ஆர்ப்பாட்டம் செய்யமுடியாத சூழல்.மரணித்தவர்களை நினைவுகூரக்கூட அனுமதியளிக்காத சூழல். ஜனநாயகப் போராட்டத்திற்குக்கூட தடைவிதிக்கும் நாடு. அரசியல்கைதிகள் காணாமல்ஆக்கப்பட்டோர் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்ட கைதிகள் பிரச்சினை.மலையகமக்களது 1000ருபா சம்பளப்பிரச்சினை . இஸ்லாமிய கடும்திவீரப்போக்கைக்கட்டுப்படுத்த கிழக்கிலே கடந்தகாலத்திலே அகற்றப்பட்ட இராணுவ முகாம்களை மீண்டும் அமைக்கவிருப்பதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார்.இவ்வாறான பிரச்சினைகளை தொடர்ந்து தருகிறார்கள். எனவேதான் நிரந்தரமான அரசியல்தீர்வைக் கோரிநிற்கிறோம்.

**? புதிய அரசியலமைப்பு நடைமுறைக்குவருமா?**

ப: புதிய அரசியலமைப்பை இந்த அரசாங்கம் உருவாக்குமா என்பது முதல் சந்தேகம்.அப்படிச்செய்தாலும் அதனை அமுல்படுத்துவார்களா? என்பது சந்தேகம்.இன்று அரசாங்கத்திற்குள் உள்ள பங்காளிக்கட்சிகள்கூட பிரிந்துநிற்கும் போக்கைக்காண்கிறோம். இந்நதநிலையில் புதியஅரசியல்யாப்பு என்பது முடியாதகாரியம். நாம் அதிகாரப்பரவலாக்கலுடன் கூடிய சமஸ்டிமுறையிலான ஆட்சியையே கட்சிரீதியில் கேட்டுள்ளோம். அது எவ்வாறு அமையுமென்று தெரியாது. சர்வதேசத்திற்காக இவ்யாப்பு உருவாக்கத்தை கூறியிருக்கலாம். கோட்டா வந்தால் என்ன மஹிந்த வந்தால் என்ன எமக்கான அரசியல் உரிமையை அரசியல்தீர்வைப்பெறும் அழுத்தத்தை நாட்டுக்குள்ளும் வெளியிலும் கொடுத்துக்கொண்டேயிருப்போம்.

> **முதலமைச்சராக தமிழ் மகன் வரவேண்டும்**



**? அண்மையில் இந்திய உயர்ஸ்தானிகரைச்சந்திந்திருந்தீர்கள். அவரிடம் பேசிய முக்கியவிடயங்கள் பற்றிக்கூறுவீர்களா?**

ப: வடகிழக்கு மற்றும் எமது மாவட்டம் சம்பந்தமான பல விடயங்கள் பிரச்சனைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. அதில் முக்கியமாக எமது காணி அபகரிப்பு தொல்பொருள் மற்றும் மகாவலி திட்டம் சம்பந்தமான பிரச்னைகள் சம்பந்தமாகவும் அத்துடன் எமக்கான ஆரம்ப புள்ளியாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையான அமுல்படுத்தி அதன்மூலம் அதிகார பரவலாக்கலை அமுல் படுத்தவேண்டும் எனவும் இதன் மூலம் இவ்வாறான காணிகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு நாமே தீர்வை பெற முடியும் என்பது தொடர்பாகவும் கோரிக்கை விடுத்தேன். அத்துடன் துறைமுகங்களை ல் மட்டக்களப்பு அம்பாறை மன்னார் மற்றும் காங்கேசன்துறை போன்ற இடங்களில் உருவாக்குவதன் மூலம் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் இங்குள்ள உள்ளூர் உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியினை அதிகரிக்கலாம் என்பதனையும் பற்றி எடுத்துக்கூறி இருந்தேன். அத்துடன் மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க அழுத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் எடுத்துக்கூறியிருந்தேன்.

> **தமிழ், முஸ்லிம் உறவு தவிர்க்க முடியாதது**

**? கே. த.தே.கூட்டமைப்பில் காலாகாலமாக மூத்தோர்கள் பெரிதாக இடம்பிடிப்பதும் இளையவர்களுக்கு இடம்கிடைப்பது சிரமம் என்று கூறுவார்கள். ஆனால் இப்போது அது மாற்றமடைந்துள்ளதைக்காணலாம். அந்தவகையில் முதன்முறையாக 29வயதில் பாராளுமன்ற உறுப்பினராகியுள்ளீர்கள். இளையவர்களுக்கு என்ன கூறவிளைகிறீர்கள்.**

> **புதிய அரசியல் யாப்பு சாத்தியமில்லை**

ப: த.தே.கூட்டமைப்பில் இரு தலைமுறைக்கு மேலாக எமது போராட்டம் தொடர்கிறது. அதை இன்னமும் நீடிக்கவிடக்கூடாது. எனவே இளையவர்கள் எமது அணியில் இணைந்து பயணிக்கவேண்டும். அரசியல் வேறு வாழ்க்கை வேறு அல்ல. ஆகவே அரசியலுக்குள் இளைஞர்கள் வருவதனூடாகவே ஜனநாயகம் கட்டியெழுப்பப்படும். அதற்காக ஒன்றிணையுங்கள்.

**நேர்கண்டவர்:**
**பிரதம ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை NET kalmunainet.com ஊடக வலையமைப்பின் கடந்துவந்த பாதை



கல்முனையின் நாமத்துடன் இப்பிரதேச மக்களின் குரலாகவும் இங்கு இடம்பெறும் நிகழ்வுகளை இலங்கைக்குள்ளும் உலகெல்லாம் பரவி வாழும் உறவுகள் அறியும்வகையிலும் கல்முனை நெற் ஊடக வலையமைப்பு ஆரம்பமாகியது. நவீன தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக இலத்திரனியல் இணையத்தள ஊடகமாக தனது செய்திச் சேவையை முதலில் ஆரம்பித்திருந்தது.

கல்முனை நெற் ஊடக வலையமைப்பை கடந்த ஐந்து வருடங்களின் முன்பு 2016 ஆம் வருடம் புவிநேசராஜா கேதீஸ் எனும் இளம் ஊடகவியலாளர் ஸ்தாபித்திருந்தார்.இந்த ஊடகவலையமைப்பு பத்தோடு பதினொன்றாக இல்லாமல் இணையத்தளத்தில் செய்திகளை தரவேற்றுவதோடு நின்றுவிடாது செய்திகளுக்கப்பால் சமூக முன்னேற்றம் சார்ந்த பல விடயங்களை செயற்படுத்த தொடங்கியது.

கல்முனை எனும் நாமத்துடன் இந்த ஊடகம் ஆரம்பித்தாலும் அதன் செய்திச்சேவையும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளும் அம்பாறை மாவட்ட மக்களுக்கு எவ்வாறு கல்முனை பொதுவானதோ அவ்



வாறே மாவட்ட ரீதியாகவும் , மாவட்டம் கடந்தும் தனது பணியினை முன்னெடுத்து வருகின்றது.

இதன் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அன்றில் இருந்து இன்றுவரை பக்கபலமாக இருக்கும் கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் இயக்குனர் சபையை உறுப்பினர்களை கூறலாம் ஆரம்பத்திலேயே இதன் ஸ்தாபகர் பலதுறை சார்ந்த சமூக அக்கறையுடையவர்களை அடையாளங்கண்டு, அனைவரையும் ஒருங்கிணைத்து கல்முனை நெற் ஊடக வலையமைப்புக்கான உயரிய சபையை உருவாக்கினார்.

இளங்கலைஞர்களை ஊக்கப்படுத்தும் பல நிகழ்வுகளையும் கல்முனை நெற் மிகவும் சிறப்பாக கடந்த காலத்தில் செய்துள்ளதுடன் பிரபல கவி





ஞர்களான சண்முகம் சிவலிங்கம், முகில்வண்ணன் போன்ற மூத்த இலக்கிய ஆளுமைகளை நினைவு கூறும் நிகழ்வுகளையும் நிகழ்த்தியிருந்தது.பேராசிரியர் எஸ்.மௌனகுரு அவர்களின் அரங்காற்றுகை நிகழ்வும் இதில் நடைபெற்றது.அது மட்டுமல்லாது முகில்வண்ணன், சசி.மகரிஷி போன்ற மூத்த இலக்கியவியலாளர்களின் நூல்களை வெளியிட்டும் அவர்களை மேலும் ஊக்கப்படுத்தியுமிருந்தது. ஜோயலின் "தேவதை" என்று குறுந்திரைப்பட இறுவெட்டு வெளியிட்டு நிகழ்வையும் செய்திருந்தது.அத்தோடு "வாழும் போதே வாழ்த்துவோம்" எனும் செயற்பாட்டையும் செய்துவருகின்றது.கல்முனை ஆதாரவைத்தியசாலையை உச்சம்தொடவைத்த வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி இரா.முரளீஸ்வரன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவைக்காக அவரது பிறந்தநாளில் பாராட்டிக்கௌரவித்தது. பிரபல எழுத்தாளர் மு.சடாட்சரன் அவர்களை நேர்காணல்செய்து இறுவெட்டாக இன்று வெளியிடுகிறது.




கொவிட் 19 ஆரம்ப காலத்தில் இப்பிரதேசத்தில் முதன்முதலாக தொடர்மாடிகளுக்கும் ஓரிரு பாடசாலைக்கும் கைகழுவும் தொகுதியை அமைத்து இலவசமாக வழங்கியிருந்தது. இதற்கு கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க கனடா கிளை உதவி செய்திருந்தனர். மேலும் நீலாவணை, காரைதீவு மாடிவீட்டுத்தொகுதிகளுக்கும், கல்முனை பொலிஸ்நிலையம் போன்ற இடங்களுக்கும் கைகழுவும் தொகுதியை அமைத்து இலவசமாக வழங்கியிருந்தது. இவ்வாறு இதன் சமூகசேவையும் முன்மாதிரியான செயற்பாடுகளும் பலரின் கவனத்தை ஈர்த்ததுடன் பலரை கல்முனைநெற் ஊடகத்தை தமது ஊடகமாக நேசிக்க வைத்துள்ளது. இன்றைய இந்த வளர்ச்சிப்படிக்கும் இதுவே பெரிய மூலதனமாகும்.

குறிப்பிட்ட வருடங்கள் இதன் ஸ்தாபகர் கேதீஸ் தனது உழைப்பில் இருந்து ஒரு பகுதியை இதற்காக செலவிட்டாலும், அதையும் தாண்டி உடனிருந்த இயக்குனர்சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் ஊக்கமும் சிறந்த ஆலோசனையும் மேலும் வளர்ச்சியடைய வைத்துள்ளது.

கல்முனை நெற் ஊடகத்திற்கான கலையகம் ஒன்றினை உருவாக்க வேண்டிய தேவையை உணர்ந்து, இப்பிரதேசத்தை சேர்ந்த புலம்பெயர் தேசங்களில் வாழும் உறவுகள் பலர் முன்வந்துள்ளமையையிட்டு அவர்களுக்கு நன்றி கூறுவதுடன் கல்முனை நெற் ஊடகம் பெருமைகொள்ள வேண்டியதுமாகும்.

இவ்வாறான வளர்ச்சிப்பாதையில் 2021 தைப்பொங்கல் தினத்தன்று (14) கல்முனை நெற் வாராந்த மின்னிதழ் ஒன்றை ஆரம்பித்திருந்தனர். அதன் வெளியீட்டுவிழா எமது சட்டஆலோசகர் சட்டத்தரணி என்.சிவரஞ்சித் அவர்களின் தம்பலவத்தை தென்னந்தோப்பில் சிறப்பாக இடம்பெற்றது.

மின்னிதழுக்கு கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் ஆரம்பகாலம் முதல் பயணிக்கும் இயக்குனர் சபை உறுப்பினர்களான ஊடகவியலாளர் வி.ரி.சகாதேவராஜா ,பிரதம ஆசிரியராகவும் கிழக்கு மண்ணில் இருந்து தினகரனின் முதலாவது பிரதம ஆசிரியராக பணியாற்றி, ஓய்வு பெற்றுள்ள மூத்த ஊடகவியலாளர் க.குணராசா ஆசிரிய பீட ஆலோசகராகவும் செயற்படும் அவர்களின் அர்ப்பணிப்பான உழைப்பும் ஒவ்வொரு பக்கங்களுக்குமான பொறுப்பாசிரியர்களின் ஒத்து



ழைப்பும் கல்முனை நெற் மின்னிதழ் அனைவரிடத்திலும் பெரு வரவேற்பை பெற்றள்ளது. பத்திரிகையின் தரமும் பலரை கவர்ந்துள்ளதுடன் கல்முனை நெற் மின்னிதழ் ஒரு பேசப்படும் இதழாகவும் இருந்து வருகின்றது. அதன் பரிணாம வளர்ச்சியாக "பரிமாணம்" எனும் அச்சுப்பத்திரிகை இன்று வெளியிடப்படுகிறது.

கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினர்களாக கா. சாந்திரலிங்கம், எஸ்.புனிதன், கா. சாந்தகுமார்.,வி. ரி. சகாதேவராஜா, சஞ்சீவிசிவகுமார் , சபா சபேசன், ப. சந்திரமோகன் ,பி. எஸ். புவிராஜா, வே. அரவிந்தன் ,க. குணராசா, சபா தயாபரன் ,கோ. பிரசாந்த், ஜெ. டேவிட் ,மோ. கபிலன், பரதன் கந்தசாமி ,இ.விஜயகுமாரன் , பரம்பிரேம், செ. சுரேஸ் திவாகராஜ், மற்றும் புலம் பெயர் தேசத்தின் உறவுப்பாலமாக கே.நிர்மலதாசன் ,



எம்.தேவமனோகரன், நோ. விஜயரெட்ணம் ,என்.நரேந்திரராஜா, அ.ரவி, பா. மேனன், க.பிரதீஸ் , க.முருகாநந்தம் ஆகியோர் உள்ளனர் மக்கள் வழங்கிய ஆதரவும் உந்துதலும் கல்முனை நெற் குழுமத்தின் உழைப்பும் இன்று அம்பாறை மாவட்டத்தில் ஒரு வரலாற்று நிகழ்வை காண்கிறது. அதாவது 'பரிமாணம்' எனும் அச்சு செய்திப்பத்திரிகையை வெளியிடுகின்றது. 'பரிமாணம்' 20பக்கங்களுடன் பல்வேறு தகவல்களைத்தாங்கி வெளிவருகிறது.

கிழக்கின் அடையாளங்களில் ஒன்றான சுவாமி விபுலாநந்தர் அவர்களின் ஜனன தினத்தில் பிரசவிக்கப்படும் இந்த பத்திரிகை அவர் அருளால் மேலும் மேலும் வளர்ந்து, கல்முனை நெற் ஊடகம் தனது பயணத்தை வெற்றிகரமாகத்தொடரும் என்று நம்புவோம்.



















வாழ்வியம் VAZHVIYAM Organization for Community Upliftment

கல்முனைநெற் ஊடக வலையமைப்பின் 'பரிமாணம்'
பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதற் தமிழ்ப்பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளார்!

இன்று அடிகளாரின் 129 ஆவது ஜனன தினம்

அகிலம் போற்றும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்து, இன்று 27 ஆம் திகதியுடன் 129வருடங்களாகின்றன.

அவர் மட்டக்களப்பின் தென்கோடியிலுள்ள காரைதீவு எனும் நெய்தலும் மருதமும் ஒருங்கே அமையப்பெற்ற பழந்தமிழ்க் கிராமத்தில் பிறந்தார்.சாமித்தம்பி கண்ணம்மை தம்பதியினர் தவமிருந்து 1892.03.27 இல் அடிகளாரைப் பெற்றெடுத்தனர். அப்பகுதியில்தான் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயமும் உள்ளது. காரைதீவின் காத்தல் தெய்வமாம் பத்தினித்தெய்வம் கண்ணகியைக் குலதெய்வமாகவும் ,அவ்வம்மையின் நாமத்தைத் தாங்கியவருமாகிய கண்ணம்மையின் வயிற்றில் முதலாவது உதித்தவர் அடிகளார்.

இன்றும் கண்ணகை அம்மனாலயத்தைப் பரிபாலித்து வருகின்ற விஜயராஜன் குடியார் என்று சொல்லப்படுகின்ற வம்வத்தைச் சேர்ந்தவர். அவர் அக்காலத்தின் விதானையாக [பொலியானை அக்கால பொலிஸ் தலைமைக்காரர்] இருந்தார்.

அடிகளார் இயற்பெயரான தம்பிப்பிள்ளை என்ற நாமத்தோடு பிறந்தார். அவர் நோய்வாய்ப்படவே கதிர்காமத்திற்குக் கொண்டு சென்று விரதம் அனுஷ்ட்டித்து நோய் குணமாகவே முருகப் பெருமானின் பெயரான 'மயில்வாகனன்' எனும் பெயரை அவருக்குப் பெற்றோர் சூட்டினர்.அதனால் அவரது பிறப்புப் பதிவில் தாமதமாயிற்று. அதனால் அவரது பிறப்பத்தாட்சிப்பத்திரம் மே மாதத்தில் தான் பதிவுவைக்கப்பட்டது. அதற்காக அவர் மேயில் பிறக்கவில்லையென்பதை கவனத்திற்கொள்க.

மட்டக்களப்பு மாநிலத்தில் வாராது வந்துதித்து உலகின் எட்டுத்திசைகளிலும் தமிழ் மொழியின் எழிலைப்பரப்பியவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள். முத்தமிழ் வித்தகரான அந்த முனிவரின் தமிழ்ப் பணிகள் பற்றி பலகோணங்களிலும் எழுதமுடியும்.

1898 இல் ஆறுவயதில் பள்ளியில் சேர்ந்தார். 1902இல் மெதடிஸ்ட் பள்ளியிலும், பின்பு மட்டக்களப்புக் கல்லூரியிலும், பிறகு ஆர்ச் மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.

1916இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்விலும் வெற்றி பெற்று, இலங்கையின் முதலாவது மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர் என்னும் பெருமையையும் பெற்றார். 1919ல் தனது சொந்த முயற்சியில் கற்று,இலண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.சி. தேர்விலும் சித்தியடைந்தார்.

1924ல் சென்னை சென்ற மயில்வாகனனார் இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து 'பிரபோதசைதன்யர்' என்னும் பிரமச்சரிய நாமம் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு 'சுவாமி விபுலானந்தர்' என்னும் பெயர் பெற்றார்.

1925ல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயமும், காரைதீவில் சாரதா மகளிர் கல்லூரியும் மற்றும் ஆதரவற்றோர் மாணவர் மாணவியர் இல்லங்களும் நிறுவி அளப்பரிய கல்வித் தொண்டு செய்தார்.

பின்பு யாழ்ப்பாணம் வைதீஸ்வர வித்தியாலயத்தையும், திருகோணமலை இந்துக் கல்லூரியையும் ,இராமகிருஷ்ண 'சங்கத்தோடு இணைத்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் சிறந்த கல்வித் தொண்டாற்றினார்.

1931ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் 1943ல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி புரிந்தார்.அதாகப்பட்டது அவர் உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியராக துலங்கினார்.

அத்தனை சிறப்போடு மொழியியல் விஞ்ஞானியாக, அறிவியல் கலைஞராக ஆத்மீக ஞானியாக ஆற்றல்மிகு பேராசிரியராக இயற்றமிழ் வல்லுனராக இசைத் தமிழ் ஆராய்சியாளராக நாடகத்தமிழ் நல்லாசிரியராக நமது தாயக மண்ணிலே



நற்பணிபுரிந்தார். தமிழுக்காக தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் இனத்திற்காக, இனத்தின் கல்வி மலர்ச்சிக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள்.

விபுலானந்த அடிகளார் மனிதாபிமானம் மிக்கவர். ஆதித் தமிழ்க் குடியின் அறவழியில் வந்தவர். பாதியில் முளைத்தெழுந்த சாதிக் கொடுமைதனைச் சாடித் தகர்த்தெறிந்த சாதனைத் தமிழன் அவர்.

அன்னார் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் ஒடுக்கப்பட்ட ஆதி திராவிடர் வாழ்ந்த திருவேட் களம் என்னும் சேரிக்குச் சென்று பாலர் படிக்கப் பள்ளிகள் அமைத்தார்.

முதியோர் கல்விக் கூடங்களும் ஏற்படுத்தினார். இதை அறிந்த உயர் சாதிப் பார்ப்பன்னர்கள் ,சுவாமி மீது ஆத்திரம் கொண்டனர். குடிப்பதற்குக் கூட நன்னீர் தர மறுத்தனர். இதனால் அடிகள் பலகாலம் உவர் நீரையே குடித்து வாழ்ந்தார்.

சைவத்தின் காவலர்கள் என்று எழுந்தவர்கள் சாதித்துவத்தின் காவலர்களாகத் திகழ்ந்தார்கள். மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை விதைத்தார்கள். மனித குலத்தின் மடமைத்தனத்தின் உச்சநிலையான வருணப் பாகுபாடுகளை வளர்த்தார்கள்.

ஆனால் சுவாமி விபுலானந்த அடிகளோ மக்கள் எல்லோரையும் சமமாக மதித்தார். சாதிப் பிரிவுகளை நீக்க உழைத்தார். எல்லோரும் சமமானவர்களே என்ற எண்ணத்தை மக்களிடையே விதைத்தார். கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று நினைத்தார். தீண்டத்தகாதவர் என்று தீயவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்கு வழிசமைத்தார்.

அடிகளாரின் நீண்ட நாளைய இசை ஆராய்ச்சிப் பணி 1947ல் 'யாழ் நூல்' என உருப்பெற்றது. கரந்தைத் தமிழச் சங்கத்தின் ஆதரவில் திருக்கொள்ளும் புதூர் ஆலயத்தில் 2006 -1947 21.06.1947 ஆகிய இரு தினங்களிலும் யாழ் நூல் அரங்கேற்ற விழா நடந்தேறியது.



தமிழர்களுக்குக் கல்வியூட்டுவதிலே தளராத அவரது முயற்சியினால் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் எண்ணற்ற தமிழ் அறிஞர்கள் தோன்றினார்கள். பேராசிரியர்களாக பண்டிதமணிகளாக புலவர்மணிகளாக உருவாகினார்கள். வாழையடி வாழையாகத் தமிழ் வளர்ச்சியின் எருவாகினார்கள். அதனால் சுவாமியவர்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மொழி வளர்ச்சியின் கருவாகினார்கள்.

சுவாமி அவர்கள் இந்தியாவில் இராமகிருஷ்ண மடத்தால் வெளியிடப்பட்ட 'வேதாந்த கேசரி' என்றும் ஆங்கிலப் பத்திரிகைக்கும் 'இராமகிருஷ்ண விஜயம்' என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார். அவரால் அவ்விதழ்களில் எழுதப்பட்ட கட்டுரைகளும் ஆசிரியர் தலையங்கங்களும் சமய உண்மைகளை விளக்குவனவாக மட்டுமன்றித் தமிழ் மொழி தமிழ்ப்பண்பாடு என்பவற்றைப் பரப்புவனவாகவும் அமைந்திருந்தன.

தமிழ் இலக்கியம் பாரதிக்கு முன்னால் பாரதிக்குப்பின்னால் என்று இன்றைக்கு வரையறை செய்யப்படுகின்றது. அந்த அளவுக்குத் தமிழ் இலக்கியத்திலே தாக்கத்தை ஏற்படுத்தியவர் மகாகவி பாரதியார். சுவாமி விபுலானந்தர் அவர்கள் பல்கலைக்கழக மட்டத்திற்குப் பாரதியைக் கொண்டு சென்றதால் பாரதியை யாராலும் அழிக்க முடியவில்லை. விபுலானந்த அடிகளின் தமிழ்ப் பணிகளிலே இமயமென உயர்ந்து நிற்பவற்றிலே அவர் பாரதியாரின் பாடல்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தமையும் ஒன்றாகும்.

சங்க இலக்கியங்களுக்கு நிகராக எண்ணப்படுகின்ற கங்கையில் விடுத்த ஓலை என்னும் அடிகளாரின் கவிதை மலரும் மற்றைய இனிமையான கவிதைகளும் எண்ணற்ற கட்டுரைகளும் இயற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணியினை இயம்பிக் கொண்டிருக்கின்றன.

விபுலானந்த அடிகளுடைய கல்லறையில் அவரே இயற்றிய இனிய கவிதை பொறிக்கப்பட்டுள்ளது மிகப் பொருத்தமாகும்.

இறைவனின் திருப்பாதங்களில் சூட்டப் படவேண்டிய மலர்கள் பற்றிப் பாடுகிறார் அடிகள்:

வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த
மலரெதுவோ?
வெள்ளைநிறப் புவுமல்ல வேறெந்த
மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார்
வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர்
மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த்
தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார்
வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரி
லில்லாக் கற்பகமோ
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த
மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல
பாரிலில்லாப் புவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார்
வேண்டுவது.

என்று 'ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று' என்ற தலைப்பில் அடிகளார் பாடிய பாடல்கள் அறிஞர் பெருமக்களால் வியந்து போற்றப்படுகின்றன.

அடிகள் மறைந்தாலும் அவர் முத்தமிழுக்கு ஆற்றிய பணிகள் என்றும் மறையாது.

விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை...



# ஜேம்ஸின் மலர்ச்சாலை

அப்போதெல்லாம் இரவுகள் துப்பாக்கிச் சத்தங்களுடனேயே கழிந்தன. இனந் தெரியாத ஏதோ ஒன்றைத் தொலைத்துவிட்ட மனப்பிராந்தியில் ஜடமாக உலாவரும் மனிதர்கள். பகலில் கூட சில தடவைகளில நிர்வாணமாக காணப்படும்; தெருக்கள். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பிரேதப் பெட்டிக்கான தேவை மனதளவில் நிறைந்தே இருந்தது. மரணங்கள் மலிவாகிப் போன பேரிடரை எதிர்கொள்ளும் அனர்த்த திட்டமிடுதல் என்பது இதுவாகத்தான் இருத்தல் வேண்டுமோ? அதற்கான குறியீடா இது?

உலகமயமாதலின் அதிதீவிர செயற்பாடுகளுள் ஒன்றாகவே இதனை கருத வேண்டியுள்ளது. பிரேதப் பெட்டிகளுக்கான தட்டுப்பாடுகள் மிக அதிகமாகவே இருந்தன என்பது உண்மையே. அதற்காக ஊரவர்கள் தங்கள் பெயர்களில் பிரேதப் பெட்டிகளை பதிவு செய்து வைத்துக் கொள்ளவா முடியும்.?

சாந்தனின் இளவயது மரணமானது நெஞ்சை ரணமாக்கி மறக்கமுடியாத அவல நினைவுகளை பதித்து விட்டுச் சென்றிருந்தது .நண்பர்கள் சாந்தனின் பிரேதத்தை பாடை கட்டியே தூக்கிச் சென்றனர்.அப்போது குண்டடி பட்டிருந்த சாந்தனின் தலையிலிருந்து ரத்தம் தண்ணீராய் வழிந்து தூக்கிச் சென்ற நண்பர்களின் தலையிலும் தோளிலும் பட்டுத் தெறித்தது. அவர்கள் சாந்தனின் நண்பர்களாயிருந்த போதும் வழிந்தது மனித ரத்தம் என்பது ஜீரணிக்கமுடியாதது என்ற நிதர்சனத்தை அவனது நண்பர்களின் 'சங்கடங்கள்' வெளிக்காட்டின.ஒரு பிரேதப் பெட்டிக்கான அவசியம் அந்தக் கணங்களில்தான் உணரப்பட்டது.

அன்று ஜேம்ஸ் தனது மலர்ச்சாலையை மூடிவிட்டு தனது காதல் மனைவியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் வெளியூருக்கு உல்லாசப் பயணம் போயிருந்தான். சாந்தனின் பிரேதஊர்வல வியாபாரம் கைதவறிப்போன கவலை அவனுக்கு. சாந்தனின் இழப்பைவிட இதுவே அவனுக்கு மிக முக்கியமாக இருந்தது.

ஜேம்ஸ் ஒரு பெரிய முதலாளியாக தன்னை மாற்றிக் கொண்டு வலம் வரத்தொடங்கியிருந்தான்.தொடர்ந்து கொண்டிருந்தன அநியாய இறப்புக்கள். அவனது காட்டில் மழை. கடையை மேலும் பெரிதாக்கிக் கொண்டான்.புதிதாக ஒரு கார்கூட வாங்கியிருந்தான். பிரேதப் பெட்டியுடன் சேர்த்து காரையும் வாடகைக்கு விடத தொடங்கினான்; தொடங்கினான். வியாபாரத்தின் நெளிவு சுளிவு அதன் நுணுக்கங்கள் இப்போது அவனுக்கு நிறையவே வசமாகியிருந்தன.பிரேதத்தை தூக்கிச் செல்பவர்களுக்கு சாந்தனின் பிரேத ஊர்வலத்தில் ஏற்பட்ட 'சங்கடங்கள்'இனி ஏற்படாது.

இப்போதெல்லாம் அவன் பக்கமாகவே வீசத் தொடங்கியிருக்கும் காற்றில் ஜேம்ஸ் நன்றாகவே தூற்றிக் கொள்கிறான்.அவன் ஒரு இறப்பிற்கு என்று வாங்கும் வாடகை உச்சத்தை தொட்டு நின்றது.பேரம் பேசல் அவனிடம் இல்லை.அவன் சொன்னதே வாடகைப்பணம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது.இந்த வியாபாரத்தில் தவிர்க்கவே முடியாத ஒரு தனிக்காட்டு ராஜாவாக ஜேம்ஸ் வலம் வந்து கொண்டிருந்தான் என்பதே யதார்த்தம்.அவனது இந்த மனோபாவம் ஊருக்குள் ஒருவித எதிர்ப்பலைகளை உருவாக்கியிருந்தன..அது பற்றி நன்கு அறிந்திருந்த போதிலும் அவன் கவலைப்படவேயில்லை.உயிருள்ள மனிதர்களைவிட உயிரற்ற உடல்களே அவனது மூலதனம். அந்த பிணங்களின் மீதான அவனது வியாபாரம் அமோகமாக களைகட்டிக் கொண்டிருந்தது.

ஜேம்ஸின் போக்கில் பாரிய மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. வியாபார இலாபம் என்ற ஒன்றிற்காக எதையும் செய்யலாம் என்ற நிலையில் அவன் இருந்தான். ஊருக்குள் இரவுவேளைகளில் கேட்கின்ற துப்பாக்கி வெடிச்சத்தங்கள். அதில் ஒரு ரவைகூட விணாகிவிடக் கூடாதென்பது அவனது ஆதங்கமாக இருந்தது.பட்ட குண்டு எது படாத குண்டு என்பதை அவை எழுப்புகின்ற சத்தத்தை வைத்தே கணக்கிட்டுச் சொல்லும் அந்த அபாரத் திறமை அவனிடமிருந்தது.

குண்டுகள் படாமல் செல்லுகின்ற சத்தங்களைக் கேட்டு அவனிடம் எரிச்சல் கிளம்பும்.'சே! என்ன மாதிரி சுடுறானுகள்' என்று அடித்த பியர் போதையிலும் அலுத்துக்கொள்வான் என்பது ஜேம்ஸின் கடையில் உதவியாளராக வேலைசெய்யும் அல்பேர்ட் மூலம் கசிந்திருந்த பேச்சு..பிரேதங்களின் மீதான வருமானம் அவனை இப்படியான ஒரு வக்கிரபுத்தி படைத்தவனாக மாற்றியிருந்தது.

அன்றைய இரவு மழைபெய்து ஓய்ந்திருந்த ஒரு கும்மிருட்டு. வழமைக்கு மாறாக துப்பாக்கிக் குண்டுகளின் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

இரண்டு பியர் போத்தல்களை முடித்திருந்த ஜேம்ஸ் அந்த போதையிலும் பட்ட குண்டு எது படாத குண்டு எது என்ற எண்ணிக்கையில் ஈடுபட்டிருந்தான்.நாளைக்கு நிச்சயம் வியாபாரம் களைகட்டத்தான் போகிறது என்ற நம்பிக்கை அவனுக்கு.



sabasabeshan@yahoo.com
சபா சபேஷன்

தனது கடை உதவியாளன் அல்பேர்ட்டுக்கு போன் பண்ணினான்.' அல்பேட்..நாளைக்கு காலையில நேரத்தோட வந்திரு.பிந்திராத. கடையில நிறைய வேலை இருக்கு' தனது கணிப்புகள் எப்போதுமே பொய்க்காது என்ற தன்மீதான 'பிஸ்நெஸ் மக்நெற்' நினைப்பில் அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் கடையை திறந்து விட வெண்டுமென்று நினைத்தவனாக நான்கரை மணிக்கே வீட்டை விட்டு மோட்டார் பைக்கில் புறப்படுகிறான் ஜேம்ஸ். அவனைப் பொறுத்தவரையில் அந்த அதிகாலை இருட்டு நேரப் பயணமானது தனக்கு ஆபத்தானது அல்ல என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது. காரணம் அவனது நண்பர்களாகிப் போயிருந்த 'அவர்கள்.' அவர்களுக்கு அவன் வழங்கிய 'உபசரிப்புக்கள்'. இரவு குடித்த பியரின் மயக்கம் வேறு.மோட்டார் பைக்கின் வேகம் அவனை அறியாமலேயே கூடிக் கொண்டு சென்றது மூன்று கனரக வாகனங்கள் அவனை எதிர்த்தாற்போல் வந்து கொண்டிருந்தன. மோட்டார் பைக் முன்னேறிக்கொண்டிருந்தது.'அவர்கள்' மீதிருந்த நட்பும் அவனது உபசரிப்பினால் ஏற்பட்ட நம்பிக்கையும் அந்தக் கணங்களின் இருண்மையை அவனால் புரிந்து கொள்ள முடியாமையை ஏற்படுத்தியிருந்தன.

பிரகாசமான வெளிச்சத்துடன் வந்த அந்த வாகனங்களின் 'லைற்றுகள்' அணைக்கப்பட்டு ஜேம்ஸின் மோட்டார் பைக்கின் லைற் வெளிச்சம் மட்டுமே தெரிகிறது.

திடீரென இடியோசைகளாய் கேட்கின்றன துப்பாக்கி வேட்டுக்கள்.அந்த பிரதேசமே அதிர்ந்து கொண்டிருந்தது ஜேம்ஸின் இலக்கணப்படி அத்தனையும் குறிதவறாமல் 'பட்ட' குண்டுகள்.

அதிகாலையின் மங்கிய வெளிச்சத்தில் ... ஜேம்ஸ் ரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்தான். தலையிலிருந்து; ரத்தம் தண்ணீராய் வழிந்தோடியபடி அவனது 'உயிரற்ற உடல்'.

ஜேம்ஸின் 'பிரேதத்தை' தூக்கிச் செல்பவர்களுக்கு அந்த 'சங்கடங்கள்' ஏற்படாமலிருக்க ஒரு பிரேதப்பெட்டி அவனுக்கு கிடைக்குமா என்பது அவனது உதவியாளனான அல்பேர்ட்டிற்கு மட்டுமே தெரியும்.

சபா.தயாபரன்

# என்றும் மறக்க முடியாத வேல்முருகு மாஸ்ரர்!



மக்கள் சேவகர் அமரர் வேல்முருகு படுகொலை செய்யப்பட்டு 33 ஆண்டுகளாகின்றன. அதனையொட்டி கல்முனைநெற் ஊடகவலையமைப்பினர் இன்று(27) அன்னாருக்கான நினைவேந்தல் நிகழ்வை நடாத்துவதையிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் அரசியலிலும் சமூகப்பணிகளிலும் ஆசிரியப்பணியிலும் என்றும் மறக்கமுடியாத ஒரு பன்முக ஆளுமைதான் அமரர் ஆறுமுகம் வேல்முருகு. வேல்முருகு மாஸ்ரர் என மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட இவரை அறியாதோர் யாரும் இருக்க வாய்ப்பில்லை . மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஆக 49வருடங்களே இப்பூவுகில் வாழ்ந்த அவரை உச்சரிக்காதவர்கள் இல்லை எனலாம்.

1936 ஆம் அண்டு மே மாதம் 14 ஆம் திகதி பாண்டிருப்பில் பிறந்து, கற்று இவளர்ந்து, ஆசிரியர் தொழிலும் பெற்று மாணவர்களுக்கு நல்ஆசானாய், மனைவி ஜீவரெத்தினத்திற்கு நல்ல கணவராய், பிள்ளைகள் தமிழ்செல்வி, தமிழ்வாணி ,தமிழினி ஆகியோருக்கு பாசமான தந்தையாய் மட்டும் இருக்காமல்,ஒட்டுமொத்த மக்களுக்கும் சமூக சேவகனாக தன்னை அர்ப்பணித்து வந்த அமரர் தன் இனத்திற்காகவே தனது உயிரையும் இழந்தார்.






1988 ஆம் அண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி இனம்தெரியாத ஆயுதக்குழுவால் துப்பாக்கிமுனையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். மக்களால் பெரிதும் அறியப்பட்ட, நேசிக்கப்பட்ட இவரின் இழப்பால் சொந்த ஊரான பாண்டிருப்பு மட்டுமல்ல அம்பாறை மாவட்டமே அப்போது சோபை இழந்து காணப்பட்டது.

இனத்திற்கு ஒரு அநீதி என்றால், அந்த இடத்திற்கே ஓடிச்சென்று உதவிகள் புரிவது இவரின் தனிப்பண்பு, இவரின் முற்போக்கு சிந்தனையும் சமூகப்பற்றும் இவரை இன்றும் மக்கள் மறவாமல் இருப்பதற்கு ஒரு காரணம்.

அமரர் வேல்முருகு நாமத்தில் பாண்டிருப்பு ஸ்ரீ வடபத்திர காளி கோவில் வளாகத்தில் வேல்முருகு அரங்கு ஒன்று உள்ளதுடன்,முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரனின் முயற்சியல் பாண்டிருப்பு கடற்கரை சூழலில் அன்னாரின் நாமத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவும் உள்ளது.

அறிஞர் அண்ணாவை மானசீகக்குருவாகக் கொண்டு தந்தை செல்வாவின் பாசறையில் அரசியலில் ஈடுபட்ட இவர், இளைஞனாக இருக்கும்போதே முற்போக்கு சிந்தனைவாதியாக சமூகத்தை அதிகம் நேசித்து செயற்பட்டார்.

அந்த காலப்பகுதியில் பாண்டிருப்பில் அண்ணா மன்றம் உருவாகியதில் பிரதான பங்குவகித்தவர் அத்துடன் கல்முனையில் உருவான பகுத்தறிவு மன்றத்தை உருவாக்கியதிலும் பிரதான பங்கு வகித்ததாகவும் இவரது சமூகப்பணிக்கும் இவரது வளர்ச்சிக்கும் இவரது மனைவி, பிள்ளைகள் பக்கபலமாக இருந்தார்கள் அவ்வாறே இவரின் சகோதரர் இராலிங்கம் இவருக்கு பெரிதும் உறுதுணையாக இருந்ததாக இவரோடு நெருங்கிப்பழகியவர்களில் ஒருவரான கு.ஏகாம்பரம் தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்.

1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலாவது மாவட்ட சபை உருவாகியது அக்காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் மாவட்ட அபிவிருத்திச்சபைக்கு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இவர் 1983 ஆம் ஆண்டு மத்திய முகாம் கிராமத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் தமிழர்களின் வீடுகள் எரியூட்டப்பட்டன அப்போது துணிச்சலுடன் சென்று மக்களை மீட்கும்பணியிலும்,நிவாரணப்பணியிலும் துரிதமாக செயற்பட்டார் அந்த வேளையில் படையினரால் கைது செய்யப்பட்டு அடி உதை என சித்திரவதை செய்யப்பட்டு தாடிக்கு தீ வைக்கப்பட்ட நிலையில் நடைப்பிணமாக சில தினங்களில் வீடு வந்து சேர்ந்ததாக அன்னாரின் மனைவி கலங்கி கண்களுடன் கூறினார்.இத்தனை சோதனைகள் இதுன்பங்கள் அச்சுறுத்தல்கள் இருந்தபோதும் மக்களுக்கான தனது பணியையும் ,அரசியல் பயணத்தையும் இடைவிடாது தொடர்ந்தார்.

தமிழ்மக்கள் கௌரவமாக உரிமையுடன் வாழவேண்டுமென்பதற்காக திருக்கோவிலிலிருந்து பெருந்தலைவர்கள் பங்கேற்ற பாதயாத்திரையை ஒழுங்கமைத்து சிறப்பாக நடாத்தியவர் அமரர் வேல்முருகு மாஸ்ரர் . அத்துடன் 1985களில் தமிழர் வாழ்வுரிமை வேண்டி பாண்டிருப்பு திரௌபதைஅம்மன் ஆலயமருகில் திரு.நாகேந்திரன் என்ற போராளி மேற்கொண்ட உண்ணாவிரதத்தையும் ஒழுங்கமைத்து செயற்படுத்திய வேல்முருகு மாஸ்ரர் தானும் அவருடன்இணைந்து உண்ணாவிரதத்திற்கு அணிசேர்த்தார்.

சமூகத்தை நேசித்து மக்களுக்காகவே இரவு, பகல்,நேரம் காலம் பாராது தனது வாழ்நாளை அர்ப்பணித்த அமரர் வேல்முருகு அவர்களின் இழப்பு பல்வேறு வழிகளில் ஒடுக்கப்படும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அமரர் வேல்முருகு தொடர்பான ஆங்கில கட்டுரை மேலைத்தேய இலத்திரனியல் நூலகத்தில் இன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முப்பத்தி மூன்று வருடங்கள் கடந்துவிட்டது இன்னும் பல காலம் நினைவுகூறப்பட வேண்டிய ஒரு மக்கள் சேவகன் அமரர் வேல்முருகு என்றால் மிகையல்ல.

**புவிநேசராஜா கேதீஸ்**

---

# கிழக்கின் முதல் கல்வித்துறைப் பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்



கிழக்கு பெற்றெடுத்த அறிஞப்பெருமக்களில் பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் தனித்துவமானவர். அவர் மட்டக்களப்பு மாநிலத்திலுள்ள மண்டூர் எனும் பழம்பெரும் தமிழ்ப்பதியில் 1926.07.17ஆம் திகதி பிறந்தவர்.

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் கல்விச்சிந்தனைகளை உள்வாங்கி கல்வித் தத்துவங்களை உருவாக்கியவர் பேராசிரியர் ப.சந்திரசேகரம்.


சுவாமி விபுலாநந்தர் உருவாக்கிய சிவானந்தா வித்தியாலயத்தில் கல்விகற்றவர். அதுவும் சுவாமியிடம் கல்விகற்ற பேறைப் பெற்றவர்.

கல்வியியல் துறையில் ஆய்வாளராகவும் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணிபுரிந்தவர். கல்வியியலை தமிழ்மொழி மூலம் கற்பித்த முன்னோடி. தமிழ்மொழி மூலம் உயர்நிலையான ஆய்வுகளை மேற்கொள்ள முடியுமென்பதை நிரூபணமாக்கியவர். தாய்மொழிக் கல்வி வாயிலாகவே புதிய கண்டுபிடிப்புக்களையும் அறிவுருவாக்கச் செயற்பாடுகளையும் மேற்கொண்டவர்.

கல்வித் தத்துவம் தொடர்பான விரிநிலை சிந்தனையும் ஆழமான தரிசனமும் கொண்டவர். இதனால் சில நூல்களையும் கட்டுரைகளையும் ஆக்கியவர். கல்வித் தத்துவத்தை உயர்நிலையில் எடுத்துரைப்பதற்குரிய வலுவான மொழிக்கட்டமைப்பைத் தமிழில் உருவாக்கியவர். கல்வியியல் சார்ந்த பல எண்ணக்கருக்களையும் தமிழில் உருவாக்கியவர். மேலைத்தேய கீழைத்தேய தத்துவ சிந்தனை மரபுகளுடன் ஊடாடி நமக்கான அறிகைமரபை கல்விமரபை மீள்கண்டுபிடிப்பதிலும் முனைப்புடன் செயற்பட்டவர். பேராசிரியர் சந்திரசேகரம் எழுதிய கல்வியியல் நூல்களாக 2012 இல் கல்வியியல் கல்வியியற் சிந்தனைகள் 2011 இல் கல்வியியல் கல்வித் தத்துவம் என்பவற்றைக்குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த சேர்.பொன். இராமநாதன் அவர்களின் சகோதரியின் மகளை திருமணம் புரிந்து மூன்று மகவுகளுக்கு தந்தையானவர்.இம்மண்ணுலகில் 61வருடங்கள் கல்விப்பணிபுரிந்து வாழ்வாங்கு வாழ்ந்து 1987.11.12ஆம் திகதி இறைபதமடைந்தார்.

இலங்கைத்திருநாட்டின் அறிவியல்புலத்தில் பேராசிரியர்களான சோ.சந்திரசேகரன் கைலாசபதி கா.சிவத்தம்பி சி.மௌனகுரு பொ.பாலசுந்தரம் நா.சுப்பிரமணியன் சபா.ஜெயராசா எம்.ஏ. நுஃமான் தை.தனராஜ் போன்றோரை அறிந்த அளவுக்கு இவரை நாம் பெரிதாக அறிந்திருக்கவில்லை.




பல்கலைக்கழக மட்டத்தில் அறிந்திருந்த அளவுக்கு பொதுமக்கள் மத்தியில் இவரை அதிகமாக அறிந்திருக்கவில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் இவருடன் பழகிய சக பேராசிரியர்கள் போதுமான அளவில் ஊடகங்களில் இவரைப்பற்றி அதிகம் எழுதாததும் இவரது படைப்புகளைத் தாங்கிய நூல்கள் அதிக அளவில் வெளிவராததும் என்று கருத வேண்டியுள்ளது.

பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் கல்வியியற் துறையில் முக்கியமான பங்களிப்பு செய்தவர்.. இவரது படைப்புகளைப் பார்க்கும்போது இவர் மேலைத்தேய கீழைத்தேயக் கல்வித்தத்துவங்களை உள்வாங்கி அவற்றிலிருந்து தான் உருவாக்கிய எண்ணங்களைத் தன் மாணவர்களுக்குப் போதித்தவர்.. இவரது சிந்தனைப்போக்கைப் பேராசிரியர் மௌனகுரு அவர்கள்' சந்திரசேகரனிஸம் என்பார்.

இவரைப்பற்றி இலங்கையின் நுண்கலைத் துறையின் முன்னோடியாகத்திகழும் பிரபல பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களிடம் வினவியபோது அவருடனான பலவிடயங்களை சுகானுபவங்களை அழகாகச்சொன்னார்.

1960களில் பாடசாலையில் தான் பயின்றுகொண்டிருந்தவேளையில் பேராதனைப்பல்கலைக்கழகத்திற்கு கூத்துக்கலையை மேடையேற்ற குழாத்துடன் சென்றிருந்தேன். அங்கு கல்வித்துறை விரிவுரையாளராகவிருந்த பேராசிரியர் ப.சந்திர சேகரம் எங்களை அன்போடு அழைத்து பேராதனைப்பூங்காவையும் காண்பித்து கூத்துக்லையை மேடையேற்ற உதவினார்.பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களது வேண்டுகோளையேற்றே நாம் அங்குசென்றிருந்தோம்.

பின்பு நான் 1971இல் 35ஆவதுவயதில் கொழும்பு பல்கலையில் கல்விடிப்ளோமா பயிலச்சென்றபோது அங்கு விரிவுரையாளராக எமக்குக்கற்பித்தார். அவரது கற்பித்தல் பாணியே தனி.. மேலைத்தேய கீழைத்தேய கல்விமுறைமைகளை கலந்து ஒப்பிட்டு அழகாகக்கற்பிப்பார்.பின்பு 1980களில் நான் கடமை நிமித்தம் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச்சென்றபோது அங்கு அவர் கல்வித்துறைத்தலைவராக பணியாற்றியிருந்தார். வாழ்க்கையில் என்னை வளர்த்த நால்வரை மறக்கமுடியாது. பேராசிரியர்களான சு.வித்தியானந்தன் கைலாசபதி சின்னத்தம்பி ப.சந்திரசேகரம் ஆகி யோரே அவர்கள். இவர்களிடத்தில் சமுகநீதி சமத்துவம் சாதிமதபேதமின்மை போன்ற நல்லபண்புகள் பொதிந்திருந்தன. நல்லகுணம் படைத்த அற்புதமான மனிதர் ப.சந்திரசேகரம்.இனிமையான தமிழ் பேசுவார்.

இவர் மார்க்சியக்கோட்பாடான பொதுவுடமைத்தத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் பேராதனையில் பணியாற்றுகின்றபோது கம்யுனிச தலைவர் மார்ட்டின் விக்ரமசிங்கவின் வீட்டில்தான் வாழ்ந்தார்.. அதேசமயம் இவரது கட்டுரைகளைப் படிக்கையில் இவர் முற்று முழுதாகப் பொருள்முதல்வாதச் சிந்தனையில் மூழ்கிய மார்க்சியவாதியாகவும் தெரியவில்லை. ஆன்மாவே அனைத்துக்கும் அடிப்படை என்னும் கருத்துமுதல்வாதச் சிந்தனை மிக்க ஒருவராகவே இவரை அறிய முடிகின்றது. என்றார்.

இவரது கட்டுரையான 'கல்வித்தத்துவமும் இலட்சியவாதமும்' கட்டுரை 'ஆசிரியம்' சஞ்சிகையில் அதன் 5556 ஆவது இதழில் வெளியாகியுள்ளது. கல்வியியல் நிலையிலே நீண்டு நெடிது தேடல்களை முன்னெடுத்த புலமையாளராக விளங்கியவர் பேராசிரியர் ப.சந்திரசேகரம். தேடலே அறிவு நோக்கிய நகர்ச்சியை ஏற்படுத்துகின்றது. உலக நிலவரங்களையும் சமூகத்தையும் புலக்காட்சி கொள்ளலுக்கும் அறிவின் இருப்புக்குமுள்ள உசாவல் அவரது கல்வியியல் எழுத்தாக்கங்களில் ஊடுருவி மேலெழுகின்றன.

அறிவின் அமைப்புக்கும் அதன் உள்ளடக்கத்துக்கும் அது கையளிக்கப்படும் முறைமைக்குமிடையேயுள்ள தொடர்புகள் கல்வியில் நோக்கிலே முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றை அடியொற்றியே வரன்முறையான தருக்க முறைமைகள் உருவாக்கம் பெற்றன. அவற்றின் முரண்பாடுகளும்முகிழ்த்தெழும் ஒன்றிணைந்த தொகுப்பும் பேராசிரியர் கட்டுரைகளின் நிறைபொருளாகவுள்ளன.

'அறிதல்' என்பது கருத்தாடல்களின் ஆழங்களை நோக்கிய உளச் செயல்முறையாகின்றது. கல்விச் செயல்முறையில் அது சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. அறிதல் வழியான தகவல்களும் அறிவின் நிலைக்குத்து எழுச்சியில் நிகழும் நிலை மாற்றங்களும் கட்டுரைகளில் விரவியும் பரவியும் நிற்கின்றன.

பேராசிரியரின் எழுத்தாக்கங்கள் தகவல்களின் திரட்டல்களாக மட்டும் அமையாது உயர்நிலை ஆய்வுகளின் பரிமாணங்களுள் ஒன்றாக அமையும் 'கருத்து வினைப்பாட்டுப் பகுப்பாய்வாகவும்' அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. தனித்துவமான செவ்வியல் எழுநடையுடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதக்கூடிய ஆற்றல் மிக்கவராக பேராசிரியர் விளங்கினார். இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை ஆங்கிலமொழி ஆய்விதழ்களிலும் அவர் எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றில் அவரின் தனித்துவமான எடுத்தியம்பல் முறை எழுபாய்ச்சல் கொண்டது.

இவரைப்பற்றிய நல்லதோர் அறிமுகத்தைப் பேராசிரியர் சி.மௌனகுருவின் 'பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் நினைவுகள்! கல்விப் புலத்தில் ஓர் இல்லறக் கல்வி முனிவர்' என்னும் கட்டுரை தருகின்றது.

இத்துணை ஆளுமையுள்ள, கீர்த்திபெற்ற பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் .அவர்களின் சகோதரரே மறைந்த பேராசிரியர் கோணேசபிள்ளை அவர்கள். மண்டூரின் சொத்துக்களான இவர்களை நினைவுகூர்வதில் பரிமாணம் திருப்தியடைகின்றது.

**விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுகநலம்

ப.சந்திரமோகன்
sanramohan1@gmail.com

# மரியாதையுடன் கூடிய மருத்துவம்

உலகலாவிய ரீதியில் தற்போது தரமான மற்றும் பாதுகாப்பான மருத்துவம் (Quality And Safety) பற்றிய எண்ணக்கரு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படத் தொடங்கியுள்ளது.

நோயாளர்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்கின்ற ஆற்றல் எல்லா வைத்தியசாலைகளுக்கும் எல்லா மருத்துவம் சார் உத்தியோகத்தர்களுக்கும் இருக்கின்றதா என்பது கேள்விக்குறி. முதலில் நோயாளர்களிடம் என்ன விதமான எதிர்பார்ப்புக்கள் இருக்கக்கூடும் என நாம் கணிக்க முடியும். இவை பெருமளவில் இருவகையான எதிர்பார்ப்புக்களாய் அமைந்துவிடுகின்றன.

முதலாவது மருத்துவம் சார்ந்த எதிர்பார்ப்புக்கள் (Medical Expectations) அடுத்தது மருத்துவம் சாராத எதிர்பார்ப்புக்கள் (NonMedical Expectations).

மருத்துவ சார்ந்த எதிர்பார்ப்புக்கள் பெரும்பாலும் பலரும் அறிந்தவை.

தன்னுடைய உடலிலுள்ள நோய் சரியான முறையில் கண்டறியப்பட வேண்டும் (Diagnosis) அதன் தீவிரம் (Complications) மட்டுப்படுத்தப்பட வேண்டும். சிகிச்சை முறைகள் (Treatment) தகுந்தவையாகவும் சிறந்த முறையிலும் இருக்க வேண்டும். மேலதிக ஆலோசனைகளுக்கு சரியான நேரத்தில் (Referral) தான் உட்படுத்தப்பட வேண்டும் என்பது நோயாளி ஒருவரின் மருத்துவம் சார்ந்த எதிர்பார்ப்பு. இவை பெரும்பாலும்; மருத்துவமனைகளில் கருத்தில் கொள்ளப்படுகின்ற விடயங்களாக இருக்கின்றன.

ஆனால் நோயாளி ஒருவரின் மருத்துவ சாராத எதிர்பாப்புக்கள் (NonMedical Expectations). எவ்வளவு தூரம் உற்றுநோக்கப்டுகின்றன அல்லது பூர்த்திசெயப்படுகின்றன என்பதே உலகளாவிய மருத்துவமனைகளில் குறி;ப்பாக தெற்காசிய நாடுகளில் உள்ள பாரியதொரு பிரச்சினை.

முதலாவதாக நோயாளி ஒருவர் சிகிச்சைக்கு வரும்பொழுது தன்னுடைய மரியாதை (Dignity) காப்பாற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றார்.

உடனடி சிகிச்சை என்பதை விட (Prompt treatment) உடனடி கவனிப்பு (prompt attention) தனக்கு கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

நோயாளர்களின் அந்தரங்கம்(Privacy) பாதுகாக்கப்படுவதென்பது இன்னொரு முக்கிய விடயம் மருத்துவமனை விடுதிகளில் மருத்துவர்களின் விடுதி தரிசிப்புகளின் போது (Ward Rounds) தான் முடிந்தளவு மறைப்புக்களிடப்பட்ட ஒரு பகுதியில் பரிசோதனை செய்யப்படுவதையே ஒரு நோயாளி விரும்புவார்.

அதேபோல தன் உடல் நலம் பற்றிய தகவல்கள் பற்றிய இரகசியம் (Confidentiality) பேணப்படல் வேண்டும் என்பதும் அவருடைய எதிர்பார்ப்பாக இருக்கும் பெரும்பாலான வேளைகளில் மற்ற நோயாளர்;கள் முன்பு தான் குறிப்பிட்ட நோயால் பீடிக்கப்பட்டவர் என குறிப்பிடுவதை எந்த நோயாளியும் விரும்புவதில்லை.

இரகசியம் மீறப்படல் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டது என்ற போதிலும் அது பரவலாக மீறப்படுவதை கட்டுப்படுத்துவது சவாலுக்குரிய விடயமாகவே தொடர்ந்து வருகிறது.



நோயாளி ஒருவர் தனக்குரிய சிகிச்சை முறையை தேர்ந்தெடுக்கும் உரிமை (Autonomy) தனக்கு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்.

நோயாளர்களுடனான தொடர்பாடல் (Public Relationship Communication) எவ்வாறு அமைய வேண்டும் என்பது முக்கியமானது.நோயாளரின் வயதிற்கு மரியாதை கொடுத்தல், அவர்களை விளிக்கும் முறை, அவர்களுக்கு சரியான முறையில் இருக்கையில் அமரச் செய்தல், அவர்களின் நோய் நிலமைகளை அக்கறையுடன் கேட்டல், நோய் பற்றிய தீவிர நிலைமையை சரியான முறையில் வெளிப்படுத்தல் அல்லது நோயாளியின் இறப்பை(Breaking the bad news) சரியான முறையில் கூறுதல் என்பன முக்கியமான செயல்முறைகளாகும். இந்த செயற்பாடுகளில் ஏற்படுகின்ற குறைபாடுகள், முரண்பாடுகளை நோயாளருக்கும், மருத்துவ ஊழியர்களுக்கும் இடையே தோற்றுவிப்பதுடன் நோயாளர்களுக்கு திருப்தியற்ற தன்மையையும் ஏற்படுத்துகின்றது.

இதுவே பிறகு சட்ட நடவடிக்கைகள், ஊடகங்கள் மூலமாக மருத்துவமனை மீதான தாக்குதல்கள்,மருத்துவமனையில் பொதுமக்களுக்கிடையிலான நம்பிக்கை இழப்பு என பல்வேறுபட்ட எதிர்மறை விளைவுகளுக்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

பொது மக்கள் தொடர்பாடல் சிறப்பாக உள்ள மருத்துவமனைகள் மிகச்சிறந்த நோயாளர்கள் திருப்தி நிலையை காட்டுகின்றன.

தெற்காசிய நாடுகளில் மருத்துவர்கள் தாதியர்கள் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக நோயாளர்களை கவனிக்கும் இடங்களில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுகின்றன.

ஒரு மருத்துவர் வெளிநோயாளர் பிரிவில் (OPD) ஒரு மணித்தியாலத்தில் குறைந்தது 20 நோயாளர்களை பார்வையிடும் போது அங்கே நோயாளர்கள் மரியாதையுடன் அணுகவோ அல்லது நோயாளரின் நோய் நிலைமைகளை கவனமாக கேட்டறியவோ அல்லது நோய் பற்றி சுகாதார அறிவை வழங்கவோ சாத்தியமில்லாமல் போகும்.

இந்த சந்தர்ப்பங்களில் நோயாளி மருத்துவர் இருவரும் தங்கள் பிரச்சினைகளை மற்றையவருக்கு தெரிவிக்க முடியாத புள்ளியில் திருப்தியற்ற விரக்கி மனநிலைக்கு சென்று விடுகின்றனர்.

உதாரணமாக நோயாளர் விடுதிகளில், வைத்தியர் குறைந்தது 40 நோயாளிகளை விடுதித்தரிசிப்பின்போது (ward rounds) பார்வையிட்டு நோய் நிலைமைகளுக்கு தீர்மானங்கள் அல்லது சிகிச்சை முறைகளை தீர்மானித்துவிட்டு அந்த பிரிவுகளுக்குரிய சாய்சாலை (Clinic patients) நோயாளர்களை பார்க்கச் செல்ல வேண்டும் அல்லது சத்திரசிகிச்சை செய்ய செல்ல வேண்டும். இப்போது மருத்துவர் விடுதியை விட்டு குறுகிய நேரத்தில் சென்றுவிட்டார் என்று நோயாளி குறைபடத் தொடங்குவர். சாய்சாலையில் அல்லது சத்திரசிகிச்சை கூடத்தில் (operation theater) மருத்துவர்கள் தாமதமாக வருகின்றனர் எனக் குறைபடத் தொடங்குவர்

அதே வேளை தமது வேலைத்தள நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் பற்றி; மருத்துவர்களும் தாதியர்களும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் குறைபடத் தொடங்குவர்.

இவ்வாறு தெற்காசிய நாடுகளில் இருபக்கங்களிலும் தவறான கண்ணோட்டத்தோடு ஒருபுள்ளியில் சந்திக்கின்ற சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

சமூகவலைத்தளங்களில் சிகிச்சை முறை பற்றி சிகிச்சை புரிதல் இல்லாத ஒருவர் தன் பார்வையில் நீதிபதி போல் அல்லது எல்லாம் தெரிந்தவர் போல் ஒரு மருத்துவ சிகிச்சையில் அல்லது தனக்கு தெரிந்த ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை பகிருவார். அதை கண்மூடிக்கொண்டு இவரின் கருத்துக்களையும் தீர விசாரிக்காமல் சிலர் கருத்து (Comment) பரிமாறுவர். பிறகு எல்லாருமே தங்கள் முகநூல் நண்பருக்காக மருத்துவமனைகளையும் அதன் சிகிச்சை முறைகளையும் முறையாக ஆராயாமல் பிரேத பரிசோதனை (Postmortem) செய்யத் தொடங்குவார்கள். இங்கே கவனிக்கப்பட வேண்டியது. மருத்துவமனை தரப்பில்; சரி அல்லது தவறு நேர்ந்திருக்கலாம் இவைகளையும் பொருத்தமான விசாரணை அதிகாரிகள் மூலம் முழுமையாக மேற்கொண்டு முடிவெடுப்பது என்கிற ஒழுக்கமுறையாகும்.

அரச வைத்தியசாலைகளின் சீறிப் பாயும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள் தனியார் வைத்தியசாலைகளில் தேனொழுக கதைக்கின்றார்கள் என்பது பொதுவான. நோயாளர்களின் குற்றச்சாட்டு இது தனிப்பட்ட நபர்களின் குணாதிசயஙகளுடன் தொடர்புபடுத்தி பார்க்கப்படவேண்டியுள்ளது.தவிர பொதுவான பண்பல்ல.

ஆக மொத்தம் மதியாதார் தலை வாசல் மிதியாத எம் மக்களின் மருத்துவ சாராத எதிர்பார்ப்புக்கள் (NonMedical Expectations). எவ்வளவு தூரம் உற்றுநோக்கப்டுகின்றன அல்லது பூர்த்திசெயப்படுகின்றன என்பதை யாவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் இதனூடாக மருத்துவமனைகளில் காணப்படும் சிக்கல்தன்மையான நடைமுறை நிகழ்வுகளை பொதுமக்களுடன் பகிர்ந்து தெளிவுவைப்பதே இந்த பதிவின் முக்கிய நோக்கமாகின்றது.




DR.R.MURALEESWARAN
MBBS, MSc(MEDICAL ADMINISTRATION),
DIP. IN PROCUREMENT AND CONTRACT ADMINISTRATION.

MEDICAL SUPERINTENDENT.BASE HOSPITAL
KALMUNAI, SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதம் தொன்மையானதா?

இந்துமதம் விசாலமானது, பழைமையானது, விஞ்ஞானரீதியான உண்மைகளையும், தத்துவங்களையும் கொண்டு பல எதிர்ப்புக்களையும், இன்னல்களையும், சந்தித்து அவைகளுக்கு ஈடுகொடுத்து, இன்றும் தலைநிமிர்ந்து, தனக்கென தனித்துவமான கலை, கலாசார, பண்பாட்டு பாரம்பரியங்களை, உள்ளடக்கியதாக, மனித மேம்பாட்டுக்கு உதவுவதாக, உலகின் பல பகுதிகளிலும் பரந்தும்,விரிந்தும் காணப்படுகின்றது என்றால் அதன் மகிமையை நாம் எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும். இதன் தோற்றமே கற்பனைக்கு எட்டாததாகவே உள்ளது. பொதுவாக சமையங்கள் எல்லாமே மனித வாழ்க்கையின் உயற்சிக்கு, மேம்பாட்டுக்குத் தேவையானவற்றை கூறுவதாகவே உள்ளன. ஒவ்வொரு சமயங்களும் ஒழுக்க விழுமியங்களையும், இறையை அடையும் வழிவகைகளையுமே போதிக்கின்றன.

எமது சைவ சமயத்தைப் பொறுத்தவரை எப்பொழுது அது தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? என்பதற்கு சரியான ஆதாரங்கள் இல்லை. மனிதன் எப்போது உருவாகினானோ அப்போதே அவனது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய எடுத்த முயற்சிகள் வெற்றி அடையாத போது, ஏதோ ஒரு சக்தியின் இயக்கம் இவற்றை தடைப்படுத்துகின்றது என்ற எண்ணமும், அனுபவங்களும் அவனது வாழ்வின் வளர்ச்சிக்கு அல்லது முன்னேற்றத்துக்கு அல்லது தடைகளை அகற்றுவதற்கு இயற்கையை வணங்கும் வழிபாடு உதயமாகி இருக்கலாம். மக்களின் சிந்தனை, நாகரிகம் என்பன வளர்ச்சி அடைந்த போதும், ஒரு சக்தியின் செயல்பாட்டில்தான் நாம் இயங்குகிறோம் என்ற அசையாத நம்பிக்கை கடவுளைக் கொண்டு வந்திருக்கலாம். அப்போதே இயற்கையோடு இணைந்ததாக சைவ சமயம் தோன்றியிருக்கக் கூடும். அதாவது வரலாறு எழுதப்படும் முன்னமேயே எமது சமயம் தோன்றியிருக்கலாம்.

## விழுமியம்

கா.சந்திரலிங்கம்
chandralingham13@gmail.com

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சேர் ஜோன் மார்ஷல், டெயிலர், ஆதர் லில்லி, சேர் வில்லியம், கிரையர்சன், முகர்சி, ஸ்ரிபன்சன் மெய்கண்ட சாஸ்திரி போன்ற பலரின் ஆராய்ச்சிகளின் முடிவுகள் சைவ சமயம்; நாகரிகமிக்க, பண்பு நிறைந்த சமயமாக இருந்தது எனக் கூறுகின்றன. சைவ சமயத்தைப் பற்றிய பல உண்மைகள் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போதுதான் ஆதாரரீதியாக வெளிக் கொண்டு வரப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள், இலச்சினைகள், உருவங்கள் போன்றவைகளைக் கொண்டு சேர் ஜோன் மார்ஷல் அவர்கள் கூறிய கருத்து என்னவென்றால் 'உலகின் மிகப் பழைய உயிரோட்டமுள்ள சமயம் சைவ சமயமே' என்பதே. இதிலிருந்து சைவத்தின் தொன்மையை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

குறிப்பாகக் கூறுகின்ற பொழுது பலுசிஸ்தான், இராஜஸ்த்தான், பஞ்சாப் போன்ற பகுதிகளை 1921 22ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜோன் மார்ஷல் அவர்கள் தலைமையில் மொகஞ்சதாரோ, கரப்பா போன்ற இடங்களை அகழ்ந்து ஆராய்ந்து பார்த்ததோடு மேலும் அதோடு இணைந்ததாக ஐம்பத்தைந்துக்கும் மேலான இடங்களை மசும்தார், மக்கே என்பவர்கள் ஆராய்ந்தபோது இங்கு கண்டெடுக்கப்பட்ட எழுத்துக்கள், கட்டிடச் சிதைவுகள், பொருட்கள் ஆறாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தை உடையதாக காணப்பட்டதோடு, சிறந்த நாகரிகம் வளர்ச்சிபெற்ற மக்கள் வாழ்ந்த இடமாக இருந்தது எனவும் அவர்கள் கூறினர்.

கல்லினால் செய்யப்பட்ட சிவலிங்கம், பல உருவங்கள் பொறித்த செம்பு, வெங்கல தகடுகள், பெண் தெய்வ வடிவங்கள், நந்தி உருவங்கள் போன்ற பல்வேறுபட்ட பொருட்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டதோடு யோக நிலை சிவ உருவமும் காணப்பட்டது. அத்தோடு அறுநூறுக்கு மேற்பட்ட மாக்கல்லினாலும், மரத்தினாலும் செய்யப்பட்ட லிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவைகள் பல உண்மைகளை வெளிக்கொண்டு வருவதாக அமைந்திருந்தன. குறிப்பாக அக்காலத்தில் நந்தி வழிபாடு, நாக வழிபாடு, சக்தி வழிபாடு, இயற்கை வழிபாடு என்பனவும் இருந்ததாக அறியக் கூடியதாக இருக்கின்றன.

மேற்காசியா, கிரீஸ், ரோம், சீனா, ஜப்பான், பசிபிக் கடற்தீவுகள், சீயம், கம்போடியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து

இன்னும் சுமத்ரா, ஜாவா, ஜப்பான் போன்ற இடங்களிலும் சைவசமயம் இருந்ததற்கான ஆதாரங்களை கண்ணுறக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது கூட இந்நாடுகளின் சில இடங்களில் லிங்க வழிபாடு காணப்படுவதை அவதானிக்கலாம். அமெரிக்காவின் கலிபோனியாவில் இருக்கின்ற பழைய சிவாலயம் பத்தாயிரமாண்டு பழமையானதென தொல்பொருளியலாளர்கள் கூறுவதிலிருந்து சிவலிங்க வழிபாடு உலகின் பல்வேறு நாடுகளில் பரவியிருந்தமை தெளிவாவதோடு அதன் தொன்மையும் புலனாகிறது. இன்றும் கூட சீனா, கம்போடியா போன்ற இடங்களில் சிவவழிபாடு காணப்படுவதையும் ஜாவா, சுமத்திரா தீவுகளிலும் சிவ வழிபாடு நடைபெறுவதையும் காணலாம். பாலி தீவில் சிவன் கோயில் இருப்பதோடு சிவ வழிபாடும் காணப்படுகின்றது.

இலங்கையை பொறுத்தவரையில் வண.வலபொல இராகுல அவர்கள் 'இலங்கையில் பௌத்த வரலாறு' என்னும் தனது புத்தகத்தில் விஜயன் வருகைக்கு முன் இலங்கையில் சைவம் இருந்து என்பதை குறிப்பிட்டிருக்கிறார். இலங்கையில் காணப்பட்ட சிவலிங்கங்கள், அகழ்வாராய்ச்சியின் போது உருகுணைத் தேசிய பூங்காவில் காணப்பட்ட 'சிவநகர்' என்ற கல்வெட்டு போன்றவை மேலும் இதற்கு வலுவூட்டுவதாக உள்ளது. சேர்.வில்லியம் ஜோன்ஸ் 'எமது எண்ணத்துக்கு எட்டாத காலத்தில் ஈழத்தில் சைவம் இருந்திருக்கிறது' எனத் தனது ஆராய்ச்சியின் பின் குறிப்பிட்டிருக்கிறார்.

விஜயன் அரசாட்சி ஏற்றதும் நான்கு சிவாலயங்களை அமைத்ததாகவும், பழைய சிவாலயங்களை திருத்தியதாகவும் 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகிறது. விஜயனுக்கு பின் அரசாண்ட பாண்டுக வாசுதேவன், அபயன் போன்றோர் சைவ சமயத்தவர்களே என்பதும் அறியக்கூடியதாக உள்ளது. 'மஹாவம்சம்' பண்டுகாபயன் சிவன் கோயில் கட்டியதாக கூறப்படுகிறது. மேலும் கி.பி 5ஆம் நூற்றாண்டில் குளக்கோட்டன் என்னும் சோழ மன்னன் திருக்கோணேஸ்வரம், முன்னேசுவரம், போன்ற கோயில்ளைச் சீர்படுத்தி பூசைகளையும் நடத்தியதாக அறியக்கிடக்கிறது. இவைகளை நோக்கும் போது சைவ சமயம் தொன்மை வாய்ந்தது என்பதையும், கால வரையறைக்கு அப்பாற்பட்டது என்பதையும் நாம் துணிந்து கூறலாம்.

# இன உறவுக்கான அரசியல்தலைமைகள் கிழக்கிலிருந்து தான் உருவாகவேண்டும்!

> நல்லாட்சியில் சிறுபான்மையினத்திற்கு நிறையசன்மானங்கள்

**தமிழ் முஸ்லிம் சமூகங்களின் உறவுக்கு முதலமைச்சராக இருந்த காலத்தில் அரும்பாடுபட்டதாகவும் இந்த உறவை விரும்பும் சில அரசியல்வாதிகள் தற்போது அரசியல் களத்திலிருந்து தூரப்படுத்தப்பட்டமை பெரும் கவலையளிப்பதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்தார்.**





**முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் எம்.பி.**

மூவினங்களும் வாழுகின்ற கல்முனை மாநகரிலிருந்து வெளிவரும் அம்பாறை மாவட்டத்தின் முதல் அச்சுப்பத்திரிகையான 'பரிமாணம்' பத்திரிகைக்கு முஸ்லிம் சமுகத்தைச்சார்ந்த இனநல்லுறவை நேசிக்கின்ற கிழக்குமாகாணத்தில் முதலமைச்சராக இருந்த பொறியியலாளர் ஹாபிஸ் நஸீர் அவர்களைச் செவ்வி காண்பதில் மகிழ்வுறுகின்றோம்.

அவர் வழங்கிய விஷேட செவ்வி இதோ.

**? இனஜக்கியத்தை நேசிக்கின்ற தாங்கள் சமகாலத்தில் தமிழ் முஸ்லிம் உறவு பற்றி உங்கள் பார்வை மற்றும் விருப்புக்கள் என்ன?**

**பதில்:** நாட்டின் எதிர்கால இலட்சியங்களை வெல்வதற்கு இன்று தேவைப்படுவது இந்த உறவு தான். இவ்வாறான இன உறவுகளை ஏற்படுத்துவதற்கான அடித்தளம் கிழக்கில்தான் இடப்பட வேண்டும். மட்டுமல்ல இன உறவுகளுக்கு முன்னுதாரணமாகச் செயற்படும் அரசியல் தலைமைகளும் கிழக்கிலிருந்துதான் வளர வேண்டும். கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் நான் இதைத்தான் செய்தேன். என்னுடன் பணியாற்றிய மாகாண அமைச்சர்களும் இதில் உடன்பட்டுத்தான் கிழக்கில் வாழும் மூன்று சமூகங்களுக்கும் பாரபட்சமற்ற சேவைகளை முன்னெடுத்தனர்.

குறிப்பாக எனது காலத்தில் மூன்று இனத்துக்கும் முன்மாதிரியான அரசியல் தலைமைகள் தளைத்தோங்கி வந்தன.துரதிஷ்டமாக அத்தலைமைகளில் சில இன்று அடையாளம் தெரியாமல் தொலைந்துவிட்டன. இருந்தாலும் தேசிய அரசியலுக்குள் நுழைந்த பிறகும் இந்தப் பணிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்றுதான் சிந்தித்து வருகிறேன். சமூகங்களைப் பிரித்து வாக்குத் தேடும் எந்தத் தேவையும் எனக்குக் கிடையாது.பாராளுமன்றத் தேர்தலில் கணிசமான தமிழர்களும் எனக்கு வாக்களித்தனர்.சமூக உறவுகளுக்காக நான் முன்னெடுத்த பணிகளுக்கு கிடைத்த பரிசாகவே இதைக் கருதுகிறேன்.

**? கேள்வி. மாகாண சபைத் தேர்தல்கள் நடாத்தப்படலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படும் காலமிது.அவ்வாறு தேர்தல் நடந்தால் மீண்டும் போட்டியிடுவீர்களா? நீங்கள் கூறியதுபோல் இன உறவுகளைக் கட்டியெழுப்பும் நல்ல சந்தர்ப்பமாக இது அமையும்தானே! என்ன சொல்கிறீர்கள்?**

**பதில்:** ஆம்.நல்லதொரு சந்தர்ப்பம்தான்.அதற்காக சந்தர்ப்பங்கள் அனைத்தையும் நான் அள்ளிக் கொள்வதா? ஏனையோருக்கும் பகிர்ந்து வழங்கி நல்ல தலைமைகளை அடையாளம் காட்ட வேண்டுமே.!இன உறவுக்காக கிழக்கில் என்னால் விட்டுச் செல்லப்பட்ட பணிகளை ஏனைய சிலரும் தொடர்வதுதான் இந்த நோக்கத்துக்குப் பலம் சேர்க்கும். நான் மட்டும் இதைச் செய்தால்.ஏனையோருக்கு இதிலுள்ள விருப்பம் வெளிப்படும் சந்தர்ப்பம் வெளிவராமல் போகும். துரதிஷ்டமாக மாகாண சபைகள் இதுவரைக்கும் நடத்தப்படாதுள்ளன.அதிகாரங்கள் பகிரப்பட்டு சிறுபான்மையினரும் ஆட்சி அதிகாரம் நிர்வாகங்களில் பங்கெடுக்கும் மாகாண சபைகளை உரிய நேரத்தில் நடத்த முடியாமல் போனமைக்கு கடந்த நல்லாட்சி அரசாங்கம்தான் காரணம்.

> நட்புக்காக சமுகத்தை பலிக்கடாவாக்க முடியாது

தேர்தல் முறையை மாற்றப் புறப்பட்டு எல்லை நிர்ணயம் கலப்புமுறை எனக் காலத்தை கடத்தியதும் நல்லாட்சி அரசுதான்.சிறுபான்மை சமூகங்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தவர்கள் எமது சமூகங்களுக்கு செய்த மிகப்பெரிய அநீதியில்லையா இது.இது மட்டுமல்ல .நல்லாட்சி அரசாங்கத்தில் நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதலால் முழு முஸ்லிம்களும் சந்தேகக் கண்ணுடன் நோக்கப்படுகிறார்களே?ஆட்சியைக் கொண்டு வர உதவிய ஒரு சமூகத்துக்கு நல்லாட்சி தந்த சன்மானங்கள் இப்படித் துயரத்தோடுதான் தொடர்கின்றன.

**? நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு வேறு விதத்திலும் நீங்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மனநிலையும் வேறுபடுகின்றது. இதுபற்றி விளக்க முடியுமா?**

**பதில்:** நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃபின் நிலைப்பாடு எதுவோ அதுதான் என்னுடைய நிலைப்பாடும். இந்த அதிகார முறைதான் சிறுபான்மை சமூகங்களுக்குப் பாதுகாப்பு என்பதில் மர்ஹூம் அஷ்ரஃபுக்கு இரண்டு கருத்துக்கள் இருக்கவில்லை. இதில்தான் ஸ்தாபகத் தவிசாளர் ஷேகு இஸ்ஸதீனுக்கும் மர்ஹூம் அஷ்ரஃபுக்கும் கருத்து மோதல்கள் உருவாகின.பின்னர் தவிசாளர் ஷேகு இஸ்ஸதீனை கட்சியிலிருந்து வெளியேற்றும் அளவுக்கு தலைவர் அஷ்ரஃப் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையில் பிடிதளராத நம்பிக்கையில் இருந்தார்.

இவ்வாறான ஒரு அடுத்த கட்ட மோதலை கட்சிக்குள் உருவாக்கும் நிலையைத்தான் இருபதாவது திருத்தத்துக்கான எமது ஆதரவு ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டது. காலத் தேவை கருதி இந்த அபிப்பிராய பேதங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது.எனினும் அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தை ஆதரித்தமை அஷ்ரஃபின் தூரதிருஷ்டியிலான பார்வையில்தான் என்பதை எப்போதும் தயங்காமல் சொல்வேன்.

தனிப்பட்ட ராஜபக்ஷ என்கின்ற நபரை ஆதரிப்பதல்ல இது. ஜனாதிபதி முறையைப் பலப்படுத்தி சிறுபான்மையினருக்குத் தேவையான அவசர தீர்வுகளைப் பெறுவதுதான் இதிலிருக்கும் தீட்சண்யம். கொரோனாத் தொற்றில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதிலிருந்து விடுவித்து நல்லடக்கத்துக்கு அனுமதியைப் பெற்றதும் இந்தத் தீட்சண்யம்தான். வெளியிலிருந்து உணர்ச்சிகளுக்கு மட்டும் அடிமைப்பட்டு பார்ப்போருக்கு இந்த தூரநோக்குப் பார்வை புலப்படப் போவதில்லை. இதுபோன்று மர்ஹூம் அஷ்ரஃபும் பலதைச் சாதித்தார்.பாராளுமன்றத் தேர்தலுக்கான வெட்டுப் புள்ளியை 12 இலிருந்து 05 வீதமாக்க உதவியதும் இதே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைதான்.இப்படிப் பல நன்மைகள் இதில் தொடர்கின்றன.

**? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரஃபைப்பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருந்தும் தற்போதைய தலைமையைப் பற்றி எதுவும் பேசவில்லையே ஏன்?**

**பதில்:** கேட்டிருந்தால் பேசியிருப்பேன்.ஏதோ உள்ளதாக நினைத்துத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள் போலுள்ளது. இதுவரைக்கும் உள்ளது ஜனநாயக ரீதியிலான கருத்து வேறுபாடுகள்தான். அதற்காகக் கட்சியை உடைப்பது வெளியேறுவது என்றெல்லாம் இல்லை. ஒரு கட்சியின் தலைமை மக்கள் நலனுக்கு ஏற்ற வகையில் செயற்படாவிட்டால் அந்தக் கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறு முஸ்லிம் சமூகம் பாதிக்கப்படக் கூடாது என்பதில் விழிப்பாக இருக்கிறேன் அவ்வளவுதான். ஆனால் அஷ்ரஃபுக்கு பின்னரான தலைமையின் செயற்பாடுகள் தொடர்ந்தும் ஐக்கிய தேசிய கட்சி சார்பிலான நலன்களைக் கொண்டுள்ளதுதான் கவலையளிக்கிறது. தனிப்பட்ட நட்பு பிடிப்புக்காக ஒரு தலைமை செயலாற்ற முடியாது.

இந்த தனிப்பட்ட நட்புகளால் எடுக்கப்பட்ட முடிவுகள் நல்லாட்சி வரை தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தையும் தனிமைப்படுத்தியுள்ளது.

**நன்றி:- சுஜப்**

---

## பக்கச்சார்பற்ற செய்திகளைத் தரும் பணி தோடர வாழ்த்துக்கள்

அனைவருக்கும் வணக்கம்! கல்முனை நெற் ஊடக வலையமைப்பானது எமது மக்களுக்கு பக்கச்சார்பற்ற செய்திகளை உடனுக்குடன் வழங்கி வரும் ஓர் சிறந்த செய்தித் தளமாகும். அவர்களின் அடுத்தகட்ட முயற்சியான அம்பாறை மாவட்டத்தின் முதலாவது செய்திப் பத்திரிகை ''பரிமாணம்'' வெளியிடப்பட உள்ளது இதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். தற்போதைய காலத்தில் தொழில்நுட்பத்துடன் கூடிய ஊடகத்துறையானது வளர்ச்சி அடைந்து காணப்பட்டாலும் இன்றுவரை பத்திரிகைகளும் அதற்கு நிகராக காணப்படுகின்றது. அந்த வகையில் உங்கள் முயற்சி அனைத்து மக்களிடமும் சேரவேண்டும். உங்கள் நடுநிலையான ஊடகத்துறையானது



மென்மேலும் வளர்ச்சியடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**இராசமாணிக்கம்**
**இரா. சாணக்கியன்**
**பாராளுமன்ற உறுப்பினர் -**
**மட்டக்களப்பு**

## பரிமாணம் கல்முனைநெற்றின் மற்றுமொரு பரிணாமம்

அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்தியத்தில் கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் பாரபட்சமற்ற நடுநிலையான சேவையானது மிகவும் பாராட்டத்தக்கதாக காணப்படுகின்றது.

கடந்த ஐந்து வருடத்திற்கும் மேலாக தனது அளப்பெரிய சேவையினை வழங்கி வருகின்ற சூழலிலே அதனுடைய ஸ்தாபகர் புவிநேசராசா கேதீஸின் அயராத முயற்சியில் இவ் ஊடக அமைப்பின் பிரதம ஆசிரியரும் ஜனாதிபதி விருதுபெற்ற அம்பாறை மாவட்டத்தின் முத்த ஊடகவியலாளரான திரு வீ.ரி சகாதேவராஜா மற்றும் தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும் இவ் ஊடக அமைப்பின் ஆலோசகருமாக செயற்படுகின்ற திரு க.குணராசா அவர்களும் இணைந்து ஒரு இலத்திரனியல் பத்திரிகையை ஆரம்பித்து இருமாதங்களில் அதனை அச்சுப்பதிப்பில் வெளியிடமுயற்சித்தது உண்மையில் பாராட்டுக்குரியது.

அம்பாறை மாவட்டத்தின் முதல் அச்சுப்பத்திரிகை என்ற பதிவைச் சாதனையாக்கிய 'பரிமாணம்' இப்பிராந்தியத்தின் தமிழ் மொழி பேசுகின்ற மக்களும் வாசகர்களும் பெருமைப்படக்கூடிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும்.

இன்று எம்மவர்கள் நாடு பூராகவும் உலகம் பூராகவும் பரந்து வியாபித்து வாழுகின்ற நிலையில் இணைய வழியூடாக இப்பிராந்தியம் சார்ந்த செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது. கல்முனை நெற் ஊடகம் அதன் பணிகளை நிலையாக முன்னெடுத்து மேலும் மேலும் வளர என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கோவிந்தன்**
**கருணாகரம் (ஜனா)**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**மட்டக்களப்பு**



**கல்முனைநெற் ஊடக வலையமைப்பின் 'பரிமாணம்' பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை படைக்கும் புகழ்பூத்த க

## கல்லூரி முதல்வரின் செய்தி



அருட். சகோதரர்.
எஸ். சந்தியாகு, FSC
அதிபர்,
கமு/கார்மேல் பற்றிமா
கல்லூரி, தேசிய பாடசாலை
கல்முனை

கத்தோலிக்க மிஷனரிமாரினால் கல்முனையில் 1900 ஆண்டு காலப்பகுதியில் புனித மரியாள் பாடசாலையாக அடித்தளமிடப்பட்ட விதையானது, இன்று கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையாக வளர்ந்து, அம்பாறை மாவட்டத்திலே முன்னணிப் பாடசாலையாக ஒளிர்விட்டுக்கொண்டிருக்கின்றது. இப்பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புள்ள கத்தோலிக்க துறவிகளின் தியாக செயற்பாடுகளும், தன்னலம் கருதா சேவையுள்ளம் படைத்த பொதுநிலை மட்டத்து பிரதிஅதிபர்கள், ஆசிரியர்களின் அயரா உழைப்பும் உரமாகியுள்ளது என்றால் மிகையாகாது.

தம் வாழ்விற்கு ஒளியூட்டிய இக் கல்லூரியில் தமது பிள்ளையும் கற்க வேண்டும் என பழைய மாணவர்களும், ஒழுக்கசீலராக என்பிள்ளையும் ஒளிர வேண்டும் என ஏனைய சமூகத்தினரும் போட்டி போட்டுக்கொண்டு அண்மைக் காலங்களில் பாடசாலை அனுமதி கேட்டுவருவது பாடசாலையின் தரத்தை மென்மேலும் உயர்த்திக் காட்டுகின்ற ஒரு அளவிடையாக அமைகின்றது. இம்மாணவர் தொகை 1976 இல் 1202 ஆகவும் 1986 இல் 2200 ஆகவும் 2021 இல் 3800 ஆகவும் உயர்ந்து செல்வது பாடசாலையின் வளர்ச்சி நிலைக்கு ஒரு குறிகாட்டியாக அமைகின்றது.

இக்கல்லூரியில் வாழ்க்கைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்;ற அதேவேளை மாணவர்களது ஒழுக்கம், ஆன்மீகம் என்பன இரு கண்களாக கருதப்பட்டு அவற்றின்பால் பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள் ஆழமமாணவர்களின் கல்விஅடைவு மட்டத்தை பார்க்கின்ற போது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி வீதங்கள் 1998 இல் 277, 2000 இல் 557, 2010 இல் 757, 2020 இல் 997 எனப்படிப்படியாக உயர்ந்து, அம்பாறை மாவட்டத்தில் முதன்னிலைப் பாடசாலையாகவும், கிழக்கு மாகாணத்தில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் அதிகூடிய மாணவர்களை சித்திபெறச்செய்யும் முன்னணிப் பாடசாலை ஆகவும் எமது பாடசாலை திகழ்கின்றது.

க.பொ.த[சா/த] தரத்தில்; சித்தி வீதம் 1998 இல் 607, 2005 இல் 707, 2015 இல் 857, 2019 இல் 937 என்று உயர்ந்து செல்கின்றது. க.பொ.த [உ/த] தரத்தில் மருத்துவத்துறையில் கடந்த நான்கு வருடங்களாக அம்பாறை மாவட்டத்திலே முதன்மை நிலையை தக்கவைத்துக்கொள்ளும் அதேவேளை;, வருடா வருடம் சராசரியாக 65 மாணவர்களை பொறியியல், மருத்துவம், முகாமைத்துவம், சட்டத்துறை மற்றும் ஏனைய பல துறைகளுக்கும் பல்கழைக்கழகத்திற்கு மாணவர்களை உள்ளீர்ப்புச்செய்யும் பாடசாலையாகவும் இது இருக்கின்றது.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாகாணம், தேசியம் என பல சாதனைகளை படைப்பதுடன், அண்மைக்காலத்தில் எம்மாணவர்கள் சர்வதேச ரீதியிலும் பல்வேறுவிதமான போட்டிகளில் பங்கெடுத்து சாதனை படைத்துவருவதனை பத்திரிகைகள் வாயிலாக நாம் அறிய முடியும்.

இக்கல்லூரியின் முக்கிய பங்குதாரர்களாகத் திகழும் பழைய மாணவர்கள், தமது சங்கங்களை அமைத்து பல உதவிகளை இக்கல்லூரிக்கு வழங்கி வருகின்றார்கள். இவர்களது தாய் சங்கம் கல்முனையிலும் அதன் கிளைகள் கொழும்பு, கனடா, லண்டன், அவுஸ்ரேலியா என சர்வதேச ரீதியிலும் வேகமாக பரவிக்கொண்டு செல்வது எம்பாடசாலையின் தரத்தை மேலும் உயர்த்திக் காட்டுகின்றது. தாராள சிந்தையுள்ளம் படைத்த பழைய மாணவர்களின் பங்களிப்புக்கள் பாடசாலையின் பௌதீக வளத்திற்கு வலுச் சேர்க்கின்றது.

இத்தனை சாதனைகளைப் படைத்துவரும் இக்கல்லூரி ஓர் தேசிய பாடசாலையாக இருப்பதனால், கல்வி அமைச்சின் நேரடியான கண்காணிப்பில் செயற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சி தரும் விடையமாகும். எமது பாடசாலைக்கு ஆளணி வளங்கள் திருப்தியாக கிடைத்தாலும் பௌதீக வளங்கள் மாணவர் தேவைக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்படாமல் இருப்பது பெரும் குறைபாடாகவே இருக்கின்றது. இது தொடர்பாக பல தடவைகள் கல்வி அமைச்சிற்கு தெரியப்படுத்தியும், அதன்பால் பாராமுகமாக செயற்படுவது எமக்கு மனச்சோர்வையும், அதிருப்தியையும் ஏற்படுத்துகின்றது.. மாணவர்களின் தொகை அதிகமாக இருப்பதனால் இம்மாணவர்களுக்கான விசேட பாடங்களை மரநிழலின் கீழ் கற்பிக்க வேண்டிய கஷ்டமான நிலையிலும், பெற்றோர் கூட்டங்கள், விழாக்கள் என்பவற்றை திறந்த வெளியில் மழை, வெயில் காலங்கள் பாராது நடாத்த வேண்டிய துர்பாக்கிய நிலையிலும் நாம் இருக்கின்றோம். 3800 மாணவர்களை கொண்ட இத்தேசிய பாடசாலையின் மாபெரும் குறைபாடான வகுப்பறைக் கட்டடம் ஒன்றுகூடல் மண்டபம் என்பவற்றை கல்வி அமைச்சின் மூலம் பெற்றுத்தருமாறு இக் கல்லூரியின்பால் அக்கறையுள்ளோரை கேட்டுநிற்கின்றேன்.

கிழக்கிலங்கையிலே 'ஒளிர்வாய்' எனும் மகுட வாக்கியத்தை தன்னகத்தே கொண்டு கலங்கரை விளக்காய் கல்வி செயற்பாட்டிலும் ஒழுக்கமேம்பாட்டிலும் முன்னோடியாகவும், மிடுக்கோடும் வீறு நடைபோடும் கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் வளர்ச்சிக்கு, வியர்வை சிந்திய முன்னோடிக் கல்விமான்களையும், தற்போது சேவையாற்றிவரும் ஆசான்களையும் அன்புள்ள பெற்றோர்களையும்இ பழைய மாணவர்களையும்இ மனதார பாராட்டி நிற்கின்றேன்.

இன்று கற்கும் எம்மாணவச்செல்வங்கள் நாளைய பல்துறை சார் தலைவர்களாக இலங்கை நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் எம் கல்லூரியின் ஒளியை பரப்புகின்ற ஒளிக்கீற்றுக்களாக மாறிட, எம் பாதுகாவலியாம் கால்மேல் அன்னையின் அரவணைப்பும், கடவுளின் பாதுகாப்பும் என்றும் அவர்களுடன் இருக்க ஆசிகூறி நிறைவு செய்கின்றேன்.

**வாழ்க எம் கல்லூரி !**
**வளர்க அதன் புகழ் !**




கிழக்கிலங்கையில் கத்தோலிக்க மிஷனரிமாரின் வருகையினால் ஆங்கில, தமிழ் பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டதுடன் கல்விச் சேவையும் விஸ்தரி;க்கப்பட்டது. அந்த வரிசையில் கல்முனை பிரதேசத்தில் 1900 ஆண்டில் திரு இருதய நாதர் ஆலயத்தின் முன்றலில் ஆலய பங்குத்தந்தையின் உதவியுடன் 'புனித மரியாள்' என்ற பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக அருட்.தந்தை மைக்கல் ஹவுத் குஒ அவர்கள் கடமையாற்றினார்.

1938 இல் சேவை செய்வதற்கென இங்கு வந்த புனித வளனார் சபையினர் ஆங்கில பாடசாலை ஒன்றினை ஆரம்பித்தனர். 1951 இல் புனித மரியாள் பாடசாலையும், ஆங்கில பாடசாலையும் ஒன்றாக இணைக்கப்பட்டு தற்போது பாடசாலை இயங்குகின்ற இடத்திற்கு மாற்றப் பட்டுள்ளதுடன், அப்போது போர்த்துக்கேய நாட்டிலிருந்து கல்முனைக்கு கொண்டுவரப்பட்ட பற்றிமா அன்னையின் திருவுருவத்தினை அங்கு இருப்பிடமாக்கி 'பற்றிமா கல்லூரி' என்று பெயர் மாற்றமும் செய்யப்பட்டது. அப்போது இப்பாடசாலையில் இருந்த 17 ஆசிரியர்களில் 15 பேர் பட்டதாரிகளாவர்.

1922 இல் சேவையாற்றுவதற்காக இலங்கைக்கு வந்த கார்மேல் கன்னியர்கள் 1926.06.18 இல் கல்முனையில் கார்மேல் மடம் [Carmel Convent] அமைத்து ஆங்கில தமிழ் பாடசாலைகளை ஆரம்பித்து பெண்களுக்கென கல்விச்சேவை வழங்கினர். 1958 இல் இவ்விரு பபிரிவுகளும் ஒன்றிணைக்கப்பட்டு 'கார்மேல் மகா வித்தியாலயம்' என மாற்றப்பட்டது. அருட்.சகோதரி. டொறத்தியா AC 17 வருடமும், அருட்.சகோதரி.மேபிள் AC அவர்கள் 03 வருடங்களும் சேவையாற்றினர்.

1960 களில் இலங்கையில் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டன. இதன்போது பற்றிமா கல்லூரியும், கார்மேல் மகா வித்தியாலயமும் ஒன்றிணைக்கப்படுவதன் அவசியத்தை அப்போதைய கல்முனை பிரதேச சமூகமும், நலன்விரும்பிகளும் உணர்ந்தமையினால், அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் 1976 ஆம் ஆண்டு மே மாதம் இவ்விரு பாடசாலைகளும் 'கார்மேல் பற்றிமா கல்லூரி' (Carmel Fatima College) என்ற பெயருடன் ஒன்றிணைந்தது. இக்கலவன் பாடசாலையின் முதல்வராக அருட்.சகோ.கு.அ.பிரான்சிஸ் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் 19%6 இல் அருட்.சகோதரி.M.மேபிள் -AC முதல்வராக பணியாற்றினார். 19%8 இல் அருட் சகோதரியின் ஓய்வினைத் தொடர்ந்து அருட்.சகோ.S.A.I.மத்தியூ -SSJ அவர்கள் 19%8.01.18 இல் மூன்றாவது முதல்வரானார்.

கல்முனை பிரதேசத்தில் இன, மத, சாதி பேதமின்றி தனது சேவையை யாவருக்கும் வழங்கி கலங்கரை விளக்காக பிரகாசித்துக் கொண்டிருந்த இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அப்போது அரசியல் ரீதியான ஆதரவும் சாதகமாக அமைந்தது. 1977 இல் மறைந்த அமைச்சர் A.R.மன்சூர் அவர்களால் பாடசாலைக்கான கட்டட வசதிகள் குறிப்பாக உயர்தர விஞ்ஞான ஆய்வு கூடம் வழங்கப்பட்டதுடன், அதனை 1978 இல் மாண்புமிகு பிரதமர் கீ.பிரேமதாஸ அவர்கள் திறந்து வைத்தமையையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்ப, இடைநிலை, கனிஸ்ட பிரிவு என்பவற்றுடன் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகளும் இப்பாடசாலையில் ஏற்படுத்தப்பட்டு பெரிய கல்வி நிறுவனமாக வளரத் தொடங்கியது.

இதன் பின்னர் 19%8 நவம்பரில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக பாடசாலையின் கட்டடங்கள் பாரிய சேதத்திற்குள்ளாகியது. எனினும் அதிபரினதும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் கடின முயற்சியினால் குறுகிய காலத்திற்குள் மீண்டும் புதுப் பொலிவுடன் பாடசாலை கட்டியெழுப்பப்பட்டது. அத்தோடு அக்காலப்பகுதியில் கல்லூரியில் சேவையாற்றிய பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் போன்றோர் அதிபரின் அயராத முயற்சிக்கு பலம் சேர்த்தனர் என்றே கூற வேண்டும்.

இவ்வளர்ச்சியின் விளைவாக 1993 இல் இப்பாடசாலை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. அவ்வேளை இப்பாடசாலை 3000 மாணவர்களையும், 100 க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு இயங்கியது. இதனால் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிலும், இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும், பௌதீக ரீதியான வளர்ச்சியிலும், நிருவாக கட்டமைப்பிலும் கல்முனை பிரதேசத்தில் முன்னணி பாடசாலையாக ஒளிர்ந்தது. அத்துடன் பாரம்பரியமாக அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகளின் வழிகாட்டலின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட இப்பாடசாலையானது சிறந்த ஒழுக்க விழுமியங்களிலும் தனித்துவமான பாடசாலையாக விளங்கியது. இவ்வாறு இப்பாடசாலை ஒழுங்கமைக்கப்பட்டமையினால் அதிகமான பல்கலைக்கழக அனுமதிகளையும், இணைப்பாடவிதான தேசிய ரீதியான வெற்றிகளையும் பெற்றது.

பல்துறை பரிமாண ஆளுமையான அதிபர். அருட்.சகோ.S.A.I.மத்தியு -SSJ அவர்கள் 28 ஆண்டு கால இக்கல்லூரிப் பணியில், 22 ஆண்டு காலம் அதிபராக பணியாற்றி தேசிய ரீதியல் இக்கல்லூரிக்கென்ற ஒரு அந்தஸ்தைப் பெற்றுக்கொடுத்த பெருந்தகை என்பது நிதர்சனம்.

தொடர்ந்து 1999 நவம்பரில் அருட்.சகோ.M.ஸ் ரீபன் மத்தியு -S-SJ அவர்கள் கல்லூரியின் முதல்வராக கடமையேற்றார். முன்னர் இருந்ததை போன்று இவரும் கற்றல், கற்பித்தல், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், பௌதீகவள விருத்தியிலும் கூடுதல் அக்கறையுடன் பல செயற்திட்டங்களை அமுல்படுத்தியதுடன் குறிப்பாக இவருடைய காலத்தில் தரம் 6-11 பிரிவில் இருமொழிக்கற்கையும் (Bilingual) இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் பெயரை தேசிய மட்டத்தில் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டமையினால் இப்பாடசாலை கல்முனை பிரதேசத்தின் ஏனைய பாடசாலைகளுக்கு சிகரம் வைத்தது போல் எடுத்துக்காட்டாக உயர்வாக



விளங்கியது. பின்னர் 2015 தை ம
வட்ட குருவான அருட்.தந்தை.பி
பதில் அதிபராக நியமிக்கப்பட்டார்.
அடைவு மட்டத்தினை அதிகரிப்
திட்டங்களை நடைமுறைப்படுத்
தேவைப்பாடாக காணப்பட்ட பௌ
பாக ஆசிரியர் விடுதி, நிர்வாக அல
சலகூடம் போன்ற கட்டுமானங்கள
அமைப்பதற்கு முயற்சி எடுத்துள்ள
காலப்பகுதியில் க.பொ.த உயர்
ரிவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2017 சித்திரை தொடக்கம் 201
காலப்பகுதியில் திரு.ஆ.சுபைந்திர
அதிபராக கடமையாற்றினார்.

கல்முனை பிரதேச மக்களி
மறைமாவட்ட ஆயர் சபையினது
சங்கத்தினதும் கோரிக்கைக்கிண
லிக்க துறவற சபையான டிலாசா
இப்பாடசாலையை பொறுப்பெடுத்


சிரேஷ்ட மாணவ தலைவர்கள்


முகாமைத்துவக் குழு


அபிவிருத்திக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல்வி விருட்சம் கல்முனை பற்றிமா







30 இல் மறைமா
ர் செலர் அவர்கள்
ர் மாணவர்களின்
காக பல செயற்
டன், நீண்டகால
ள விருத்தி குறிப்
ட்டம், நவீன மல
ப்பாடசாலையில்
அத்துடன் அவரது
தொழில்நுட்பப்பி

வணி வரையான
தற்காலிக பதில்

, மட்டக்களப்பு
ழைய மாணவர்
017 இல் கத்தோ
ருட்சகோதரர்கள்
.

2017 ஆவணி 30 முதல் இச்சபையைச் சேர்ந்த அருட் சகோதரர் செபமாலை சந்தியாகு -FSC அவர்கள் இக் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்றார். இவர் கடமையேற்று குறுகிய காலத்தில் 2018 இல் வருடாந்த பரிசளிப்பு விழாவும், 2018, 2019 களில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும், 2020 இல் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் பௌதீக வள அபிவிருத்தியை பொறுத்த மட்டில் Smart classroom, Basket Ball Court, Digital Name Boart ,Vehicle Parking என்பன குறிப்பிடத்தக்கதாகும். பௌதீக வள வளர்ச்சியுடன் சேர்ந்து ரம்மியமானதும் கவர்ச்சிகரமானதுமான பாட சாலை சூழல் இவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

அத்துடன் தேசிய மட்ட பரீட்சைகள், இணைப்பாடவி தான செயற்பாடுகள் போன்றவற்றிற்கு விசேட செயற் திட்டங்களை வடிவமைத்து அதனை பாடசாலையின் ஆளணி வளம், பெற்றோர் ஆகியோருடன் இணைந்து சிறப்பாக நடைமுறைப்படுத்தி உயர்ந்த வெளியீடுகளை பாடசாலை பெறுவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்று கின்றார். இதன் விளைவாக அண்மைக்காலத்தில் பின் வரும் தேசிய, சர்வதேச மட்ட சாதனைகள் பாடசாலைக்கு கிடைத்துள்ளமை மறுக்க முடியாது.

இப்பாடசாலை 3800 மாணவர்கள், 180 ஆசிரியர்கள், 35 கல்விசாரா ஊழியர்கள் கொண்ட பெரிய கலைக் கூடமாக வளர்ந்து நிற்கின்றது. இங்கு ஆரம்பப்பிரிவு முதல் கனிஸ்ட இடைநிலை (இருமொழி கல்விப்பிரிவு உட்பட), சிரேஸ்ட இடைநிலை (கணிதம், விஞ்ஞானம், வர்த்கம், கலை, தொழில்நுட்பம்) பிரிவுகள் வரை நடை பெறுகின்றன.

2020 இல் உலகத்தையும் எமது நாட்டையும் உலுப் பிக் கொண்டிருக்கும் கொரோனா (Covid 19 நோயின் தாக்கத்தினால் நாட்டின் பாடசாலைக் கல்வியில் பின் னடைவு ஏற்பட்டது. இந்நிலை எமது பாடசாலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், இக்காலத்தின் தேவைக் ககேற்ப நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி



மாணவர்கள் கற்றல் செயற்பாடுகள் புதிய பரிமாணத்தில் பயணிக்க ஆரம்பித்தன. Samrt வகுப்பறை கற்பித்தல், Virtual ரீதியான கற்பித்தல் (Zoom, WhatsApps செயலிகளின் பயன்பாடு) கல்வி அமைச்சின் தொலைக் காட்சி கல்வி என்பவற்றினூடாக மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டனர். மற்றும் பாடசாலையில் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கும் விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட் டன. மேலும்; அண்மைக்கால கல்வி இணைப்பாட விதான சாதனைகள் இப்பாடசாலையின் துரித வளர்ச்சி யினை எமக்கு தெளிவாக எடுத்து இயம்புகின்றது.

## இணைப்பாட விதான வெற்றிகள்

தமிழ்மொழி தினம், ஆங்கிலமொழி தினம், சிங்கள மொழி தினம், அரச சிறுவர் நாடக விழா, விளையாட் டுப்போட்டிகள், கணித விஞ்ஞானப்போட்டிகள். சமூக விஞ்ஞான போட்டிகள் போன்றவற்றிலும் அண்மைக்கா லங்களில் பல தேசிய மட்ட சாதனைகள் எட்டப்பட்டன.

2017 இல் செல்வன்.T.வேணுசஜீத் என்ற மாணவன் World Mathematics Team Championship - 2017 போட்டிக்காக தாய்லாந்து சென்று தங்கப்பதக்கத் தினை வென்றெடுத்தார்.

2018 இல் கணித வினாடி வினாப்போட்டிக்காக பின்வ ரும் மாணவர்கள் சிங்கப்பூர் சென்று இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வென்றெடுத்தனர்.

01. செல்வன்.A.S.H.சிமர்
02. செல்வன்.S.விவேக்சா
02. செல்வன்.V.வருணி
04. செல்வன்.K.நிருஜித்
05. செல்வன்.V.சஞ்ஜே

2019 இல் இந்தோனேசியாவில்; நடைபெற்ற இளம் புத்தாக்குனர் போட்டியில் செல்வன்.ஓ.முகேஷ்ராம் எனும் மாணவன் Smart Helmet இனை கண்டு பிடித்தமைக் காக வெள்ளிப்பதக்கத்தை வென்றெடுத்தார்.

2019 இல் தேசிய ரீதியல் நடைபெற்ற மல்யுத்த (Wrestling) போட்டியில் பங்குபற்றி செல்வன். கு.ஹரி ஜன் எனும் மாணவன் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக் கத்தையும், செல்வன்.நிஉ.அன்றாடோ எனும் மாணவன் 3ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

2020 இல் சுற்றாடல் முன்னோடி கழக ஜனாதிபதி பதக்க பரீட்சிப்பில் ஜனாதிபதி பதக்கத்தினைப் பின்வரும் மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்

01. செல்வன்.02 S.சதுசிகன் 02. செல்வன்.கீ.விகேஷ்
03. செல்வி.M.நேர்த்தனா 04. செல்வி.கு.சிரோமி

தற்காலத்தில் அதிபருடன், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனை வரினதும் ஒத்துழைப்புடன் அண்மைக்காலத்தில் பாடச ாலை துரிதமாக வளர்ச்சியைப் பெற்று வருகின்றது. அத்துடன் இவ்வளர்ச்சிக்கு எம் பிரதேச அரசியல்வாதி கள், வலயக்கல்விப்பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோர் பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

இந்த பலமான சமூக ஒருங்கிணைப்பினால் கார்மேல் பற்றிமா கல்லூரி எதிர்கால சவால்களை இலகுவாக வெற்றி கொண்டு முன்னேற்றப்பாதையில் தொடர்ந்து பயணிக்கும் என்பது உண்மை.

ஒளிர்வாய் என்ற மகுட வாசகத்திற்கிணங்க இப்பாட சாலையில் கற்ற கல்விமான்களினால் பாடசாலையின் பெயர் பாரெங்கும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. இனிவரும் காலங்களிலும் ஒளிரும் என்பதே எமது எதிர் பார்ப்பாகும்.

**தொகுப்பு : திருமதி. சுகன்யா ரவீந்திரகுமார் பழைய மாணவி (1978 -1990)**









### தேசிய மட்டப் பரீட்சை சித்தி வீதங்கள்

| ஆண்டு | தரம் 5 | க.பொ.த. சா/த | க.பொ.த. உ/த |
|---|---|---|---|
| 2017 | 91 | 93 | 52 |
| 2018 | 95 | 91 | 63 |
| 2019 | 96 | 91 | 63 |
| 2020 | 99 | - | - |





பழைய மாணவர்களின் அன்பளிப்பு



கராத்தே அணி

### பாடசாலைக்கான இலவச பத்திரிகைகளுக்கான நிதிப்பங்களிப்பு

1.Mr.L.pirashanth (2005 Batch )
2.Mr.B.Kohularajan 1995 Batch
3.Eng. Mrs.Puvirajini Vishnuruban 2007 Batch
4.Mrs.Rajeevi Cheagar 2006 Batch
5.Mr. Arasaretnam (Accountant) 1990 Batch
6.Mrs.Y.Jeyanithy 2003 Batch
7.Mr.S.Nilujan 2009Batch
8. Mr.Nadaraja Sangeeth 2000 Batch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தளராத உள்ளமே நிலையான மூலதனம்

## சாதனைப் பெண் பி.எம்.நர்மதா

எவ்வகையான சோதனைகள் வாழ்வில் வந்தாலும் ஆணாக இருந்தாலும் ,பெண்ணாக இருந்தாலும் தளராத உள்ளமும், விடாமுயற்சியும் ஒரு மனிதனை முன்னேற்றும். இதற்கு முன்னுதாரணம் இரண்டு கால்களும் இயங்காத பெண் பாண்டிருப்பைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியை மார்கிரட் புவிராஜசிங்கம் நர்மதா.

1980 ஆம் ஆண்டு பாண்டிருப்பில் திரு, திருமதி. மார்கிரட் புவிராஜசிங்கம் தம்பதியினருக்கு பிறந்த பெண்பிள்ளைதான் நர்மதா. பிறப்பில் இருந்தே இரு கால்களும் நடக்கமுடியாது. ஊனம் என்ற குறை உடலில் மட்டும் தான் உள்ளத்தில் இல்லை. தனது தாய் தந்தையின் அன்பு அரவணைப்பு அக்கறை நர்மதாவுக்கு ஊனம் என்பது ஒரு பொருட்டாக தெரியவில்லை வீட்டில் இருந்தே கல்விகற்றுள்ளார் .

தனது தந்தை ஆங்கிலம் பேச வாசிக்க தெரிந்ததால் அவரே இவருக்கு தந்தையாகவும் ஆசானாகவும் இருந்துள்ளார். வீட்டில் இருந்தவாறே தபால் மூலமும் ஆங்கில கற்கைநெறிகளையும் தொடர்ந்துள்ளார்.

தற்றுணிவும்,தளராத உள்ளமும் , விடாமுயற்சியும் இன்று யாரையும் தங்கிவாழாது தரம் ஒன்று முதல் தரம் பத்துவரை பிரேத்தியேகமாக ஆங்கில வகுப்புக்களை நடாத்தும் ஒரு சிறந்த ஆசிரியையாக உள்ளார் உண்மையில் நர்மதாவும் அவரது பெற்றோரும் சமூகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு என்றே கூறலாம்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கையில் இயங்கிய அரச சார்பற்ற நிறுவனங்களில் நிருவாக ரீதியான பதவிகளையும் வகித்து தொழில் புரிந்துள்ளார் இத்தனைக்கும் அடிப்படை மூலதனம் நர்மதாவின் உடல் வலிமையல்ல ,கல்வியும் மனவலிமையுமே.

விஷேட தேவையுடையவர்களின் நலன் பேணும் அமைப்புக்களிலும் முக்கிய பதவிகளில் அங்கம் வகித்து சமூகப் பணியினையும் தொடர்கின்றார்.

சரி , இனி நர்மதா என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்..

தையல் மெழுகுதிரி உற்பத்தி போன்றவற்றில் பயிற்சியும் பெற்றுள்ளதால் இத்தனைக்கும் மேலாக வீட்டில் ஓய்வு நேரத்தில் தையல் தொழில் மெழுகுதிரி உற்பத்தியிலும் ஈடுபடுகின்றேன்.

இவைகள் தனக்கு பொழுதுபோக்காகவும் வருமானம் ஈட்டுவதாகவும் உள்ளம் சோர்வடையாதிருப்பதாகவும் உள்ளது மாணவர்களுக்கு கற்பிப்பது ஒரு ஆத்ம திருப்தியை தருகின்றது. தனது கால்கள் நடக்கமுடியவில்லை என்பதை நான் ஒரு குறையாக நினைக்கவில்லை .

எனது தாய் தந்தை சில வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார்கள். அவர்கள்தான் எனக்கு தெய்வம் நான் குறையாக பிறந்தாலும் என்னை நிறைவாக உருவாக்கி வளர்த்த என் தாயும் தந்தையுமே என்றும் எனக்கு பலம் அவர்கள் இல்லாத குறை யாராலும் நிரப்பமுடியாது என்றார் நர்மதா.



# மங்கையர் மகுடம்

டாக்டர். புஸ்ப்பலதா லோகநாதன், ஜெனிற்றா மோகன்
jenikabishan@gmail.com



## பெண் நீதி வேறானது...

பிறக்கையில் தேவதை என்று அள்ளி முத்தமிட்ட உறவுகள்
வளர்கையில் குறைகூறியே மனதைக் குத்திக் கொல்வதுமேனோ..?
மழலைப் பருவம் ஆண் பெண் சமமென விளையாட விட்டதும் நீங்கள்தான்
படிப்பினில் ஆணுக்கு நிகர் நாமென தட்டிக் கொடுத்ததும் நீங்கள்தான்..

பணியிடம் செல்ல மட்டும் பாகுபாடு விதைப்பதுமேனோ..?
விமர்சனங்கள் தாண்டி வேலைக்குச் சென்றாலும் தாமதமாய்
வீடு வந்தால் சந்தேகக் கத்திகள் குத்துவதுமேனோ..?

வளர்க்கையில் யாவரும் சமமென சொன்ன வார்த்தைகள் வளர்ந்த பின்
ஆணுக்கு மட்டும் நிஜமாகி பெண்ணுக்கு நிழலாவதும் ஏனோ..?
கண்ணென்றால் இரண்டுமே தருவது ஓர் விம்பம்தான்
பெண்ணென்றால் பேதைதான் அன்றிப் போதையல்ல
எமை உயர்த்த வேண்டாம் சரிநிகர் நியாயம் போதும் சமூகமே.

**கவிக்காதலன்**



# ஆரோக்கியமான வாழ்வு

இன்றைய நவீன உலகிலே மனிதர்களிடையே பல்வேறுபட்ட வியாதிகள் காணப்படுகின்றன.இவை தொற்று நோய்கள் ,தொற்றா நோய்கள் என 2 வகைப்படும்.

விஞ்ஞானமானது போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சியடைந்து வரும் கால கட்டத்தில் நாம் வாழ்கிறோம். மருத்துவத் துறையானது நவீன வசதிகளுடன் முன்னேறினாலும் மனித உயிர்கள் தினமும் பல நோய்களினால் உயிரிழந்து கொண்டே செல்கின்றன.

ஆனால் விஞ்ஞானம் முன்னேறாத முன்னைய காலத்திலும் எமது முன்னோர்களும் இவ்வுலகில் வாழ்ந்துள்ளனர். தமது வாழ்நாட்களில் இவ்வாறான கொடிய நோய்களை இவர்கள் சந்தித்ததாகத் தெரியவில்லை. மருத்துவம் வளராத காலத்திலே நேரம் விரயமானாலும் உடல் உழைப்பின் மூலமே நம் முன்னோர்கள் சீவனத்தை நடாத்தினர். இயற்கையோடு ஒன்றித்த மனிதன் அதனையே தன் மூலாதாரமாகக் கொண்டான். ஆதன் காரணத்தால் இயற்கையை அழிக்காது அதனைப் பாதுகாத்தான். இதுவெ அன்றைய மனிதரின் ஆரோக்கியத்துக்கான இரகசியமாகும்.

எத்துறை வளர்ச்சியடைந்தாலும் உலகின் அடிப்படை அழியாதிருக்கையில் உலக உயிர்களுக்கு பாதிப்பில்லை என்பதே இயற்கை எமக்கு கூறும் செய்தியாகும். ஆரோக்கியமான வாழ்வினை வாழ இயற்கையோடு .இசைந்து ஒற்றுமையால் வாழ்வோம்.

**த.நிரக்சன்**



# குறுக்கெழுத்துப் புதிர்: 01

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | ■ | 2 | | 3 | |
| 4 | | | ■ | ■ | | ■ |
| | | ■ | 5 | ■ | 6 | |
| 7 | | | | | | ■ |
| ■ | | ■ | | ■ | | ■ |
| 8 | | ■ | | ■ | ■ | 9 |
| | ■ | 10 | | | | |

# கன்று

யௌவனா வசந்தன்,
பா.புஸ்பகாசினி
hasinipuspi@gmail.com

குறுக்கெழுத்துப் புதிர் குறிப்புகளிலுள்ள ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லை கட்டங்களில் நிரப்புங்கள். எடுத்துக்காட்டு 'BOOK' என்பது குறிப்பாக அளிக்கப்பட்டிருந்தால் நீங்கள் 'புத்தகம்' என்று கட்டங்களில் நிரப்ப வேண்டும். அடைப்புக் குறிக்குள் தமிழ் விடை சொல்லுக்கான எழுத்துகளின் எண்ணிக்கை உள்ளது.

**இடமிருந்து வலம்**

2. Threefourth (4)
4. Throat (3)
6. Grass (2)
7. Sides (6)
8. Stick (2)
10. Dots (5)

**மேலிருந்து கீழ்**

1. Calf (muscle) (6)
3. Comma (5)
5. Banks (5)
8. Crore (2)
9. Planet (2)

### குறுக்கெழுத்துப் புதிர் விடைகள்

**இடமிருந்து வலம்**
2. முக்கால், 4. தொண்டை, 6. புல், 7. பக்கங்கள், 8. கோல் 10. புள்ளிகள்

**மேலிருந்து கீழ்**
1. கெண்டை கால் 3. காற்புள்ளி 5. வங்கிகள், 8. கோடி, 9. கோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரம்...



சிவமகேஸ்வரன் கஜானி

காரைதீவு; 02



# மாணவர்களின் இலக்கு மீதான ஆசிரியர்களின் வகிபாகம்

பொதுவாகவே மாணவர்கள் எல்லோரும் தெளிவான இலக்குகளைக் கொண்டு அவற்றை நோக்கி முன்னேறுகிறார்களா? என்பதனை ஆசிரியர்கள் அவதானித்துக் கொள்ளவேண்டும் உணர்வுக் குழப்பங்களைக் கொண்டிருக்கும் மாணவர்கள் அல்லது உளப் பாதிப்புகளுக்கு உட்பட்ட மாணவர்கள் திசை தெரியாது தவித்துக் கொண்டிருப்பார்கள்.

அவர்கள் தமது இலக்கை தெரிவு செய்துகொள்ள ஆசிரியர்கள் உதவவேண்டும். இலக்கு நிர்ணயிக்கப்படும் போதுதான் வாழ்வில் நம்பிக்கை தோன்றும்.இலக்கினை தீர்மானிக்காது விட்டால் மாணவர்கள் இப்போது நிற்கும் இடத்தில் இருந்து உளரீதியாக அவர்கள் போக விரும்பும் இடத்திற்கு அழைத்துச்செல்வது சுலபமாகும்.

இலக்குத் தெளிவாகும்போது சுய பொறுப்புணர்வும் நெகிழ்வுத் தன்மையும் உருவாகும். அப்போது என்னால் முடியும் என்ற எண்ணத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துவது இலகுவானதாகும். குறுகிய கால நீண்ட கால இலக்குகளை செம்மையாக எடுத்துக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்த முனையும் போது வெற்றி என்ற நேரான சவாலுடன் முன்னேறுதல் சாத்தியப்படும்.

மாணவர்களின் உணர்வுகள் கொந்தளித்து எழுகின்ற நிலைமைகளில் கற்பனை வேலை செய்வது குறைவாக இருக்கும். நெருக்கீடுகளுக்குப் பிறகு ஒரு குறுகிய மனநிலை தோன்றலாம்ஆசிரியர்கள் அதனை வளப்படுத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வேலைகளில் இறங்குவது இயலும்.

இலக்கை நிர்ணயம் செய்யும் செயற்பாட்டின் போது மாணவர்களின் கவனமும் செயற்பாடும் குவியப்படுத்தப் படும். அவரது உளச்சக்தி வீண்விரயமின்றிச் சேமிக்கப்பட்டு நல்ல இலக்கை நோக்கிப் பெருமளவில் பயன்படுத்தப்படும். வாழ்வின் பிடிப்புத் தன்மை உயரும்.

இலக்குகளை அடைவதற்கான வழிகளை அடைவதற்கு நேர ஒழுங்கமைப்பு மிகவும் முக்கியமானது.

வாழ்வில் ஒரே விடயங்களைத் திரும்பத் திரும்ப செய்வது இலகு ஆனால் புதிதாக ஒரு விடயத்தைச் செய்வது ஆபத்தானது அதன் விளைவுகள் எதிர்வு கூற முடியாதவை அந்த அனுபவம் அழுத்தம் தருவது என்பதனையும் ஆசிரியர் மறந்து விடக்கூடாது.

மாணவர்கள் தமது சொந்த உணர்வுகளை கையாள முடியாதிருக்கும்போதும் மற்றவர்களின் மறு தாக்கங்களை எதிர்கொள்ள முடியாதிருக்கும்போதும் எதிர் விளைவுகள் பற்றிய பயம் இருக்கும்போதும் பழைய துன்பகரமான அனுபவங்கள் திரும்ப வருமோ? என்ற ஏக்கம் இருக்கும்போதும் விரும்பிய விடயத்தைச் செய்வதற்கான வினைத்திறன் இல்லாத போதும் அவருக்குத் தடைகள் தோன்றலாம். அந்த நேரத்தில் ஆசிரியர் உடன் இருந்து ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

மாணவர் இலக்கை இனங்காணச் செய்து அவர் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு உள ரீதியாக அவரைத் தயார்படுத்துதலில் ஆசிரியரின் பணி இன்றியமையாததாக அமைகின்றது.

இயற்கை அனர்த்தங்கள், போர் நிலைமைகள் இனக்கலவரங்கள் சிறுவர் துஸ்பிரயோகங்களின் பின்னரான நிலைமைகளில் மாணவர்கள் குழம்பிய மனநிலைகளில் உணர்வுகள் குழம்பிய நிலைமைகள் காணப்படலாம். இவர்கள் சரியான கற்றலையும் இலக்குகளையும் தீர்மானிப்பதில் இடர்படுகின்றவர்களாக காணப்படலாம். அந்த வேளைகளில் அவர்களின் பிரச்சினைகளைத்தேடல் ஆரம்பமாகும். இலக்குகளை அடையத் தேவையான செயல்கள் இனங்காணப்படும் பார்வை மாற்றங்கள் உறுதிப் படுத்தப்பட்டு பிரச்சினைத் தீர்விற்கான வழி தெளிவாகத் தெரியும் அளக்கக்கூடிய வாழ்வின் வெளியீடுகள் நிச்சயப்படுத்தப்படும்.



மாணவர் தமது இலக்குகளைத் தீர்மானிக்கும்போது அவை அவரது கட்டுப்பாட்டினுள் எட்டப்படக்கூடியதாய் இருத்தலையும் , அவரது விழுமியங்களுடன் முரண்படாது இருத்தலையும் ஆசிரியர் உறுதி செய்து கொள்வது நல்லது. அவை அந்த மாணவர்களின் சொந்த இலக்குகளா? என்பதனையும் கவனித்துக்கொள்ள வேண்டும். இலக்கு அல்லது நெருக்கீடுகளில் இருந்து விடுபடுவதற்கான தேவைகளையும் வழிமுறைகளையும் வழங்குகின்ற பொழுது அவர்கள் தங்களது இலக்குகளைத் தீர்மானிக்கின்றவர்களாக மாறக்கூடிய நிலைமை உருவாகும்.

அவ்வாறு உருவாகாமல் இடர்படுகின்ற மாணவர்களுக்கு அவரின் இலக்கைத் தீர்மானித்து முன்னேறுவதற்கு ஆசிரியர்கள் நூறு விகித பங்களிப்பினை மேற்கொள்ள வேண்டும். அந்த இடத்தில் ஓர் ஆசிரியர் ஒரு முக்கிய நபராகவும் ஒரு விடிவெள்ளியாகவும் கலங்கரை விளக்கமாகவும் மாறவேண்டிய நிலைமையும் மாற்றவேண்டிய கடமையும் உள்ளதால் ஆசிரியரின் வகிபங்கு இங்கு முக்கியம் பெறுகின்றது எனலாம்.

# வித்தகம்

கா.சாந்தகுமார், எஸ்.புனிதன்
k.shanthakumar1966@gmail.com

## 2023 அமுலுக்கு வரவுள்ள புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பான வரைவு - சுருக்கம்

1.பாடநூல்கள் ஆசிரியர் வழிகாட்டி நீக்கம்... அதற்குப் பதில் இதழ்வடிவ முறை (மொடியுல்)

2.முன்பள்ளி, தரம் 1,6,10 பூரண கலைத்திட்ட மாற்றம் 2023

3.பாடவேளைகள் 1 மணித்தியாலம் ஒரு நாள் 5 பாடவேளை மிகுதி உடற் கல்வி செயற்பாடுகள்

4.பாடசாலை தவணை முறை நீக்கம்... semister முறை அறிமுகம் 1 semister 12-14 வாரங்கள்

5.கற்றல் பேறு நீக்கம்... விருப்புக்குரிய நோக்கம் அறிமுகம்

6.கலவை கற்பித்தல் முறை அறிமுகம்
1.நேரடியாக கற்றல்
2.ICT கற்றல்( zoom, YouTube)

7.மொடியுல் தீம் அடிப்படையில் உருவாக்கம்

8.தரம் 9 இல் தேசிய பொது பரீட்சை அறிமுகம்

9.இடைநிலை பிரிவு மாற்றம்..... சிரேஷ்ட இடைநிலை தரம் 12-13, கனிஷ்ட இடைநிலை 6-11

10. தேசிய கல்வி குறிக்கோள் 6

11.பொது பரீட்சையில் எழுத்து பரீட்சைக்கு 60% புள்ளிகள் மிகுதி 40% செய்முறை அனைத்து பாடங்களுக்கும்

12. புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர்களின் mindset மாற்றம் தொடர்பான செயலமர்வுகள் 2021 இல் ஆரம்பம்.... இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி.

13.PTS பாடம் நீக்கம்

14.மீத்திறன் கூடிய மாணவர்கள் உரிய மொடியுல்களை குறிப்பிட்ட காலத்திற்கு முன் பூர்த்தி செய்து வகுப்பேற்றம் பெறலாம்.. அனைத்து வகுப்பறையிலும் மடிக்கணிணி மூலமே கற்றல் இடம்பெறும் 2023 தரம் 1,6,10 வகுப்பறைகள் மாற்றத்திற்குள்ளாகும்.

கணிணி அறிவின்றி 2023 இல் ஆசிரியர்கள் கற்றல் செயல்பாட்டில் ஈடுபட முடியாது.

புதிய வரைபுக்கு கல்வி மற்றும் கல்வி ராஜாங்க அமைச்சர்கள் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகப் பார்வையில் நெஞ்சை நிமிர்த்தி உச்சம் தொடட்டும்



இலங்கைத்தீவின் ஊடகத்துறைச்சவால்களை இப்போது உலகமே உற்றுநோக்கும் பின்னணியில் அறிவுசார்ந்த ஒரு சமூகத்தின் ஒரு அளவுகோல் ஊடகங்களே என்ற ஒரு பூகோள பிரக்ஞை நிலையும் உள்ளது.

ஒரு சமூகத்தில் இருந்து வெளிப்படைத்தன்மையுடன் ஊடகங்கள் வெளிவருவதை சுட்டி நிற்கும் அளவுமானிக்கு ஏற்பவே அரசியல் மயப்பட்டு அறிவுபூவமாகச் சித்திக்கக்கூடிய அந்த சமூகம் கூர்மதி நுட்பமும் அதுசார்ந்த முடிவுகளும் வெளிப்படும்.

அந்தவகையில் பல ஊடக முனையங்கள் உள்ள தாயகப்பரப்பில் இருந்து 'பரிமாணம்' என்ற ஒரு பத்திரிகையின் வருகை கிழக்கு வாழ் தமிழ்மக்களை குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் சமூகத்தை வெற்றிகரமாக அரசியல்மயப்படுத்தும் ஒரு முக்கிய வகிபாக முனையை கொண்டிருக்கும் என திடமாக நம்புகின்றேன்.

ஏனெனில் இந்த பத்திரிகையை முன்னோக்கி நகர்த்தும் செல்நெறியுடன் போராடிவரும் கேதீஸ், சகாதேவராஜா, குணராஜா போன்ற ஊடகப் போராளிகளை நான் நன்கு அறிவேன்.

காலத்தின் தேவைக்காகவும் ஞாலத்தின் தேவைக்காகவும் எழுச்சி கண்டுவரும் கிழக்கு ஊடகத்துறையில் பிரித்துப்பார்க்க முடியாதத ஊடக ஆளுமைகள் இவர்கள்.

இவர்களது வழி நடத்தலில் கல்முனை நெற் ஊடகம் எமது தமிழ் பேசும் சமூகத்தை அடுத்த ஒரு தளத்திற்கு முன்நகர்த்தும் என்று திடமாக நம்புகின்றேன்.

தமிழ் பேசும் சமூகத்தின் பிறழ்வுகளையும் பிற்போக்கான சிந்தனைகளையும் களைந் தெறிந்து ஒரு உன்னதமான நிலைக்கு எமது இனத்தை கொண்டுசெல்லவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு 'கல்முனை நெற்' ஊடகத்திற்கு இருக்கின்றது.

தனது ஊடகப்பாதையில் நீண்ட தூரம் நெஞ்சை நிமிர்த்தியபடி பயணிக்கவும் தொட முடியாத எல்லைகளைத் தொட்டுத் தேறவும் கல்முனை நெற்றை மனதார வாழ்த்துகிறேன்.

**நிராஜ் டேவிட்**
**நிரவாகப் பணிப்பாளர்**
**IBC தமிழ், தமிழ்வின், லங்காசிறி**

# நாளை "தமிழ் வான் அவை" நடத்தும் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 129 ஆவது பிறந்தநாள் விழா

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 129 ஆவது பிறந்தநாள் விழா இன்று 27 ஆம் திகதி ஆகும்.அதனையொட்டி ஜெர்மன் நாட்டிலிருந்து,'தமிழ் வான் அவை' நடத்தும் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 129 ஆவது பிறந்தநாள் விழா நாளை 28.03.2021 ஞாயிற்றுக் கிழமை இலங்கைநேரம் மாலை 06.30 க்கும் ஐரோப்பிய நேரம் பகல் 14.00 மணிக்கும் நடைபெறவிருக்கிறது.

'சூம்' இணையவழி மூலம் திருமதி கௌரி சிவபாலனின் நெறியாள்கையில் நடைபெற இருக்கின்ற இந்த பிறந்தநாள் விழா நிகழ்வில் இலங்கையிலிருந்து பேராசிரியர் செ. யோகராஜா 'விமர்சனத் துறைக்கு விபுலானந்த அடிகளாரின் பங்களிப்பு' என்ற தலைப்பில் பேச இருக்கின்றார்.



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
Founder:Ramakrishna Mission, Sri Lanka

பேராசிரியர் வே.ஞானசம்பந்தன் சுவாமி விபுலாநந்தரின் கவித்திறன் பற்றி உரையாற்ற இருக்கின்றார். தொடர்ந்து இந்தியாவிலிருந்து முனைவர் மு. இளங்கோவன் விபுலானந்த அடிகளாரின் ஆவணப்பட அனுபவம் பற்றி பேச இருக்கின்றார்.

லண்டனிலிருந்து திருமதி சுகிர்தகலா கடாட்சத்தின் கர்நாடக இசையும் இடம் பெறும். இவைதவிர நடனங்கள்பாடல்கள்கருத்துரைகள் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

# ஆலமரம் போல் வளரட்டும்



கல்முனையின் பெருமை தனை உலகறியச் செய்து கொண்டிருக்கும் கல்முனை நெற் குழுமத்தின் அடுத்தகட்டநகர்வாக பத்திரிகைவெளியிடும் ஆக்கபூர்வமான முடிவை அறிந்து மனம்மகிழ்கின்றோம்.

இப்பத்திரிகையின் வெளியீட்டுக் குழு சிறந்த திறமையும் ஆளுமையும் அனுபவமும் மிக்கவர்களால் அமைக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய விடயம். இப்பத்திரிகை நடுநிலை தவறாது நல்ல.செய்திகளையும் மக்களை நல்வழிப் படுத்தும்செய்திகளையும் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டுஇ ஆலமரம்போன்று வளர வேண்டும் எனமனமார வாழ்த்துவதோடுஎம்பாராட்டுக்களையும்தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நோ.விஜயரெட்ணம்**
**சீடாஸ் கனடா**
**அமைப்பின் தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைவடைந்த நிலையிலுள்ள ஆலங்குளம் ஆலயம்



## சரித்திரப்பார்வை

சஞ்சீவி சிவகுமார், வே.அரவிந்தன்
sariththiramkalmunai@gmail.com

‘சிவபூமி’என அழைக்கப்படும் இராவணேசன் ஆண்ட இலங்கையின்கண் பல தொன்மை வாய்ந்த இந்து ஆலயங்கள் உள்ளன. அவற்றில் அவ்வப்போது ஆண்ட ஆட்சியாளர்களின் கொள்கைளைப்பொறுத்து சிலஅழிக்கப்பட்டன.சிதைக்கப்பட்டன. உதாரணமாக போத்துக்கீசர் காலத்தில் பல்வேறு ஆலயங்கள் அழிக்கப்பட்டதை சரித்திரம் எமக்கு கூறுகிறது.

அந்தவகையில் இன்றையஅச்சுருவான ‘பரிமாணம்’ கன்னிஇதழின் சரித்திரப்பார்வையில் நாம் பார்க்கப்போவது எமது அம்பாறை மாவட்டத்தில் சிதைந்துபோய் இன்று கையறுநிலையிள்ள ஒரு புராதன ஆலயத்தை.

ஆம் இவ்வாலயம் அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேசசெயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. கல்முனை அக்கரைப்பற்று ‘எ4’ பிரதானவீதியில் அட்டாளைச்சேனை நகரிலிருந்து மேற்காக அழகான இயற்கை களனிகளுடாக 10கி.மீற்றர் தூரம் பயணிக்கையில் ஆலங்குளம் என்ற கிராமம் வரும். ஆலங்குளம் கிராமத்தை அடையாளப்படுத்துவதற்கு ஏ4 பிரதானவீதியில் வீதிஅபிவிருத்தி அதிகாரசபை (RDA) நட்டுள்ள பெயர்ப்பலகை காணப்படுவதனால் இலகுவாக அங்கு செல்லமுடியும்.

அக்கிராமத்தை ஊடறுத்து சலசலவென நீரோடும் அழகான வாய்க்கால் உள்ளது. ஆலங்குளம் பிரதானவீதியின்அருகே இன்றும் காணக்ககூடியவாறு இந்த சிதைந்த ஆலயமுள்ளது. அந்தக் கோயில் தான் ஆலங்குளம் கோயில்.

இடிந்த நிலையில் பாழடைந்து போய் மரங்கள் வளர்ந்து கருவறை கோபுரத்தை உடைத்து உள்ளே புகுந்திருந்தது. அர்த்த மண்டபத்தின் ஒரு பகுதியை ஆலமர விழுதுகள் மூடியிருந்தன. மகா மண்டபம் முற்றாக உடைந்திருந்தது. பரிவாரக் கோயில்கள் பற்றைகளால் மூடப்பட்டிருந்தன. கருவறையில் விக்கிரம் எதுவும் காணப்படவில்லை. பாழடைந்த கிணறு ஒன்று காணப்பட்டது.ஆலமரங்கள் ஆலயத்தை குடைந்து ஆக்கிரமித்திருந்தன. இவ்வாலயம் சிறிய விமானத்துடன் கூடிய கர்ப்பக்கிரகம் அந்தராளம் முன்மண்டபம் பலிபீடம் கொடிக்கம்பம் என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்டதை அடையாளப்படுத்த முடிந்தது.

இது சிவன்கோயிலா? பிள்ளையார் கோயிலா? என்பதிலும் எந்தக்காலப்பகுதிக்குரியது என்பதிலும் ஆலங்குளமா? ஆலங்கேணியா? பலருக்குச் சந்தேகம் உள்ளது. ஆதலால் வரலாற்றாய்வாளர்களின் கருத்துக்களை இவ்வண் நோக்கவேண்டியுள்ளது.

இக்கோயில் பற்றிய வரலாற்றை ஆராய்ந்தபோது பல விபரங்கள் கிடைத்தன.

ஆலங்குளம் எனும் இக் கிராமத்தின் பண்டைய பெயர் ஆலடிக்கல் என்பதாகும். பண்டைய காலத்தில் இங்கிருந்த ஆலமரத்தின் கீழ் ஒரு சிறிய பாறை அமைந்திருந்த படியால் இவ்விடம் ஆலடிக்கல் எனப் பெயர் பெற்றது. இங்கு சுமார் 150 வருடங்களுக்கு முன்பு தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவ்விடத்தின் அருகில் அவர்களின் நெற்காணிகள் இருந்த படியால் இங்கிருந்த ஆலமரத்தின் கீழ் ஓர் கல் பிள்ளையாரை ஸ்தாபித்து பூஜித்து வழிபட்டு வந்தனர். இந்தப் பிள்ளையார் கோயில் ஓர் திறந்த வெளி மரக் கோயிலாக அமைந்திருந்தது.





1871ஆம் ஆண்டு ‘ஆலடிக்கல்’ எனப் பெயர் பெற்றிருந்த இந்த இடம் 1891 ஆம் ஆண்டு ‘ஆலையடிக்கல்’ எனவும் 1901ஆம் ஆண்டு ‘ஆலையடிக் குளம்’ எனவும் திரிபடைந்து தற்போது ‘ஆலங்குளம்’ என அழைக்கப் படுகின்றது என்று வரலாற்றாய்வாளர் என்கேஎஸ்.திருச்செல்வம் கூறுகிறார்.

1891 ஆம் ஆண்டு இப்பகுதியில் 25 தமிழ் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். 1901ஆம் ஆண்டு இங்கு 20 பேர் இருந்தமை பற்றி இலங்கை குடிசன மதிப்பீடு கூறுகின்றது.

கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கல்லோயா அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டு இங்கினியாகல என்னுமிடத்தில் சேனநாயக்க சமுத்திரம் கட்டப்பட்டது. இது 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்பு இங்கினியாகல முதல் அக்கரைப்பற்று

வரையான பகுதியில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டபோது இங்குரானை என்னுமிடத்தில் சீனித் தொழிற்சாலையும் கட்டப்பட்டது.

சேனநாயக்க சமுத்திரத்தில் தேக்கிவைக்கப்பட்டிருந்த நீர் அதன் வலது கரை கால்வாய் மூலம் அக்கரைப்பற்றின் வடக்கிலுள்ள வலது கரை நெற்காணி களுக்கும் கிடைக்கும் வகையில் கால்வாய்கள் வெட்டப்பட்டன.இக்காலகட்டத்தில் அதாவது 1955ம் ஆண்டளவில் ஆலங்குளம் பகுதியில் இருந்த காடுகள் அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் குடியமர்த்தப்பட்டனர். இதன்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் சைவப் பெரியவர் இங்கு உயர் அதிகாரியாக் கடமையாற்றினார். இவர் இங்கிருந்த சைவ மக்களின் துணையுடன் ஆலமரத்தின் கீழ் திறந்த வெளியில் அமைந்திருந்த பிள்ளையாருக்கு ஒரு கோயிலை கட்டி பூஜை வழிபாடுகள் நடைபெற ஏற்பாடு செய்தார்.

அதன்பின்பு இக்கோயில் இப்பகுதியிலிருந்த சைவ மக்களால் நன்கு பராமரிக்கப்பட்டு வழிபடப்பட்டது. அதே சமயம் ஆலங்குளத்தில் அருகில் இருந்த அட்டாளச்சேனை பகுதியில் இருந்த முஸ்லிம் மக்களும் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டனர்.

இந்நிலையில் காலத்துக்காலம் இங்கிருந்த இரு இனங்களுக்கும் இடையில் ஏற்பட்ட சில கசப்புணர்வு சண்டையாக மாறி ஒரு கட்டத்தில் ஆலங்குளத்தில் இருந்த சைவ மக்கள் இக்கிராமத்தை விட்டு வெளியேறினர். அதன்பின்பு இங்கு முஸ்லிம் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இங்கிருந்த பிள்ளையார் ஆலயமும் கைவிடப்பட்டு அழிவுற்றது. அதன்பின் கருவறை மீது ஆலமரத்தின் விழுதுகள் வளர்ந்து ஆலய கட்டிடமும் இடிந்து சிதைவடைந்தது. சுமார் 150 வருட பாரம்பரியமிக்க இந்தப் பிள்ளையார் ஆலயம் இன்று பொலிவிழந்து இடிந்து காணப்படுகிறது.

ஒரு காலத்தில் சீரும் சிறப்புடன் விளங்கிய இவ்வாலயம் மீண்டும் கட்டியெழுப்பப் படுமா?.... என்பது இந்துக் கோயில்கள் மற்றும் இலங்கையில் உள்ள இந்து அமைப்புக்கள் கையில் தான் உள்ளது. என்கிறார் ஆய்வாளர் திருச்செல்வம் அவர்கள்.

இதேவேளை இவ்வாலயம் தொடர்பில் நேரடிக்களஆய்வில் ஈடுபட்ட கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றுத் துறை தலைவர் எஸ். சிவகணேசன் கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி தில்லைநாதன் ஆகியோரது ஆய்வு மேலும் பலஅரிய தகவல்களைத்தந்தது.


அது பற்றி அடுத்த சரித்திரப்பார்வையில் பார்க்கலாம்.

**பிரதம ஆசிரியர்**









# கிழக்கின் கவிச்சக்கரவர்த்தி நீலாவணன்

**1950** ஆம் ஆண்டளவில் எங்கள் மண்ணில் ஒரு நவீன இலக்கிய உணர்வு ஏற்பட்டது.இந்த நவீன காலத்து விடிவெள்ளிதான். அமரர் கவிஞர் நீலாவணன் .

இன்றைய எமது மண்ணுக்குரிய கவிஞர்களின் முன்னோடி என்றும் சொல்லலாம். மீசை கறுக்காத இளைஞனாக பெரிய நீலாவணையிலிருந்து அவர் எழுத ஆரம்பித்தநான்கு ஐந்து ஆண்டுகளிலே மட்டக்களப்பு.கல்முனை பகுதிகளின் சகல இடங்களிலும்நவீன இலக்கியத்தின் மெய்ப்பொருள் பலரிடமும் தோன்ற ஆரம்பித்தன.

அன்று எமது பிரதேசத்தினின்று யங்களைகாணலாம்.

இதற்கு சான்று ஏ ஜே.கே யின் பாராடைப்பெற்ற நீலாவணனின் ‘முருங்கைக்காய் கவிதையே எத்தனையோ நாட்களுக்கு பின் கவிதை சுரக்கிறது..அதை எழுத முனையும்போதுமுருங்கைக்காய் பறித்து தருமாறு மனைவி கேட்கவே..அவர் இசைந்து முருகையில் ஏறஅது முறிந்து அவர் கீழே வீழ்கிறார்.

‘அந்தோ வந்த அருங்கவி..

இந்த அமளி கண்டேங்கோ மறைந்ததே’ என்று நகைச்சுவையுடன் கவிதை முடிக்கிறார்.

கிழக்கின் கவிச்சக்கரவர்த்தி நீலாவணனின் அந்த கவிதை..இதோ..

சிறந்த கவிஞர்களாகவும் ,சிறந்த சிறுகதை ஆசிரியர்களாகவும் திகழ்ந்த மருதூர் கொத்தன், சத்தியநாதன், நுஹுமான், சடாட்சரன், மருதூர் கனி யாவரும் ஒரேஇலக்கிய பண்ணையில் வளர்ந்தவர்கள்.நுஹுமானும் ,சத்தியநாதனும் நீலாவணனின் பள்ளிதோழர்கள்.

இவர்கள் யாவரும் தங்களின் படைப்புகளினால் ஈழத்து இலக்கிய உலகில் ஒருநிலையான தாக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

இவர்களுடைய எழுத்துக்களாலும் இலக்கியமுயற்சிகளாலும்தான் 1962ல் கல்முனை எழுத்தாளர் சங்கம் உருவாகியது. இந்த சங்கத்தின் முதல் தலைவர் நீலாவணன் அவர்களே..செயலர் மருதூர் கொத்தன் .அதன் பின் வந்தவர்களே சண்முகம் சிவலிங்கம் பாண்டியூரான்போன்றோர்.இவர்கள் ஒருவரும் இன்றுஉயிருடன் இல்லை.

இன்று மட்டக்களப்பு பிரதேசம் ஒருகவிஞர்கள் நிறைந்த பிரதேசம் என்று சொல்லப்படுகிறது.இதற்கு கட்டியம் கூறியவர் அமரர்நீலாவணன் அவர்களே. இயற்கை தொடர்புகள் அற்றவற்றை தற்செயல் பொருத்தம் வருந்தி இணைப்பது ‘புனைவு’ (fancy) பொருள்களைஉருமாற்றி அவைகளை புதிதாக படைத்தல் ‘கற்பனை’(imagination)..இந்த நுட்பங்களை உய்த்தறிந்தவர் நீலாவணன் அவர்கள்.இவரின் கவிதைகளிலே உவமான உவமே

**‘கனநாள் கழிந்தொரு கவிதை**
**சுரந்தது..**
**கோப்பியொன்றடி த்தேன்..**
**கொப்பியை விரித்தேன்..**
**கூப்பிட்டாள் இவள் ..**
**ஏனோ என்றேன் ..**
**கறிக்கு புளியம்பழம்போலறால்**
**வாங்கி இருக்கிறேன்**
**அதற்குள் வைத்து குழம்பு வைக்க**
**முருகைக்காய் தான் ருசியாக**
**இருக்கும்**
**ஆதலால்....**
**அதோ நம் வாசல் முருங்கையின்**
**உச்சிக் கந்தில்...**
**ஒன்று இரண்டு மூன்று ..**
**நீண்டு முற்றிய காய்கள் ..**
**ஒருக்கால் ஏறி ..**
**உசுப்பி விடுங்கள் என்றாள்..**
**மறுக்கலாம் ..**
**மீண்டும் இரவுகள் வராவிடில்..**
**அதற்காய் இசைந்தேன் ...**
**அவள் விருப்பின்படி**
**முருங்கையில் ஏறி முறிந்து**
**விழுந்தேன் ..**
**அந்தோ வந்த அருங்கவி**
**இந்த அமளி கண்டெங்கோ மறைந்**
**ததே ’.....**

இப்படி அற்புதமான கவிதைகளை அறுபதுகளில் எழுதி கிழக்குமாகாண

இலக்கியப் பரப்பில் தடம்பதித்து முன்னோடியாக

இருந்த கவிஞர் நீலாவணனை ‘பரிமாணம்’ நினைவு கூர்வது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துயரங்களுடன் நாட்களை நகர்த்தும் நான்காம் கொலனி!

**புவிநேசராசா கேதீஸ்**

உலக மாற்றமும் வளர்ச்சியும் அசுர வேகத்தில் இடம் பெற்றுக் கொண்டிருந்தாலும் இன்றும் பல கிராமங்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாமல் உள்ளத்துடன் அங்கு வாழும் மக்கள் தினம் தினம் எதிர்நோக்கும் அவலங்கள் ஏராளமாகவே காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன் வெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குடியேற்றக் கிராமங்களில் ஒன்றுதான் மத்தியமுகாம் நான்காம் கிராமம் இரண்டு கிராம சேவகர் பிரிவுகளை உடைய நான்காம் கிராமத்தில் சுமார் எண்ணூறு குடும்பங்கள் வசிக்கின்றன. எண்பது வீதம் தமிழ் குடும்பங்களையும் சொற்பளவு முஸ்லிம் சிங்கள குடும்பங்களும் இதில் உள்டங்குகின்றனர். இங்கு ஆறு ஆலயங்களும் பாடசாலை ஒன்றும் உள்ளது. 1949 ஆம் அண்டு கல்லோயாத்திட்டத்தின் கீழ் 40கொலனிகள் குடியேற்றப்பட்டன அதில் ஒன்றுதான் நான்காம் கொலனி ( நான்காம் கிராமம்) கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக அதிகம் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவும் ஒன்று பல தடவைகள் உயிர் இழப்புக்களையும் உடைமை இழப்புக்களையும் எதிர்கொண்ட கிராம மக்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்த துயரச்சம்பவங்களும் உள்ளன. 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து கல்முனை பிரதேசத்தில் அகதிகளாக ஐந்து வருடங்கள் வாழ்ந்து பின்னர் உடைமைகள் அழிந்த நிலையில் இருந்த தங்கள் கிராமத்தில் மீளவும் குடியமர்ந்து வாழ்வை மீள ஆரம்பித்தனர்.







இந்த மக்கள் பல கனவுகளுடன் கட்டிய வீடுகள் உடைந்துகாணப்பட்டதுடன் வளர்த்த கால்நடைகள் இருந்த தடயம் இல்லை தோட்டங்கள் துறவுகள் காடு மண்டியது வேளாண்மையும் இல்லை பொருளாதாரம் பாதிக்கப்பட்டு மீளவும் தங்களை தாங்களே முன்னேற்றும் வகையில் இவர்களின் பிரதான தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டனர். இத்தனைக்கும் தங்களுக்கு சீரான நிவாரணமோ நஷ்ட்டஈடோ கிடைக்கவில்லை என இந்த கிராம மக்கள் ஆதங்கத்தை வெளிப்படத்தினர்.சீரான உட்கட்டுமான வசதிகள் இல்லை உடைந்த வீடுகளுக்கு பதிலீடு இல்லை அடிப்படை வசிதிகள் பல இல்லை இவ்வாறான காரணங்களும் கடந்தகால அச்ச சூழ்நிலை காரணங்களாலும் இயற்கையான வளங்கள் இருந்தும் பல குடும்பங்கள் மீளக்குடியமராது கடந்தகால இடம்பெயர்வோடு பல்வேறு பிரதேசங்களில் நிரந்தரமாக வசிக்கத்தொடங்கியிருந்தனர். இல்லையேல் மிகவும் அதிக சனக் கூட்டம் நிறைந்த பிரதான நகரமாக நான்காம் கிராமம் வளர்ச்சியடைந்திருக்கும் என்றால் மிகையல்ல.

தற்போதும் 800 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் பல குடும்பங்களுக்கு வீடுகள் இல்லை மலசலகூட வசதிகள் இல்லை சீரான வீதிகள் இல்லை குறிப்பிட்ட பகுதியில் மின்விளக்குகள் இல்லை கோடைகாலத்தில் குடிநீர் பிரச்சனை யானைத்தொல்லை என தேவைகளும் குறைபாடுகளும் அதிகமாக காணப்படும் இக்கிராமத்தில் நாவிதன்வெளி பிரதேச சபையில் அங்கம்வகிக்கும் இரண்டு பிரதேச சபை உறுப்பினர்களும் உள்ளமையும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



## ஒரேயொரு பாடசாலை

நான்காம் கிராமம் வேப்பையடித் தோட்டம் வாணி மகாவித்தியாலயம் என்பது அங்குள்ள ஒரேயொரு பாடசாலை. தரம் ஒன்று முதல் உயர்தரம்வரை வகுப்புக்களையுடைய வாணி மகாவித்தியாலயத்தில் சுமார்300 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் இந்த கிராமத்தின் முக்கியத்துவமான இப்பாடசாலை இன்றும் பல பௌதீகவளக் குறைபாடுகளுடன் இயங்குவது கவலையானவிடயமே. பாடசாலைக்கு சீரான சுற்றுமதில் இல்லாதால் ஆடு மாடுகள் பாடசாலை வளாகத்துக்குள் செல்கின்றது இது பாடசாலைக்கு நெருக்கடியாக காணப்படுவதுடன் பாதுகாப்பு குறைவால் பாடசாலையின் உபகரணங்கள் கதவுகள் உடைக்கப்பட்டு களவாடப்படும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளது இத்தனைக்கும் பாடசாலைக்கு ஒரு காலலாளி இல்லாதது பெரும் குறையும் உள்ளது. பாடசாலையின் பழைய கட்டிடம் ஒன்று உடைந்துவிழுந்தும் அதற்கான புதிய கட்டிடமோ புனரமைப்போ இதுவரை செய்யப்படாமலுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வகுப்பறை பற்றாக்குறையுடனும் பல்வேறு அசளகரியங்களுடன் இயங்கும் இப்பாடசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்து பல இன்னல்களை எதிர்நோக்கிய இக்கிராம மாணவர்களின் கல்வியை முன்னேற்ற வேண்டியது பொறுப்புவாய்ந்தவர்களின் கடமையாகும்.

## காடுமண்டிக்கிடக்கும் பொதுச் சந்தை

பொதுச்சந்தைநான்காம் கிராமத்திற்கென அமைக்கப்பட்ட பொதுச்சந்தை நீண்ட காலமாக இயங்காமல் காடுமண்டி கால்நடைகளின் தங்குமிடமாக காணப்படுகின்றது .குறித்த வளத்தை மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் பயன்படுத்த சந்தையை இயங்கச்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது நாவிதன் வெளி பிரதேசசபையின் பொறுப்பாகும் இதற்கான ஒத்துழைப்பை வழங்குவதுடன் கிராமத்தின் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டியதும் கிராம பொதுமக்களின் கடமையுமாகும். வீணாகும் வளங்கள்அரசசார்பற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட பெறுமதியான வளங்கள் பயன்படுத்தப்படாமல் வீணாகுவது மிகுந்த வேதனையான விடயமாகும் கிராமத்தில் உள்ள பொதுமக்களும் பொது அமைப்புக்களும் இதில் அதிக அக்கறை செலுத்தி சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இவற்றை கிராமத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும்.



குறித்த வளங்கள் இந்த கிராம மக்களே பயன்படுத்தி நன்மையடைய உரிய அதிகாரிகள் அரசியல்வாதிகள் பொறுப்பு வாய்ந்த கிராம பொது அமைப்புக்கள் ஒரு திட்டத்தை தீட்டி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.





# நடுநிலை ஊடக சேவை தொடர நல்வாழ்த்துகள்



இணையத்தளமாக மின்னிதழாக செய்திகளை வழங்கி வந்த கல்முனை நெற் அம்பாறை மாவட்டத்தில் இருந்து முதலாவது செய்திப்பத்திரிகையை அச்சிலும் வெளியிடுவது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

கல்முனை நெற் ஊடக குழுமத்தில் பல துறை சார்ந்த சமூகஆர்வலர்கள் அனுபவம்வாய்ந்த ஊடகவியலாளர்கள் ஒருங்கே இணைந்து செயற்படுவது என்பது மிகவும் பாராட்டுக்குரியதும் பெறுதியானதுமாகும். கல்முனை நெற் ஊடக வலையமைப்பு மேலும் மேலும் வளர்ந்து நடுநிலையான ஊடக சேவையை தொடர்ந்து வழங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

சமுகத்தின் தேவைகளையும் உணர்வுகளையும் நிலைமைகளையும் வெளிப்படுத்துவது ஊடகங்களே.. ஊடகங்களின் வளர்ச்சியும் வரவும் மிகவும் அவசியமானது. அந்த வகையில் கல்முனை நெற் ஊடகம் கடந்த ஐந்து வருடங்களாக காத்திரமான சேவைகளை செய்துவருவதனை அவதானிக்க முடிந்தது. செய்திகளோடு மாத்திரம் நின்றுவிடாது அவ்வப்போது பல சமூகப் பணிகளையும் செய்து வருகின்றமை கல்முனை நெற் ஊடகத்திற்கான ஒரு தனிப் பண்பு என்றே கூறலாம்.

**விநாயகமூர்த்தி**
**முரளிதரன்**
**(முன்னாள் பிரதி அமைச்சர்)**
**பிரதமரின் இணைப்பு செயலாளர்**
**மட்டக்களப்பு - அம்பாறை**

# இன ஐக்கியத்திற்கு ஊடகங்கள் பங்காற்றவேண்டும்



'கல்முனை நெற்' ஊடக வலையமைப்பின் 'பரிமாணம்' என்றஅச்சுப்பதிப்புக்கு இந்த ஆசிச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த பல வருடங்களாக 'கல்முனை நெற்' இணையத்தளமானது இப்பிராந்தியத்தின் கல்வி கலாசாரபொருளாதார மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்து வருவதுடன் சமூகப் பிரச்சனைகளை வெளிக்கொணர்வதிலும் முக்கிய பங்காற்றி வருகின்றது.

இதன் ஒரு வளர்ச்சிப்படியாக கடந்த சில மாதங்களாக வாரம் தோறும் மின்னிதழ் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையில் மிகக்குறுகிய காலத்தில் அச்சுப் பத்திரிகையை வெளியிடுமளவுக்கு ஆதரவு பெருகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறானதொரு பத்திரிகை கல்முனையில் இருந்து வெளிவருவதையிட்டு கல்முனை மாநகர முதல்வர் என்ற ரீதியில் நான் மகிழ்ச்சியும் பெருமையுமடைகின்றேன்.

கல்முனை என்பது தமிழ், முஸ்லிம் மக்கள் செறிவாகவும் இணைந்தும் வாழ்கின்ற ஒரு சிறப்புமிக்க மண்ணாகும். இங்கு இவ்விரு சமூகத்தினரும் காலாகாலமாக மிகவும் புரிந்துணர்வுடன் ஐக்கியமாக வாழ்ந்து வந்திருக்கிறோம். எவ்வாறாயினும் ஈழப்போராட்டத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இரு சமூகத்தினரிடையேயும் சந்தேகம், முரண்பாடுகள் உருவாகி, அது இன்றுவரை நீடித்துச் செல்வதானது கவலைக்குரிய விடயமாகும்.

ஆகையினால் இப்பிராந்தியத்தில் தமிழ்,முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்புவதற்கு கல்முனை நெற் போன்ற ஊடகங்கள் மிகவும் கரிசனையுடன் பங்காற்ற வேண்டிய அவசியம் இருக்கின்றது. இன முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய விடயங்களை முற்றாகத் தவிர்த்து, மக்களிடையே உண்மையான செய்திகளை மாத்திரம் கொண்டு செல்வதன் மூலம் இப்பிராந்தியத்தில் இனவாதத்தையும் பிரதேசவாதத்தையும் துடைத்தெறிவதற்கு கல்முனை நெற் பங்காற்றும் என நம்புகின்றேன்.

மேலும் கல்முனை நெற் பத்திரிகையானது ஊடக தர்மம் பேணி உண்மையை முன்னிலைப்படுத்தி நடுநிலை ஊடகமாக செயற்படும் என்கிற நம்பிக்கையுடன் அது சவால்கள் அனைத்தையும் வெற்றிகொண்டு பயணிக்க ஆத்மார்த்தமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சட்டத்தரணி**
**ஏ.எம்.றகீப் LLB, JPUM**
**கல்முனை மாநகர முதல்வர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிநடை போட வாழ்த்துகின்றேன்



அம்பாறை மாவட்டத்தில் முதன் முறையாக ஒரு பிராந்திய செய்திப் பத்திரிகை, அச்சு ஊடகமாக பரிணாமம் பெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதோடு, வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கல்முனைநெற் ஊடக வலையமைப்பு கடந்த ஐந்து வருடங்களாக இலத்திரனியல் ஊடகமாக கல்முனைப் பிராந்திய மற்றும் ஏனைய பல செய்திகளையும் உடனுக்குடன் இணையத்தளம் ஊடாக மக்களுக்கு கொண்டுசேர்த்துக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் சிறிது நாட்களுக்கு முன்னர் பிரதம ஆசிரியராக திரு. வி.ரி.சகாதேவராஜா அவர்களையும், இணை ஆசிரியராக திரு.கு.கேதீஸ் மற்றும், ஆலோசகராக திரு.க.குணராசா ஆகியோரைக் கொண்ட இயக்குநர் சபை உதவியுடன் மின்னிதழ் ஒன்று வெளிவரத் தொடங்கியது. அவ் வெளியீட்டு வாழ்த்துச்செய்தி வழங்கிய வேளையில், இம் மின்னிதழ் மிகவிரைவில் எமது பிராந்தியத்தில் அச்சு ஊடகமாக வெளிவரவேண்டும் என்னும் எதிர்பார்ப்பை குறிப்பிட்டிருந்தேன். அந்த எதிர்பார்ப்பு மிக விரைவில் சாத்தியமாவதையிட்டு பெரு மகிழ்வு கொள்கின்றேன். இதற்காக பாடுபட்டு உழைத்துக்கொண்டிருக்கின்ற இயக்குனர் சபை மற்றும் இதற்காக உதவிக் கொண்டிருக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் பாராட்டுக்களை தெரிவிப்பதோடு, இம்முயற்சி வெற்றியடையவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**வேதநாயகம் ஜெகதீசன்,**
**மேலதிக மாவட்ட செயலாளர்**
**அம்பாறை.**

# ஊடகப்புரட்சியில் மற்றுமொரு பரிமாணம்

உலகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளர் அவதரித்த நன்னாளில் உதயமாகும் கல்முனை நெற்ஊடகவலையமைப்பின் பரிமாணம் பத்திரிகைக்கு இந்த வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.

கடந்த ஐந்து வருட காலமாக கல்முனை நெற் இணையத்தளமானது இப்பிராந்தியத்தினதும் சிறுபான்மைச் சமூகங்களினதும் உரிமைகளுக்காகவும் இன



ஐக்கியத்துக்காகவும் சிறப்பாக பங்களிப்பு செய்து வருவதை நானறிவேன்.

இராமபிரான் இலங்கைக்கு பாலம் அமைக்கின்றபோது அணில் எவ்வாறு உதவியதோ அதுபோல இப்பத்திரிகையின் வரவுக்கு எனது பேச்சும் காரணமாயமைந்திருப்பதையிட்டு புளகாங்கிதமடைகின்றேன்.

ஆம் தைப்பொங்கலன்று தம் பலவத்தை தென்னந்தோப்பில் இடம்பெற்ற வாரமின்னிதழ் வெளியீட்டுவிழாவில் பிரதமஅதிதியாகக்கலந்துகொண்டுரையாற்றும்போது இம்மின்னிதழ் விரைவில் அச்சிலும் வெளிவர வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். அதனை சிரமேற்கொண்டு இவ் ஊடகவலையமைப்பினர் இத்துணை துரிதமாக செயற்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

இந்நிலையில் 'பரிமாணம்' மேலும் ஊடக தர்மம் பேணி சவால்கள் அனைத்தையும் முறியடித்து வெற்றிநடைபோடுவதற்கு மனமார வாழ்த்துகிறேன்.

**Dr. குண.சுகுணன்**
**பிராந்திய சுகாதார**
**சேவைப்பணிப்பாளர்**
**கல்முனை**

# வரலாறு படைக்க வாழ்த்துக்கள்




கல்முனை நெட் இணையத்திலிருந்து கல்முனைநெட் அச்சுப்பதிப்பாக 'பரிமாணம்' எனும் வரலாற்றுப்பத்திரிகை வெளிவரப் போகின்றது என்ற நிகழ்வு உண்மையில் பழம் நழுவி பாலில் விழுந்த கதையாய் மனதில் இனிக்கின்றது. முதல் தமிழ் புத்தகம் உரோமன் எழுத்துருவில் அச்சிடப்பட்டதாகவும் 1554 பெப்ரவரி 11 அன்று அது வெளியிடப்பட்டதாக வரலாறு கூறுகிறது. தமிழ் அச்சுநிலையில் பின்தங்கியிருந்த 19ம் நுற்றாண்டுக்கு முந்திய நுற்றாண்டுகளில் நாம் பெருந்தொகை இலக்கியங்களை அச்சுபதிப்பு செய்யாத காரணத்தினால் இழந்துவிட்டோம். இன்று கிடைக்கும் இலக்கியங்கள் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பதிக்கப்பட்ட இலக்கியங்களே. வீரமாமுனிவர் அச்சுப் பதிப்பில் தொடக்கி வைத்ததை ஆறுமுகநாவலர் இலங்கையில் கையாண்டு தமிழையும் சைவத்தையும் காத்தவரலாறுகள் நாம் அனைவரும் அறிந்தவை.

கல்வெட்டுக்களில் ஈழத்தமிழனின் வரலாறு சரியான முறையில் பதிக்கப்படாததன் தாக்கம் இன்று சகலராலும் உணரப்படுகிறது. ஆனாலும் இந்தியாவில் கிடைத்த கல்வெட்டுக்களில் 557 தமிழ் கல்வெட்டுக்கள் என்பது தமிழுக்கு ஓர் ஆறுதல். திரு.பு.கேதீஸ் என்கின்ற ஒரு ஆளுமைமிக்க ஊடக வீரனின் முழு முயற்சியில் பெரும் மதிப்புக்குரிய தினகரன் பிரதம ஆசிரியர் திரு.க.குணராசா அவர்களை ஆலோசகராக கொண்டு ஊடகவியலின் சிகரம் திரு.வி.ரி. சகாதேவராஜா அவர்களை பிரதம ஆசிரியராக கொண்டு அச்சில் வெளிவரப்போகின்ற கல்முனைநெட் ஆசிரியர்குழுவில் ஒவ்வொருவரும் எழுத்துலகின் பட்டை தீட்டப்பட்ட மாணிக்கங்கள். 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்.' என்கிறது தமிழ்விடுதூது (19ம் நூற்றாண்டின் பிங்கல நிகண்டு) 'துணிச்சலும் தமிழும் கல்முனை நெட் எனலாகும' என்கிறது கல்முனைவிடுதூது. இன்றைய எங்களின் காலம் இது சங்ககாலம் போன்றது அல்ல இலகுவில் தமிழ் வளர்க்க. இது களப்பிரர்கள் சூழ்ந்த சங்கமருவிய காலம். இங்கே தமிழைக் காப்பாற்ற புதுப்பொலிவுடன் வருகிறது பரிமாணம் பத்திரிகை. இது வரலாற்றை பதிவு செய்து , வரலாற்றை படைத்திட வாழ்த்துகிறேன்.

**வைத்திய கலாநிதி**
**இரா. முரளீஸ்வரன்**
**வைத்திய அத்தியட்சகர்**
**ஆதார வைத்தியசாலை**
**கல்முனை (வடக்கு)**

# பரிமாணம் ஒரு பரிணாமம்



கல்முனை நெற் ஊடகக்குழுமம் கடந்த ஐந்து வருடங்களாக இப்பிரதேசத்தின் செய்திகளை உடனுக்குடன் வழங்கிவருகின்றது.அத்துடன் ஊடகச்சேவைக்கு அப்பால் பல்வேறுபட்ட சமூகப்பணிகளையும் இப்பிரதேசத்திற்கு வழங்கிவருவதை நான் நன்கறிவேன்.இதன் வளர்ச்சிப்பயணத்தில் ஒரு அங்கமாக தைத்திருநாளில் வாராந்த மின்னிதழை வெளியிட்டுவைத்தது. இன்று அது ஒருபடிமேலே சென்று வரலாற்றில் மைல்கல்லாக விளங்கக்கூடிய ''பரிமாணம்'' என்ற அச்சுப்பத்திரிகையை வெளியிடுகின்றது..

சம காலத்திற்கேற்ப மக்களுக்கு தேவையான சரியான உண்மையான தகவல்களை வழங்கவென இவ்விணையக்குழுமம் ஊடகப்புரட்சியொன்றை ஆரம்பித்துள்ளமை மிக்க மகிழ்ச்சிதருகிறது.மின்னிதழின் வகிபாகத்திற்கு அப்பால் அச்சுப்பத்திரிகையின் தாக்கம் அதீதமானது.

இப்பத்திரிகையின் வளர்ச்சி உச்சத்தை தொட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**ரி.ஜே.அதிசயராஜ்**
**பிரதேச செயலாளர்**
**கல்முனை வடக்கு**

# தேசிய ஊடகங்களுக்கு நிகரான பத்திரிகை

இணைய வெளியில் இதுவரை தன்னை உலகுக்கு அடையாளம் காட்டிய 'கல்முனைநெற்' இன்றில் இருந்து 'பரிமாணம்' என்ற பெயரில் அச்சு வடிவில் தடம் பதிக்கிறது. இதன் மூலம், அம்பாறை மாவட்டத்தில் இருந்து வெளிவரும் முதலாவது தமிழ்ப் பத்திரிகை என்ற பெருமையை தனதாக்கிக் கொள்கிறது.

என்னதான் நாம் நவீனத்துவத்துக்குள் காலடி எடுத்து வைத்தாலும், அச்சு வடிவில் அதனை பார்க்கின்ற போது அடையும் திருப்தியும் தெளிவும் மட்டற்றது.

'கல்முனை நெற்' இணைய செய்திகளும் மின்னிதழும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றிருக்கும் நிலையில்தான் , அடுத்த பரிமாணத்துக்குள் பிரவேசித்து அச்சு வடிவிலும் காலூன்றுகிறது.

வாசகர்கள் மத்தியில் இந்தப் பத்திரிகையும் நன்மதிப்பைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு சமூகத்தின் அளவுகோல் ஊடகம் என்பார்கள். உண்மை....மக்களை அரசியல் மயப்படுத்தி வழி நடத்துவதில் ஊடகங்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.ஜனநாயக விழுமியங்கள் இதற்கு வித்திட்டு வழிகாட்டி நிக்கின்றன.

அந்தவகையில், முத்த ஊடகவியலாளர் சகாதேவராஜாவை

பிரதம ஆசிரியராகவும்

தம்பி புவிநேசராஜா கேதீஷை முகாமைத்துவ ஆசிரியராகவும் கொண்டு செயல்படும் 'கல்முனை நெற்' ஊடக வலையமைப்பின் பரிமாணம் பத்திரிகை, கிழக்கு வாழ் மக்களின் அரசியல்,பொருளாதார,சமூக அபிவிருத்திக்கு முக்கிய பங்களிப்பை நிச்சயம் வழங்கும்.

இந்தப் பரிமாணம், பிராந்திய ஊடகம்



என்றாலும், ஊடக ஒழுக்க நெறியும் ஊடக தர்மமும் பேணப்பட்டு மக்களின் குரலாக நெஞ்சு உறுதியுடன் களத்தில் நிற்கும் என்பதை மனமகிழ்வோடு கூறுகின்றேன். தேசிய ஊடகங்களுக்கு நிகராக ஜனநாயகப் பெருவெளிக்குள் பிரவேசிக்கும் கல்முனைநெற் பத்திரிகை வாசகர் நெஞ்சங்களை தொடும் என்பதில் சந்தேகமில்லை. ஜனநாயகத்தின் நான்காவது தூண் ஊடகம்.

மக்களை விழிப்பூட்டுவதும் இதன் தலையாய பணி என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. புதிய தடம் பதிக்கும் கல்முனைநெற் ஊடக வலையமைப்பின் பத்திரிகையான 'பரிமாணம்' அதனை சரிவரச் செய்யும் என்பதை மனமகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன் .

இந்த, அச்சு ஊடகப் பயணம் சிறக்க எங்களுடன் தோளோடு தோள் நின்று உழைக்கும் பக்கங்களின் பொறுப்பாசிரியர்களுக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

**க.குணராசா**
**முன்னாள் தினகரன் பிரதம ஆசிரியர் , கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் ஆசிரியர் பீட ஆலோசகர்**

# கிழக்கு ஊடகத்துறை வரலாற்றில் புதிய தடம் பதிக்கும் கல்முனைநெற்

200வருட வரலாற்றைக்கொண்ட இலங்கையின் ஊடகத்துறை இன்று பத்திரிகைவானொலி தொலைக்காட்சி இணையத்தளம் ஈபத்திரிகை என பல தளங்களை கொண்டு விரிந்திருந்தாலும் அச்சுவடிவில் வரும் பத்திரிகைக்கு தனியான இடம் உண்டு. என்னதான் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து ஊடகத்துறை பல்வேறு தளங்களாக விரிந்திருந்தாலும் பாமர மக்களின் கைகளை சென்றடைவது அச்சு வடிவிலான பத்திரிகைதான்.

கல்முனையிலிருந்து வெளிவரும் 'பரிமாணம்' என்ற இந்த பத்திரிகை அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளிவரும் முதலாவது தமிழ் பத்திரிகை என கல்முனை நெற் ஊடகத்தின் ஸ்தாபகர் கேதீஸ் என்னிடம் தெரிவித்தார். இந்த தகவல் சரி என்றே நானும் நம்புகிறேன்.

கல்முனைநெற் இணையத்தளம் அண்மைக்காலமாக கல்முனைநெற் ஈபேப்பரை வெளியிட்டு வந்தது. இணையத்தளமும் ஈபேப்பரும் கணிசமான வாசகர்களை கொண்டு சிறப்பாக வெளிவந்து கொண்டிருந்தது.

அச்சுவடிவிலான பத்திரிகை பாமரமக்களின் கைகளுக்கும் கிடைக்கும் போது அதற்கான தனிமதிப்பும் வரவேற்பும் அதிகமாக இருக்கும்.

அம்பாறை மாவட்டத்தின் குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு கல்முனைநெற்



தனது பங்களிப்பை செய்யும் என நம்பலாம்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மூன்றாவது சிறுபான்மை இனமாக அரசியல் பொருளாதார விடயங்களில் புறக்கணிக்கப்பட்ட இனமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையை மாற்ற தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த கல்முனைநெற் தனது பணியை சிறப்பாக செய்ய வேண்டும்.

பொதுவாக கிழக்கு மாகாணத்திலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் சொற்ப ஆயுளுடன் நின்று போன வரலாற்றைத்தான் நாம் பார்க்கிறோம்.

அந்த நிலையை மாற்றி கல்முனைநெற் கிழக்கு மாகாண தமிழ் மக்களின் ஆதரவுடன் நீடித்து நிலைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**இரா.துரைரத்தினம்**
**சிரேஸ்ட ஊடகர்**

சமத்துவ மக்கள் நல ஒன்றியம்

கல்முனைநெற் ஊடக வலையமைப்பின் 'பரிமாணம்' பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்

திருவள்ளுவர் மக்கள் சேவை ஒன்றியம்

அறம் செய்ய விரும்பு

கல்முனைநெற் ஊடக வலையமைப்பின் 'பரிமாணம்' பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் தொடர் வன்முறைகள்

## ● ஐ.நா. சிறப்பு தூதர் கண்டனம்



மியான்மரில் அதிகரித்து வரும் போராட்டக்காரர்கள் மீதான ராணுவ தாக்குதல்களுக்கு ஐ.நா. பொதுச்செயலாளரின் சிறப்புத் தூதர் கிறிஸ்டின் ஷ்ரானர் புர்கெனர் (Christine Schraner Burgener) தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். .மியான்மரில் கடந்த மாதம் 1ந் தேதி ஆங் சான் சூகி தலைமையிலான ஆளும் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பதவியை ஏற்கவிருந்த நிலையில் இந்த வெற்றி முறைகேடாக பெறப்பட்டது என குற்றம்சாட்டி வந்த அந்த நாட்டு ராணுவம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகி தலைமையிலான அரசைக் கவிழ்த்து விட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் என ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்கள் பலரையும் ராணுவம் அதிரடியாக கைது செய்தது.கடந்த 5 வாரங்களுக்கும் மேலாக ரகசியமான இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். ஆங் சான் சூகி மீது பல்வேறு போலி ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி நீதிமன்றில் விசாரணை நடத்தி வருகிறது.

இதைத்தொடந்து கடந்த 5 வாரங்களுக்கும் மேலாக ஆங் சான் சூகியின் ஆதரவாளர்கள் ராணுவத்திற்கு எதிராக போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். ராணுவ ஆட்சிக்கு எதிரான மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில் ராணுவம் போராட்டக்காரர்கள் மீதான தங்களது அடக்குமுறையை அடக்க துப்பாக்கிச் சூடு நடத்தி போராட்டக்காரர்களை விரட்டியடிப்பதை மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் குறைந்தது 38 பேர் மியான்மரின் முக்கிய நகரங்களான யாங்கூன், மாண்டலே உள்ளிட்ட நகரங்களில் பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூட்டால் இறந்ததாக கூறப்படுகிறது. யாங்கூன் நகரத்தில் மட்டும் 22 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை 126 பேர் இறந்துள்ளதாகவும் கைது செய்யப்படடவர்களின் எண்ணிக்கை 2,150 க்கும் அதிகமானவர்களாக உயர்ந்துள்ளதாக அரசியல் கைதிகளுக்கான உதவி சங்கம் (Assistance Association for Political Prisoners AAPP) கூறியுள்ளது.

இந்த நிலையிலேயே மியான்மரில் ராணுவத்தினரின் தாக்குதலினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு ஐ.நா. பொதுச்செயலாளரின் சிறப்பு தூதர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# உலக வலம்

சபா தயாபரன்
sabathayaparan@gmail.com

பீனிக்ஸ் விளையாட்டுக் கழகம்
Phoenix sports club
Qatar - Srilanka
கல்முனைநெற் ஊடக வலையமைப்பின் 'பரிமாணம்' பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்

# பிரிட்டன் சீன ஒப்பந்தத்தை மீறும் சீனா



1997 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சர் மற்றும் சீனப் பிரதமர் ஜாவோ சியாங் ஆகியோர் பிரிட்டன் ஹாங்காங்கை சீனாவுக்குத் திருப்பித் தரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அந்த ஒப்பந்தத்தில் 204% ஆண்டு வரை ஒரே நாடு ஆனால் சீனாவில் வேறு ஹாங்காங்கில் வேறு ஆட்சியமைப்பு என்ற நிலை தொடர வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது சீனா அரசினால் ஹாங்காங்கின் சட்டங்களை மாற்றி அமைக்க கொண்டு வந்த பிரேரணையானது சீனாவுடன் பிரிட்டன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுவதாக அமைகிறது என்று பிரிட்டன் வெளியுறவுத்துணை அமைச்சர் தெரிவித்தார்.

ஹாங் காங் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தை திணிக்க சீனா முடிவு செய்துள்ளது ஹாங் காங்கின் இதுவரை கடைப்பிடித்து வந்த சுதந்திரம் தன்னாட்சி உரிமைகள் என்பன பறிக்கப்பட்டு ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதாகவும் உள்ளது என்று பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா கனடா டென்மார்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் தங்கள் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

சீனா சர்வதேச நியமங்களை கடமைகளையும் கடைபிடிக்கவேண்டும் என்று உலக நாடுகள் சீனாவை வலியுறுத்தியுள்ளன.

சீன காங்கிரஸினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் படி ஹாங் காங்கின் தேர்தலில் தேசபக்தர்கள் மட்டுமே போட்டியிடலாம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனால் எதிர்கட்சியினர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.இதனால் சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை முன்வைப்பவர்கள் தேசத்து துரோகிகள் என்று சீனாவில் கடைபிடிக்கும் மனப்போக்கை ஒத்ததாகவே இதைக் கருத முடிகிறது என்று அரசியல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

உலகின் சக்தி மிக்க தலைவராக வலம் வந்து கொண்டிருக்கும் சீன அதிபர் உலக நாடுகளின் கோரிக்கையை ஏற்று கீழிறங்கி வருவாரா என்பதே இப்போது தொக்கி நிற்கும் கேள்வி.

'நான் அடைபட்டிருக்கும் சிறையானது உண்மையான ஒரு சித்திர வதைக்கூடம்' ரஷ்ய அரசு எதிர்ப்பாளர் அலெக்ஸி நவல்னி.

மாஸ்கோவிற்கு கிழக்கே 85 கி.மீ (53 மைல்) தொலைவில் உள்ள விளா டிமிர் பிராந்தியத்தில் உள்ள போக்ரோவில் உள்ள ஐ.கே 2 சிறை வளாகத்தில் உள்ள ஒரு சிறையில் தனது இரண்டரை ஆண்டு சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஷ்ய அதிபரையும் அவரது அரசின் ஊழலுக்கு எதிரான ஒரு அமைப்பைத் தொடங்கி அதன் மூலம் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவல்னி , திங்களன்று அவர் ஒரு உண்மையான சித்திர வதை முகாமில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் இரவில் ஒவ்வொரு மணி நேரமும் எழுந்து சிறைக் காவலரால் தான் படமாக்கப்படுவதாகக் கூறினார்.

மாஸ்கோவிலிருந்து சுமார் 100 கி.மீ தூரத்தில் ஒரு உண்மையானசித்திரவதை முகாமில் அடைக்கப்படுவேன் என்று நான் ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை என்று நவல்னி இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

# அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி பயன்பாட்டை நிறுத்துகின்றன

ஐரோப்பிய நாடுகளான டென்மார்க், நார்வே, பல்கேரியா, அயர்லாந்து மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் வரும் மார்ச் 29ம் தேதி வரை ஆக்ஸ்போர்ட் - அஸ்டிரா ஜெனேகா தடுப்பூசிகளை பயன்படுத்துவதற்கு தற்காலிக தடைவிதித்துள்ளது. இந்த தடுப்பூசிகளை போட்டுக்கொண்ட சிலருக்கு பக்க விளைவுகள் ஏற்படுவதாக தகவல் வெளியானதால் இந்த தடை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நார்வேயில் ஆக்ஸ்போர்ட் - அஸ்டிரா ஜெனேகா தடுப்பூசி போடப்பட்ட முதியவருக்கு ரத்தம் உறைந்ததாக தகவல் வெளியானதைத்த தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் இந்த தடை விதித்துள்ளது.

ஆனால் உலக சுகாதார அமைப்பு (WHO) தடுப்பூசி பயன்படுத்துவதை ஆதரித்துள்ளதுடன், இந்த தடுப்பூசிக்கும் ரத்தம் உறைதலுக்கும் சம்பந்தமில்லை என்று கூறியுள்ளது. ஐரோப்பிய மருத்துவ ஆணையம் இரத்தம் உறைதல் குறித்து மேற்கொண்ட ஆய்வில் தடுப்பூசியின் நன்மைகள் அதன் அபாயங்களை விட அதிகம் என தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம் (The European Medicines Agency EMA) ஒரு அறிக்கையில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி போட்டுக்கொண்டதால் பக்கவிளைவுகள் ஏற்பட்டதாக கூறுவதில் எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று கூறியது.

# கல்வி மேம்பாட்டுக்கான கனடிய அமைப்பு ( Education Foundation of Canada EFOC )





இலங்கையில் வடக்குகிழக்கு மலையகம் உட்பட பல பகுதிகளில் மாணவர் கல்வி முன்னேற்றத்திற்காக பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களினதும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களினதும் கல்வி மேம்பாட்டில் கூடுதல் கரிசனையுடன் இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது.

புலமைப்பரிசில் பரீட்சை க. பொ. த சாதாரணதரப் பரீட்சை க.பொ. த உயர்தரப்பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுடைய நலன்கருதி கருத்தரங்குகள் நடத்தி மாணவர்களை தெளிவூட்டுவதும் மாதிரி வினா விடை வகுப்புகளை நடத்தி மாணவர்களை தயார் படுத்துவதும் இந்த அமைப்பின் பெரும் களப்பணி ஆக இருக்கின்றது.

இதனைவிட கிராம மட்டங்களில் வாழ்வாதாரம் இழந்து கல்வியை கைவிடும் நிலையில் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தொடர்ச்சியாக உதவும் பணியிலும் செயல்பட்டு வருகிறது.

வறுமை நிலையிலும் உயர் கற்கை நெறிகளை தொடரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இந்த அமைப்பு உதவி வருகிறது. இதன் மூலம் ஏராமான பல்கலை மாணவர்கள் பல்கலைக்கழக கற்கை நெறிகளை பூர்த்தி செய்து பட்டதாரிகளாக வெளியாகியிருக்கின்றனர்.

இதனால் ஆயிரக்கணக்கான வறிய மாணவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

எமது அமைப்பு கனடிய அரசின் லாபநோக்கற்ற சட்டத்தின் கீழும் இலங்கையிலும் முறையாக பதிவு செய்யப்பட்ட ஒரு சமூக சேவை அமைப்பாகும். எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வி மேம்பாட்டு திட்டங்களில் சிலவற்றை இங்கே பட்டியலிடுகிறோம்.

கல்வித் திணைக்களங்கள் உடன் இணைந்து ZOOM செயலி மூலம் 1500க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கலை வர்த்தக பாடங்களை நடாத்துவதற்கான உதவித்தொகை வழங்கி வருவது

பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஆங்கில வகுப்புகளை நடாத்தி வருதல். மிகவும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளை தெரிவு செய்து அவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விசேட மேலதிக வகுப்புக்களை நடத்தி வருவது.

மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கில் அறநெறி வகுப்புக்களை நடத்துதல் உட்பட பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

**மேலதிக விபரங்களுக்கு:**
**efoc.ca**
**infoefoc.ca**

துளிர்
கல்முனைநெற் ஊடக வலையமைப்பின் 'பரிமாணம்' பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை வடக்கு பிரதேச செயலக ஊழியர்களுக்கான சிங்கள மொழி பயிற்சி நெறியின் இறுதி நிகழ்வு




கல்முனை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற உலக சிறுநீரக தின நிகழ்வு



காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மனாலய வருடாந்த பங்குனி உத்தர திருவிழா



சித்தாண்டி வேலோடுமலை முருகனாலய அலங்கார உற்சவப் பெருவிழா கொடியேற்ற நிகழ்வு

முன்பக்க தொடர்ச்சி...

## முஸ்லிம்களின் தேசப்பற்றில் பிற சமூகங்கள் சந்தேகம்!

ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏதோ ஒரு சில விஷமிகள் செய்த இந்த இழிசெயலுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் பழிதீர்க்கப் படும் ஆபத்தையே நாம் இன்று எதிர்கொள்கின் றோமென முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் எம்.பி. தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்தின் ஊடகவியலாளர்கள் நாட்டில் இன்று முஸ்லிம்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள தேவையற்ற இடைஞ்சல்கள், சந்தேகங்களை களையும் வகையில் பணியாற்ற முன்வர வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கட்சிக்காக அல்லது ஒரு தலைமைக்காக எழுதும் மன நிலைகள் ஊடகவியலாளர்களிடம் இருந்தது. இந்த மனநிலைகளைக் கை விட்டு, சமூகத்துக்காக எழுதும் வரலாற்றுப் பணிக்குள் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் வரவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

முன்பக்க தொடர்ச்சி...

## தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுவது காலக்கட்டாயம்

தமிழ்த்தேசியப்பரப்பிலுள்ள கட்சிகள் பிரிந்து நிற்காமல் ஒன்றுபடவேண்டும். நொந்துபோன எமது மக்களின் உரிமைகளுக்கு, அபிலாசைகளுக்கு நீதியான, நியாயமான அரசியல் தீர்வு கிடைக்கும்வரை இதயசுத்தியுடன் போராடவேண்டும்.

இவ்வாறு தமிழீழவிடுதலை இயக்கத்தின்(ரெலோ) புதிய செயலாளர் நாயகமாக அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட த.தே. கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

ரெலோ அமைப்பில் 39வருட கால அனுபவத்தைக்கொண்ட ஜனா, ரெலோவின் செயலாளர் நாயகமாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட பிற்பாடு , சமகால அரசியல்சூழல் பற்றி அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று ஆயுதப்போராட்டம் உச்சத்திலிருந்தபோது அதாவது தமிழ்மக்கள் பலமாகவிருந்த போது, 2001ஆம் ஆண்டில்உருவாக்கப்பட்டதுதான் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு. அந்தக்கூட்டமைப்பின்மீது தமிழ்மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள்.ஓரணியில் நின்றமைதான் அதற்கான காரணம்.

ஆனால் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டபிற்பாடு, இன்று தமிழ்மக்கள் பலவீனமடைந்துள்ளார்கள். எனவே இன்றையநிலையில் தமிழ்த் தேசியப்பரப்பிலுள்ள கட்சிகள் ஒன்றிணையவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அப்போதுதான் போதுமான பலம் கிடைக்கும்.பலமில்லாத இன்றையசூழலில் பலமாவதற்கு ஒற்றுமை என்ற ஆயுதம் கட்டாயம் தேவை.

தனிமனித கௌரவம் மற்றும் தனிக்கட்சிக்கௌரவத்தை மறந்துவிட்டு எல்லோரும் இணைந்தால் மட்டுமே மக்களுக்கான தீர்வு சாத்தியமாகும் என்றார்.

முன்பக்க தொடர்ச்சி...

## பிறரிடம் கையேந்தும் நிலை மாறவேண்டும்!

மக்கள் பிறரிடம் கையேந்தும் நிலை மாறவேண்டும் மக்களின் வறுமை நிலையினை போக்கவே அரசாங்கம் சமூர்த்தி திட்டத்தினை கொண்டு வந்தது, ஆனால் மக்களிடையே வறுமை இன்னும் மாறவில்லை. மாறாக சமூர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களே அதிகரித்து கொண்டு இருக்கின்றதென மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்ததார்.

மண்முனை வடக்கில் இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது;

மக்கள் தாமாக சுய தொழில்களில் ஈடுபட்டு தமக்கு தேவையான உற்பதிகளை பெருக்கிக் கொள்ள வேண்டும் மற்றவர்களிடம் கையேந்திக்கொண்டு எத்தனை காலம் தான் வாழ முடியும். எமது மாவட்டத்தில் ஏராளமான வளங்கள் காணப்படுகின்றது அதனை பயன் படுத்த தெரியாமல் நாம் வாழ்கின்றோம் அரசாங்கம் தரும் அதனை பெற்று தொடர்ந்து வாழ முடியாது. அதிகாரிகளுடன் மக்கள் ஒன்று இணைந்து சரியான திட்டமில் செய்ய வேண்டும் அப்போது தான் சரியான பொருளாதார வளர்ச்சியை பெற முடியும். இவ்வாறு மட்டக்களப்பு புது நகரில் இடம் பெற்ற ஜனாதிபதியின் தேசத்திற்கு வெளிச்சம் சுபீட்ச்சத்தின் நோக்கு எனும் திட்டத்தின் கீழ் சமூர்த்தி பயனாளிகளுக்கு மின்சாரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு இவ் வாறு தெரிவித்தார்.

முன்பக்க தொடர்ச்சி...

## தமிழ்ப்பிரதேச உள்ளூராட்சி சபைகள் புறக்கணிப்பு!

ஆளும் கட்சியின் ஆளுகைக்குள் இல்லாத அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேச உள்ளூராட்சிசபைகள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதாக காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கவலை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

அரசாங்கத்தினால் உள்ளூராட்சிசபைகளுக்கு வழங்கப்படும் நிதிஒதுக்கீடுகள், பாதை அமைப்புவேலைகள், அபிவிருத்திக்கானதிட்டங்கள்போன்ற பல்வேறு அம்சங்களில் த.தே. கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள தமிழ்ச்சபைகளுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுவருகிறது.

அரசின் நிதியொதுக்கீட்டில் ஒளிந்துகொண்டு மக்களுக்குப் பதிலாக தங்களை அபிவிருத்தி செய்துகொண்டு திரிகின்ற அமைப்பாளர்கள் தான்சார்ந்த சமுகத்தையிட்டு சிந்திக்க வேண்டும்.

அரசாங்கத்தின் சப்பிரிகம மற்றும் ஒருலட்சம்வேலைவாய்ப்பு திட்டங்களில் இவர்களின் கையூட்டல் செயற்பாடுகளால், வசதியற்ற ஏழைஎளியமக்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இத்தகைய அரசியல்பிழைப்பை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றார்.

முன்பக்க தொடர்ச்சி...

## 'பரிமாணம்' சிறக்க வாழ்த்துகள்

சென்று விட்டது நமது தமிழர் கூட்டம்.தொன்மைகளை விட்டுவிடாமலும் அதே நேரத்தில் இளைய சமுதாயத்தை உயர் நிலைக்குக் கொண்டு செல்ல, அவர்களது அறிவை விசாலப்படுத்துதல் அவசியம். அவ்வகையில் ஒரு மாபெரும் மாபெரும் கல்வியாளன் தோன்றிய மண்ணிலிருந்து, ஒரு கல்விசார் நெறியாளரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கல்முனை நெற்றின் 'பரிமாணம்' செய்திப்பத்திரிகை அச்சுப்பத்திரிகையாக வெளிவருவது காலத்தின் தேவையாகும்.

சுகநலத்தையும் நமது கலாசார விழுமியங்களையும், கலம்பகமான நடையழகும், நமது சமூகம் அரசியல்சார் நேர்காணல்களும் கொண்டு முத்தாய்ப்பான ஆசிரியர் தலையங்கத்தோடு மிளிர நமது பத்திரிகை நடைபோடுகிறது.சிறந்த தமிழும், நடுநிலையான பேனாவும் நமது சமூகத்தில் பல மாற்றங்களையும், விசாலமான அறிவுப் பெருக்கையும் வழங்க வேண்டும். கல்முனை நெற் இலங்கை முழுவதுமல்லாது , தமிழ் பேசும் சகலரையும் ஈர்க்கும் வண்ணம் முன்னேற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இறைபணியில்**
**சுவாமி நீலமாதவானந்தர்,**
**உதவி பொது முகாமையாளர்,**
**ராமகிருஷ்ண மிஷன்,**
**கல்லடி மட்டக்களப்பு**

முன்பக்க தொடர்ச்சி...

## கால மாற்றத்திற்கேற்ப தகவமைப்பு அவசியம்

இப்பத்திரிகையில் அவதானிக்க முடிகிறது.

இப்பத்திரிகை அச்சிதழாக கிழக்கின் அடையாளமான சுவாமி விபுலானந்தர் பிறந்த நாளன்று வெளிவருவதும் ஓர் அர்த்தம் தருகிறது. கிழக்கின் தனித்துவத்தை வெளிக்கொணர்ந்ததுடன் சாதி இமத இன பிரதேச பேதம் கடந்து மானுட குலத்தின் ஒற்றுமையை வேண்டியவர் சுவாமி அவர்கள்அவரையும் அவர் நோக்கையும் முன்னெடுக்கும் வகையில் கல்முனை நெட் செயற்பட வேண்டும். காலத்தின் தேவையும் அதுவே.

அவரது மாணவரான புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அன்று 'கிழக்குத்தபால்' எனும் அச்சுப்பத்திரிகை ஆரம்பித்தார். இன்றோ கணிணி யுகத்தில் 'கல்முனை நெட்' வெளிவருகிறது.காலத்தின் மாற்றத்திற்கேற்ப நம்மை நாம் தகவமைத்துகொள்ள வேண்டும்

இதன் பிரதம ஆசிரியர் வி.ரி. சகாதேவராஜா அவர்கள் . அவரை நான் 1990 களிலிருந்து அறிவேன். கலைஞர், எழுத்தாளர், செயற்பாட்டாளர், அயராத உழைப்பாளி. அவருக்கு நாம் ஆதரவு வழங்குவோம்

ஒரு பத்திரிகை அல்ல. பல பத்திரிகைகள் கிழக்கில் தோன்றட்டும், வாழ்த்துகள்.

**பேராசிரியர் சி.மௌனகுரு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடுகளம்

மோ.கபிலன், செ.சிந்துஜன்
kapilankapil1097@gmail.com



# டொல்பின் விளையாட்டுக்கழகம் கல்முனை





மாதம் ஒரு கழகத்தின் செயற்பாடுகள் வரலாறுகளை வெளிப்படுத்தி ஊக்கப்படுத்தும்வகையில் ஆடுகளம் பக்கத்தில் உள்ளூர் கழகங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றோம்.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள பிரபல்யமான விளையாட்டுக்கழகங்களில் ஒன்றான டொல்பின் விளையாட்டு கழகம் தொடர்பாக பார்வையை செலுத்வோம்.

மணல்ச்சேனை விளையாட்டு கழகம் (MSC) என்ற பெயரில் Volleyball கழகமாக 1985 ம் ஆண்டில் கல்முனை மணல்ச்சேனை கிராமத்தில் ஆரம்பமாகி 199394 ம் ஆண்டுகளில் கல்முனை டொல்பின் விளையாட்டு கழகமாக மாற்றம் பெற்று இயங்கத்தொடங்கியது. அப்போது கழகத்தின் தலைவராக கே.எம்.ஜெயந்தவும், கழக போசகராக திரு.அவுட்ஸ்கோன் ஆகியோர் வழிநடத்தியுள்ளனர்.

1995ம் ஆண்டுக்கு பின்னர் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தை அன்றைய பாடசாலை அதிபர் அருட் சகோதரர் எஸ்.ஏ.ஜ .மத்தியுவின் அனுமதியுடன் தளமாக கொண்டு இயங்க தொடங்கினர்.

அப்போது கழக தலைவராக ஏ.பிரதீபன் கழக போசகராக அருட் சகோதரர் எஸ்.ஏ.ஜ மத்தியு இருந்துள்ளனர்.

1996 ம் அண்டுக்கு பின்னராக கழகத்தின்



### கழகத்தின் கடந்தகால தலைவர்கள்

| | |
|---|---|
| திரு.ஜெயந்த | (1993/1994) |
| திரு.ஏ.பிரதீபன் | (1995/1998) |
| திரு.நாகராஜா | (1999/2001) |
| திரு.கிருஷாந் | (2002/2004) |
| திரு.வின்ஸ்லோ | (2005/2006) |
| திரு.பிறேமதாஸ | (2007/2009) |
| திரு.சிறீரங்கன் | (2010/2011) |
| திரு.கணேசானந்தம் | (2012/2014) |
| திரு.ரி.பிரதீபன் | (2015/2016) |
| திரு.ரசிதரன் | (2017/2018) |
| திரு.சபேஷ் | (2019/2020) |

### தற்போதைய தலைமை நிர்வாகம் 2021/2022

திரு.கீர்த்தனன் தலைவர்
திரு.கிரிஷாந் உப தலைவர்
திரு.தனுஜன் செயலாளர்
திரு.டிருஷாந் உப செயலாளர்
திரு.ஜீவிதன் பொருளாளர்
திரு.சபேஷ் முகாமையாளர் (நிர்வாகம்)
திரு.ஜெகநாத் முகாமையாளர்(விளையாட்டு)
திரு.நிஷாந்தன் (ஒருங்கிணைப்பாளர்)
திரு.ரசிதரன் (IT)
திரு.ஜெயந்த

போசகர்களாக கமு/கா.ப.தே.பாடசாலை அதிபர்கள் இருப்பது வழமையும் இன்றியமையாததுமாக காணப்படுகின்றது.

கமு/கா.ப.தே.பாடசாலை விளையாட்டு மைதானத்தை தளமாக கொண்டு இயங்குவதால் பெரும்பாலும் அந்த பாடசாலை பழைய மாணவர்களும், கல்வி கற்கும் மாணவர்களும் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.இம் மாணவர்களை விளையாட்டுத்துறையில் வளப்படுத்துவதோடு பாடசாலை செயல்பாடுகளுக்கும் பக்கபலமாக கழகம் உள்ளது.

கழகத்தின் யாப்பின் பிரகாரம் கழக தலைமை நிர்வாகமான தலைவர் ,செயலாளர்,பொருளாளர் போன்ற பொறுப்புக்கள் கமு/கா.ப.தே.பா பழைய மாணவர்களே உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

1997/98 ம் ஆண்டுகளில் இலங்கை மென்பந்து கிரிக்கட் சம்மேளத்தில் பதிவு செய்யப்பட்டு மாவட்ட ரீதியான கிரிக்கட்



சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்று அகில இலங்கை ரீதியாக தலைநகர் கொழும்பு சென்று விளையாடிய அம்பாறை மாவட்டத்தின் முதலாவது தழிழ் விளையாட்டுக்கழகம் என்ற பெருமைக்குரியதாக இக் கழகம் உள்ளது.

2000 / 2002 ம் ஆண்டு காலப்பகுதியில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கிரிகட்டில் சுமார் 15 க்கு மேற்பட்ட வெற்றிக்கிண்ணங்களை தொடர்ச்சியாக சுற்றுப் போட்டிகளில் அணி சுவீகரித்திருந்தமை சிறப்பம்சமாகும்.

2007 ம் காலகட்டத்தில் 10 க்கு மேற்பட்ட வெற்றிக்கிண்ணங்கள் தொடராக பெறபட்டும் இருந்தன.



விளையாட்டோடு மட்டுமல்லாது சமூகப்பணிகளாக.. சிரமதானங்கள்,கல்வி முன்னேற்ற செயற்பாடுகள், இரத்ததானங்கள், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்ப மாணவர்களுக்கு போஷாக்கான உணவுகள், அவசரகாலங்களில் பொது மக்களுக்கான நிவாரணப்பணிகள் பிரதேசம், மாவட்டம் தாண்டியும் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்கின்றன.

### விஷேட செயற்பாடு


1997/98 காலப்பகுதியில் அம்பாறை மாவட்டம் சார்பாக இலங்கை கிரிகட் சம்மேளத்தின் கிரிகட் சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து முதன் முதலாக பங்குபற்றிய தமிழ் கழகம்

1999/2000 ம் ஆண்டு காலப்பகுதியில் அனைத்து வளங்களையும் கொண்ட கிரிகட் கடின பந்து அணி உருவாக்கம் (இந்த முன்னேற்றத்திற்கு அப்போதைய தலைவர் திரு.நாகராஜா ,பொருளாளர் திரு.பிறேமதாஸ ,செயலாளர் திரு.உதயகுதார் பெரும் பங்காற்றி இருந்தனர்)

### சாதனைக்குரிய அணித்தலைவர்களாக செயல்பட்டவர்கள்

திரு. ஏ.பிரதீபன் – 2001/2002 காலப்பகுதியில் தொடர்களில் தொடர்ந்து 15 க்கு மேற்பட்ட முதல் வெற்றிக்கிண்ணங்கள் அம்பாறை /மட்டக்களப்பு மாவட்டங்களில் பெற்றது.

2007/2009 ம் ஆண்டு காலப்பகுதிகளில் 10 ற்கு மேற்பட்ட வெற்றிக்கிண்ணங்கள் தொடர்ச்சியாக பெற்றது.அணித்தலைவர் திரு.ஜெகநாத் 2015/2016 ற்கு பிறகு குறிப்பிட்ட சிறப்பான பெரு வெற்றிகளை கழகத்திற்கு பெற்று தந்தவர் அணித் தலைவர்கள் திரு.உமாகரன்,திரு.கஜன் SO meet,YSO meet மட்டங்களுக்கிடையிலான போட்டிகளில் பிரதேச மட்டத்தில் பல தடவைகள் சம்பியனாகி மாவட்ட மட்டங்களில் பங்குபற்றியுள்ளது. கழகம் பொதுசேவைகளல் ஏனைய பொது அமைப்புக்களுடன் கைகோர்த்து அவர்களையும் இணைத்து, ஊக்கப்படுத்தி செயற்படும் பல்வேறு பணிகளை தொடர்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கல்முனை மாநகரில்

**கோலாகல திறப்புவிழா**

கிழக்கு இலங்கையின் கல்முனை மாநகரில் பாரம்பரிய இந்திய, சைவ சுவை உணவின் ராஜகிரீடம்

**"கலைவாணி விலாஸ்"**

**கோலாகலமாக திறந்து வைக்கப்படவிருக்கிறது**

இன்றைய காலத்தின் தேவை நோய்களிலிருந்து மனிதன் விலகி வாழ்வதற்கு உணவுகளில் அதிக கவனத் தேவையினை உணர்ந்து பாரம்பரிய உணவுகளை தானிய உணவு, மூலிகை உணவு வகைகளை தயாரித்து வழங்குவதற்காக மிகவும் அனுபவம் வாய்ந்த இந்திய சமையல் கலை நிபுணர்களைக் கொண்டு திறந்து வைக்கப்பட இருக்கிறது.

**எமது நிறுவனத்தில்**

- தானிய தோசை வகைகள்
- மூலிகை கறிவகைகள்
- ஆயுர்வேத முறை தேனீர் வகைகள்
- குரக்கன் பிட்டு
- சிவப்பு இடியப்பம்
- மரக்கறிப்பிட்டு
- தானிய ரொட்டி
- பழவகை பானங்கள்

என உடல் நலத்துக்கு உகந்த உணவுகள் இங்கே பெற்றுக்கொள்ளலாம்

**ஆரம்பம் : 24.03.2021 ம் திகதி புதன்கிழமை**

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**"கலைவாணி விலாஸ்"**
இல : 200 பிரதான வீதி , கல்முனை
தொ.பே.இல : 067 22 22 545, 075 22 22 271
(அமட் அலி வைத்தியசாலைக்கு முன்னால்)

உடல் நலத்துக்கும் நோய்தடுப்புக்கும் நாம் உண்ணும் உணவு இன்றியமையாத ஒன்று என்பதை நன்கு கருத்தில் கொண்டு. எமது உணவுகள் தயார் செய்யப்படவிருக்கின்றது.

தானிய, மூலிகை சைவ உணவுகளின் நன்மைகளை உணர்ந்திட எமது உணவகத்தில் தொடர்ச்சியாக உண்டு . உங்கள் உடல் நலத்தில் ஏற்படும் மாற்றங்களை நீங்களே உணர்ந்திடுங்கள்

"சுகமாய் வாழ்வோம் - சுதந்திரமாய் இருந்திடுவோம்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

067 22 22 545, 075 22 22 271













**STUDIO 96**
Wedding | Birthday | Events Photography
Location - Kalmunai,Batticaloa
Contact - 075- 456 18 78





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Main Street, Pandiruppu , Kalmunai. on Saturday , March 27,2021.